விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 மாசி 04 சனிக்கிழமை (16.02.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 059

Dishtv
பழைய Dishtv ரிஸீவர்க்கு பதிலாக புதிய ரிஸீவர் 700/= மட்டுமே
SATS-TECH
சாட்ஸ் ரெக் இன்ஜினியர்ஸ்
இல. 56/15 ஸ்ரான்லி வீதி ஒழுங்கை,
(பழைய தபால் கந்தோர் வீதி,
யாழ்ப்பாணம்.)
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160
(C-5441)

## வடக்கை கட்டியெழுப்ப வேண்டிய தேவை உள்ளது

# யுத்தத்தை மறந்து, மன்னித்து முன்னோக்கி செல்ல வேண்டும்

## கிளிநொச்சியில் பிரதமர் ரணில் அழைப்பு

**(கிளிநொச்சி) வடக்கை கட்டியெழுப்ப வேண்டிய தேவை உள்ளது என கிளிநொச்சியில் தெரிவித்த பிரதமர் ரணில், யுத்த கால விடயங்களை மறந்து, மன்னித்து முன்னோக்கி செல்ல வேண்டும். மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவோம் என அழைப்பு விடுத்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது. அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

மாகாண சபைகளுக்கு 24



## விக்னேஸ்வரனுக்கு எதிரான மனு எதிர்வரும் 21-ம் திகதி

(கொழும்பு)

நீதிமன்றத்தை அவமதித்ததாக கூறி வட மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை எதிர்வரும் 21ம் திகதி அழைப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த மனு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி குமுதுனி விக்கிரமசிங்க முன்னிலையில் 24

## சாவகச்சேரியில் இளைஞன் மீது கத்திக்குத்து

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நுணாவில், மட்டுவில் வீதியில் வைத்து இளைஞர் ஒருவர் மீது கத்திக்குத்து நடத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. குறித்த வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது பிறிதொரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் 24

### வடக்கில் உள்ள அதிகாரிகள்

## அசமந்த போக்குடன் செயற்படுகின்றனர்

### பிரதமர் ரணில் விசனம்

(கிளிநொச்சி)

வடக்கில் உள்ள அரச அதிகாரிகள் பலரும் அசமந்த போக்குடன் செயற்படுவதாக பிரதமர் ரணில் விக்கிரசிங்க விசனம் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபை கதிரைகளை சும்மா வைத்திருப்பதாகவும் அவர்களால் எதையும் செய்ய முடியாது 23

## ஜெனிவா மாநாட்டில் த.தே.கூட்டமைப்பும் கலந்து கொள்ளும்

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் குழு ஒன்று இந்த முறை ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் 40வது மாநாட்டில் கலந்துக் கொள்ளும் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த மாதம் 25ம் திகதி ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவை மாநாடு ஆரம்பமாகவுள்ளது.

இதற்காக பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் தலைமையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் குழு ஒன்று 24

## தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு என்பது

### மகிந்தவின் அரசியல் பிரசாரம் ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு என்பது எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷவை பொறுத்தவரையில் ஒரு அரசியல் பிரசாரமே என ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கவிந்த ஜயவர்தன குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசியல் தீர்வு தொடர்பாக பொய்யான வாக்குறுதிகளை குறிப்பிட்டு தமிழ் மக்களையும், சர்வதேசத்தை 23

### யாழ் பயணத்தின் போது

## கைபேசியை பறிகொடுத்த பிரதமரின் செயலர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வந்திருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளரின் கைத்தொலைபேசி திருடப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் விபத்து 23

## தலைமன்னார், காங்கேசன்துறையிலிருந்து தமிழ்நாட்டுக்கு கப்பல் சேவை நடைபெறும்

### மன்னாரில் பிரதமர் ரணில் தெரிவிப்பு

(மன்னார்)

தலைமன்னாரிலிருந்து தமிழ் நாட்டுக்கான கப்பல் சேவையையும் இவ்வாறு காங்கேசன்துறையிலிருந்து தமிழ் நாட்டுக்கான கப்பல் சேவைகளையும் நடத்த இருக்கின்றோம் என்ற நற்செய்தியை உங்களுக்கு இவ்விடத்தில் கூறிக்கொள்வதுடன் மன்னார், யாழ்ப்பாணம் ஒரு சுற்றுலா மையமாக அமைய இருக்கின்றது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாட நேற்று வெள்ளிக்கிழமை 23



### இரண்டு வாரங்களில்

## கசிப்பு ஒழிப்பு நடவடிக்கை

### ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

இரண்டு வாரங்களில் நாட்டில் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கையை ஆரம்பிக்கவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாட்டிலிருந்து கசிப்பை முற்றாக ஒழித்து, கசிப்பு இல்லாத நாட்டை உருவாக்குவதற்கு விசேட 24

## கிளிநொச்சியில் சிறீதரனே அடிக்கல் நாட்ட வேண்டும்

### அடிக்கல்லை தட்டிலிருந்து எடுத்து பிரதமரே சிறீதரனிடம் கொடுத்தார்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கான இரண்டாம் கட்ட அபிவிருத்திப் பணிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று 24

## பொய் வாக்குறுதியை ரணில் விக்கிரமசிங்க வழங்குகிறார்

### மகிந்த அணியினர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தல்களில் வெற்றி பெறுவதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பொய்யான வாக்குறுதிகளை இளைஞர்களுக்கு வழங்க ஆரம்பித்துவிட்டார் என நாடாளுமன்ற உறுப்பினர் டி.பி. சானக தெரிவித்துள்ளார். 23

### பொலிஸாரின் நேரடி ஆதரவுடன்

## புத்தர் சிலை நிறுவ தொல்பொருள் திணைக்களம் துணை போகிறது!

(கொழும்பு)

திருகோணமலையில் புத்தர் சிலை நிறுவப்பட்டமைக்கு தொல்பொருள் திணைக்களம் துணை போவதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பாராளுமன்ற வளாகத்தில் சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் நடைபெற்ற மத நல்லிணக்க தெரிவுக்குழு கூட்டத்தின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், பொலிஸாரின் நேரடி ஆதரவுடனேயே திருகோணமலை தென்னமராவடியில் புத்தர் சிலை அமைக்கப்பட்டுள்ளதாக 24

## வீடு தேவை

பருத்தித்துறையில், வியாபாரிமூலை, திக்கம், சக்கோட்டை, இன்பருட்டி பகுதியில் வீடு வாடகைக்கு அல்லது விலைக்குத் தேவை.

(C-5527)

**T.P : 077 727 1697**


## தண்ணீர் பவுசர் மோதியதில் பெண் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

படையினரின் தண்ணீர் பவுசர் மோதியதில் உந்துருளியில் பயணித்த பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மிருசுவில் மருத்துவமனைக்கு முன்பாக முதன்மைச் சாலையில் மாலை 4.30 மணியளவில் இடம் பெற்றது. கொடிகாமத்திலிருந்து மிருசுவில் நோக்கி சென்று கொண்டிருந்த உந்துருளியை பின்னால் சென்ற படையினரின் தண்ணீர் பவுசர் மோதியதென தெரிவிக்கப் பட்டது. வசந்தராசா சறோஜாதேவி (52 வயது) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இவர் மிருசுவில் நோயாளர் காவு வண்டி மூலம் சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-10)


## கண்ணீர் அஞ்சலி

### தம்பையா வேலுப்பிள்ளை



எமது வித்தியாலயத்தின் சங்கீத ஆசிரியை
திருமதி ஜெயகௌரி முகுந்தன்
அவர்களின் அன்புத் தந்தையான

**தம்பையா வேலுப்பிள்ளை**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு
துயரடைவதுடன் எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா
சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாடசாலைச் சமூகம்
யா/உயரப்புலம் மெ.மி.வித்தியாலயம்
ஆனைக்கோட்டை.

(7542)



## கண்ணீர் அஞ்சலி

### அமரர் சோமசுந்தரம் கிருஸ்ணபிள்ளை



தோற்றம் : 17.06.1940 மறைவு : 15.02.2019

எமது பிரதேசசெயலக அபிவிருத்தி
உத்தியோகத்தர் கிருஸ்ணபிள்ளை ஐங்கரன்
அவர்களின் பாசமிகு தந்தையார்.

**அமரர் சோமசுந்தரம் கிருஸ்ணபிள்ளை**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்
களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயருடன்...
பிரதேசசெயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும்,
ஊழியர் நலன்புரிச்சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை.

(C-5526)







## அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்த நடவடிக்கை எடுப்பு



(கொழும்பு)

சகல அரச நிறுவனங்களையும் கணனி மயப்படுத்துவதற்குரிய வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. அமைச்சர் சுஜீவ சேனசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சிற்கு உட்பட்ட நிறுவனங்களுக்கு புதிய தலைவர்களை நியமிக்கும் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அரச நிறுவனங்களை கணனிமயப் படுத்துவதன் ஊடாக நிறுவனங்களின் செயற்திறனை அதிகரிக்க முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ம-3)

## ஜனாதிபதியின் நிகழ்வில் துப்பாக்கி ரவையுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

சிறிபுர-நுவரகல பகுதியில், சந்தேகத்துக்கிடமான வகையில், தனது பணப்பையில் துப்பாக்கி ரவையின் பாகங்களை வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில், நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது சந்தேகத்துக்கிடமான வகையில், தனது பணப்பையில் வெடிக்கும் நிலையில் இருக்கும் வெடிபொருட்களின் பாகங்களை வைத்திருந்த நபரொருவரை ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர். (ம-3)


## விற்பனைக்கு

அல்வாய் தெற்கு முல்லாவத்தையில் குழாய்க்கிணறுடன் 10 பரப்பு காணியும் அதற்கு அண்மையில் உள்ள 3 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு. முரசு மோட்டையில் 40 பனைகள் கொண்ட 5 ஏக்கர் வயலும், வளவும் விற்பனைக்கு உண்டு.

தரகர் தேவையில்லை
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

**தொடர்பு : 024 312 7721**

## தேசிய ஒருமைப்பாட்டை என்னால் முன்னெடுக்க முடியாது

# "வரலாற்றை திரிக்க வேண்டாம்"

### தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளரிடம் அமைச்சர் மனோகணேசன் காட்டம்

(கொழும்பு)

"வடக்கு-கிழக்கில் காணக்கிடக்கும் பௌத்த சின்னங்கள் எல்லாமே, சிங்கள பௌத்த சின்னங்கள் என முடிவு செய்ய வேண்டாம். 2.3ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்திலும், வட கிழக்கிலும் தமிழர் மத்தியில் பௌத்தம் பரவி விரவி இருந்தது என்பது வரலாறு.

ஆகவே இந்நாட்டின் வரலாறு ஒரு இனமதத்துக்கு மாத்திரம் சொந்தமானது என தீர்மானிக்க வேண்டாம்.

அப்படியானால் இந்நாட்டில் தேசிய ஒருமைப்பாட்டை என்னால் முன்னெடுக்க முடியாது" என தொல்பொருளாராய்ச்சி திணைக்கள பணிப்பாளர்-நாயகம் பேராசிரியர் மண்டாவெலவிடம், பாராளுமன்ற வளாகத்தில் சபாநாயகர் கருஜெயசூரிய தலைமையில் நடைபெற்ற மத நல்லிணக்க தெரிவுக்குழு கூட்டத்தின்போது தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.



சபாநாயகர் கருஜெயசூரிய, முஸ்லிம் விவகார அமைச்சர் ஹலீம், கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க, திருகோணமலை பிரதேச பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் அமைச்சர் மனோ கணேசனும், தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும், தொல்பொருளாராய்ச்சி திணைக்கள பணிப்பாளர்-நாயகம் பேராசிரியர் மண்டாவெலவிடம் சாரமாரியாக கேள்விகளை எழுப்பினர்.

தொல்பொருளாராய்ச்சி திணைக்களத்தில் உருப்படியான தமிழ் தொல்பொருளாராய்ச்சியாளர் கிடையாது. வடக்கு- கிழக்கில் கண்ட கண்ட இடங்களில் எல்லாம் புத்தர் சிலை வைக்க நீங்கள் வழி செய்கிறீர்கள்.

உங்களுக்கு தமிழ் பௌத்தர்களை பற்றி தெரியுமா? இரண்டாம், மூன்றாம் நூற்றாண்டுகளில் இலங்கையின் வடக்கு- கிழக்கிலும், தென்னிந்தியாவிலும் வாழ்ந்த தமிழர்கள் பௌத்த சமயத்தை தழுவி இருந்தார்கள்.

இன்று நீங்கள் வடக்கு-கிழக்கில் எங்கேயாவது பௌத்த சின்னங்களை காணுவீர்கள் என்றால் அது, தமிழ் பௌத்த சின்னங்கள்.

அதை சிங்கள பௌத்த சின்னங்கள் என்று கூறி அத்துமீறிய குடியேற்றம் செய்கிறீர்கள்.

அடாத்தாக பௌத்த தேரர்களை அழைத்து சென்று புதிய விகாரைகளை கட்ட உதவுகிறீர்கள். திருகோணமலை, திருக்கேதீஸ்வரம் ஆகியவை தமிழ் சைவ தேவார பாடல்களில் இடம்பெற்ற தலங்கள். இவற்றின் கட்டுமான பணிகளுக்கு தடை போடுகிறீர்கள்.

வவுனியாவில் வெடுக்குநாறி மலை மீதான கோவிலுக்கு போகும் மலைப் பாதை படிக்கட்டுகளை அமைக்க தடை போடுகிறீர்கள். அப்படியானால் எப்படி சிவனொளி பாதமலைக்கு படிக்கட்டுகளை அனுமதித்தீர்கள்? நான் தேசிய ஒருமைப்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சர்.

உங்கள் திணைக்களம் இப்படி நடந்துகொண்டால் எனக்கு இந்நாட்டில் தேசிய ஒருமைபாட்டை ஏற்படுத்த முடியாது. இவைபற்றி நான் இனி கடுமையாக இருக்க போகிறேன் என அமைச்சர் மனோகணேசன் தொல்பொருளாராய்ச்சி திணைக்கள பணிப்பாளர்-நாயகம் பேராசிரியர் மண்டாவெலவிடம் கூறினார்.

திருகோணமலையில் பொலிஸாரின் நேரடி ஆதரவுடனேயே திருகோணமலை தென்னமரவாடியில் புத்தர் சிலை வைக்கப்பட்டது.

அந்த சிலை வைப்புக்கு தொல்பொருளாராய்ச்சி திணைக்களம் துணை செய்கிறது.

இதை நாம் அனுமதிக்க முடியாது. நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறும் சமயத்தில் எப்படி ஒரு பௌத்த தேரர் அங்கே புத்தர் சிலையை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார் என தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், தொல்பொருளாராய்ச்சி திணைக்கள பணிப்பாளர்-நாயகம், திருகோணமலை பிரதேச பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரிடம் கேள்வி எழுப்பினார். (இ-7)

## பயங்கரவாதிகளின் தாக்குதல் மிகவும் வருத்தமளிக்கின்றது

### ஜனாதிபதி மைத்திரி கண்டனம்

(கொழும்பு)

ஜம்மு- காஷ்மீரில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதல் மிகவும் வருத்தமளிப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



ஜம்மு- காஷ்மீரில் மத்திய ஆயுத பொலிஸ் படை வீரர்கள் சென்ற வாகனத் தொடரணி மீது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த வீரர்களின் எண்ணிக்கை 44 ஆக அதிகரித்துள்ளது.


இந்நிலையில் உலக நாடுகளில் இருந்து பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டு வருகின்ற நிலையில் ஜனாதிபதி மைத்திரியும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவர் "இத்தகைய கொடூரமான பயங்கரவாத தாக்குதல்களுக்கு உலக நாடுகள் கண்டனம் தெரிவிக்க வேண்டும்.

எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்களைத் தடுக்க சிறப்பான நடவடிக்கை எடுக்க வேண்டும்" எனக் கோரியுள்ளார். (இ-7)

## மிருகத்தனமான தாக்குதலை நான் கடுமையாக கண்டிக்கிறேன்

### பிரதமர் ரணில் கொதிப்பு



(கொழும்பு)

ஜம்மு- காஷ்மீரில் மத்திய ஆயுத பொலிஸ் படை வீரர்கள் சென்ற வாகனத் தொடரணி மீது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

விடுமுறை முடிந்து மீண்டும் பணியில் இணைவதற்காக 2500 இற்கும் மேற்பட்ட வீரர்கள் 78 வாகனங்களில் தொடரணியாகச் சென்று கொண்டிருந்தபோது இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் உயிரிழந்த வீரர்களின் எண்ணிக்கை 44 ஆக அதிகரித்துள்ளது. இந்த தாக்குதல் தொடர்பாக பிரதமர் மோடி தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

இந்நிலையில் இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, " காஷ்மீரின் புல்வாமா மாவட்டத்தில் நடந்த மிருகத்தனமான பயங்கரவாத தாக்குதலை நான் கடுமையாக கண்டிக்கிறேன்.

இதற்கு முன்னர் 1989 இல் ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலத்தில் பயங்கரவாத தாக்குதல் நடந்தது. இந்த தாக்குதலில் உயிரிழந்த அதிகாரிகளின் குடும்பங்களுக்கு என் இரங்கலை தெரிவிக்கின்றேன்" என தெரிவித்துள்ளார்.

இதேவேளை அமைச்சர் சாகல ரத்நாயக்கவும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## புத்தளத்தில் பூரண ஹர்த்தால்





(புத்தளம்)

புத்தளம்- அருவக்காடு பகுதியில், கொழும்பு குப்பைகளைக் கொட்டும் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, புத்தளத்தில் நேற்றுப் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இதனால் புத்தளம் நகரின் இயல்பு நிலை முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளது.

இன, மத, மொழி பேதங்கள் கடந்து சர்வமத சம்மேளனத்தின் கீழ், பௌத்த மத்திய நிலையம், கிறிஸ்தவ சபை, இந்து மகாசபை, புத்தளம் மாவட்ட ஜம்மியயதுல் உலமா, புத்தளம் பெரிய பள்ளி மற்றும் க்ளீன் புத்தளம் அமைப்பு என்பன புத்தளத்தில் கூட்டாக தொடர்ந்து மூன்று தினங்களை கறுப்பு தினங்களாக அனுஷ்டிக்க அழைப்பு விடுத்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராட அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

### எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த அழைப்பு

(கொழும்பு)

ஜம்மு-காஷ்மீரில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ கண்டனம் வெளியிட்டுள்ளார்.

"நான் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு என் மனப்பூர்வமான இரங்கலை தெரிவிக்கிறேன்.

பயங்கரவாதத்தை எதிர்த்து போராட அனைத்து நாடுகளும் ஒன்றிணைய




வேண்டும் " என மகிந்த தெரிவித்துள்ளார்.

ஜம்மு- காஷ்மீரில் மத்திய ஆயுத பொலிஸ் படை வீரர்கள் சென்ற வாகனத் தொடரணி மீது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த வீரர்களின் எண்ணிக்கை 44 ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில் பல நாடுகளில் இருந்து கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ராகுல் 'வாய்ப்பு'... கார்த்திக் 'மறுப்பு' இந்தியா 'அறிவிப்பு'



ராகுல்

அவுஸ்திரேலியதொடருக்கான இந்திய அணி அறிவிக்கப் பட்டது. ஒருநாள் போட்டிக்கான அணியில் லோகேஷ் ராகுல் இடம் பெற்றார். தினேஷ் கார்த்திக்கிற்கு வாய்ப்பு மறுக்கப்பட்டது.

இந்தியா செல்லும் அவுஸ்திரேலிய அணி, அங்கு இரண்டு 'ரி20', ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. இதில் பங்கேற்கும் இந்திய அணித் தேர்வு நேற்று நடைபெற்றது.

உலக கிண்ணத் தொடரை (வரும் மே 30, லண்டன்) கணக்கில் கொண்டு 'ரிஸ்க்' எடுக்காமல் வழக்கமான வீரர்களுடன் இந்திய அணி களமிறங்குகிறது. நியூசிலாந்து தொடரில் கடைசி ஐந்து போட்டிகளில் ஓய்வில் இருந்த ஹோலி மீண்டும் தலைவராக திரும்புகிறார். ரோகித் சர்மா, ஷிகர் தவான், அம்பதி ராயுடு, கேதர் ஜாதவ் இடம்பிடித்தனர்.

**ராகுல் வாய்ப்பு**

அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடரில் மோசமான 'போர்ம்' காரணமாக பாதியில் கழற்றி விடப்பட்ட லோகேஷ் ராகுல், சமீபத்திய இங்கிலாந்து லயன்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் அசத்தியதால், 'ரி20', ஒருநாள் அணியில் சேர்க்கப்பட்டார். இவர் மூன்றாவது தொடக்க வீரராக இடம் பெற்றார். 'சீனியர்' விக்கெட் காப்பாளர் தோனிக்கு மாற்றாக இளம் ரிஷாப் பன்ட் தேர்வாக, தமிழகத்தின் தினேஷ் கார்த்திக்கிற்கு இடமில்லாமல் போனது.

**மீண்டும் பும்ரா**

ஓய்வில் இருந்த வேகப் பந்து வீச்சாளர் பும்ரா, மொஹமட் ஷமியுடன் அணியில் இடம் பிடித்தார். புவனேஷ்வருக்கு மட்டும் முதல் இரு ஒருநாள் போட்டியில் ஓய்வு கொடுக்கப்பட்டது. கலீல் அகமட், மொஹமட் சிராஜ்க்கு 'கல்தா' கொடுக்கப்பட்டது. உனத்கட் இடம் பெறுவார் என எதிர்பார்த்த நிலையில் சித்தார்த் கவுல் அணிக்கு தேர்வானார் மயங்க் மார்க்கண்டே அறிமுக வாய்ப்பு பெற்றார்.

**உலக கிண்ண சோகம்**

சமீபத்திய போட்டிகளில் துடுப்பாட்ட வீரர் என்ற அடிப்படையில் இடம்பெற்றவர் தமிழக விக்கெட் காப்பாளர் தினேஷ் கார்த்திக். பின்வரிசையில் களமிறங்கி 'பினிஷிங்' செய்து வந்தார்.

எப்படியும் 2ஆவது விக்கெட் காப்பாளர் என்ற அடிப்படையில் இடம்பெறுவார் என நம்பப்பட்டது.

ஆனால் இவரது இடத்தை ரிஷாப் பன்ட் தட்டிச் சென்றுள்ளார். அவுஸ்திரேலிய ஒருநாள் தொடருக்கான இந்திய அணியில் தினேஷ் கார்த்திக் சேர்க்கப்படவில்லை. இதனால் வரும் உலக கிண்ணத் தொடருக்கான அணியில் இவர் இடம்பெறுவது சந்தேகம்தான்.

ஏற்கெனவே அஷ்வினும் இல்லாத நிலையில் விஜய் ஷங்கர் மட்டும் அணியில் உள்ளார். இவரது இடத்துக்கும் ஹர்திக் பாண்ட்யா போட்டியிடுகிறார்.

**புதுமுகம் மயங்க்**

பஞ்சாப்பை சேர்ந்த இளம் சுழற் பந்து வீச்சாளர் மயங்க் மார்க்கண்டே (வயது-21) ஐ.பி.எல்., தொடரில் மும்பை அணிக்காக விளையாடுகிறார். சமீபத்திய இங்கிலாந்து லயன்ஸ் அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில் சிறப்பாக செயற்பட்டார். அடுத்து நடந்த 2ஆவது டெஸ்டில் இரண்டாவது இன்னிங்சில் 5 விக்கெட்டுக்கள் வீழ்த்தி, இந்திய 'ஏ' அணிக்கு தேர்வு செய்ததால், சிறப்பாக விளையாடி வந்த தினேஷ் கார்த்திக் வெளியே தள்ளப்பட்டுள்ளார்.

**ஒருநாள் அணி (முதல் 2 போட்டி)**

ஹோலி (அணித் தலைவர்), ரோகித் சர்மா (துணைத் தலைவர்), ஷிகர் தவான், அம்பதி ராயுடு, கேதர் ஜாதவ் , தோனி, ஹர்திக் பாண்ட்யா, பும்ரா, மொஹமட் ஷமி, சகால், குல்தீப், விஜய் ஷங்கர், ரிஷாப் பன்ட், சித்தார்த் கவுல், லோகேஷ் ராகுல்.

**கடைசி 3 ஒருநாள்போட்டிக்கான அணி**

ஹோலி (அணித் தலைவர்), ரோகித் (துணைத் தலைவர்), தவான், அம்பதி ராயுடு, கேதர் ஜாதவ் , தோனி, ஹர்திக் பாண்ட்யா, பும்ரா, புவனேஷ்வர் குமார், சகால், குல்தீப், ஷமி, விஜய் ஷங்கர், ரிஷாப் பன்ட், லோகேஷ் ராகுல்.



**இது சரியா?**

அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடரில் 4 இன்னிங்களில் 2, 44, 2, 0 என 48 ஓட்டங்கள் மட்டும் எடுத்தவர் லோகேஷ் ராகுல். மோசமான 'போர்ம்' காரணமாக கழற்றி விடப்பட்ட இவர், தனியார் 'ரிவி' நிகழ்ச்சியில் பெண்கள் குறித்து அவதூறாக பேசி 'சஸ்பெண்ட்' ஆனார்.

சமீபத்தில் இங்கிலாந்து லயன்ஸ் அணிக்கு எதிராக மூன்று ஒருநாள் போட்டியில் 13, 42, 0 மற்றும் 2 டெஸ்டில் 89, 81 ஓட்டங்கள் எடுத்தார். தற்போது இவர் 'போர்முக்கு' திரும்பியதாக மீண்டும் வெற்றிக்கு கைகொடுத்தார். இது தேர்வாளர்களை கவர, இந்திய அணியில் இடம்பிடித்துள்ளார்.

கார்த்திக்

# கரைசேருமா இலங்கை?

டேர்பன் டெஸ்டில் தென்னாபிரிக்க அணித் தலைவர் டு பிளசி, குயின்ரன் அரைச்சதம் அடிக்க இலங்கை அணிக்கு 304 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்கா சென்றுள்ள இலங்கை அணி, அங்கு இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டி டர்பனில் நடக்கிறது. முதல் இன்னிங்சில் தென்னாபிரிக்கா 235, இலங்கை 191 ஓட்டங்கள் எடுத்தன.

இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில், தென்னாபிரிக்கா இரண்டாவது இன்னிங்சில் 4 விக்கெட்டுக்களை இழந்து 126 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

அணித் தலைவர் டு பிளசி (25), குயின்ரன் (15) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**டு பிளசி அரைச்சதம்**

நேற்று மூன்றாம் நாள் ஆட்டம் நடந்தது. குயின்ரன் (55) அரைச்சதம் கடந்தார். லசித் எம்புல்டெனியா 'சுழலில்' பிலாண்டர் (18), ரபாடா (0) ஆட்டமிழந்தனர். டு பிளசி (90) அரைசதம் அடிக்க, தென்னாபிரிக்கா இரண்டாவது இன்னிங்சில் 259 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் இலங்கை சார்பில் அதிகபட்சமாக எம்புல்டெனியா 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பின் 304 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்குடன் இலங்கை இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்தது. அணித் தலைவர் திமுத் கருணாரத்ன (20), திரிமான்னே (21) ஏமாற்றினர். குசல் மெண்டிஸ் டக் அவுட்டானார்.

3ஆம்நாளாட்டம்நிறைவடைய சில மணி நேரம் இருக்கையில் மழை குறுக்கிட, ஆட்டம் முன்னதாகவே முடிவுக்கு வந்தது.

இலங்கை இரண்டாவது இன்னிங்சில் 3 விக்கெட்டுக்களை இழந்து 83 ஓட்டங்களை எடுத்திருந்தது.



5 விக்கெட்டுக்களை கொய்த இலங்கையின் அறிமுக வீரர் லசித் எம்புல்டெனிய

# இறுதியில் மெல்போர்ன்

பிக் பாஷ் 'ரி20' தொடரின் இறுதிக்கு மெல்போர்ன் ரெனெகேட்ஸ் அணி முன்னேறியது. நேற்று நடந்த அரையிறுதியில் சிட்னி அணியை வென்றது.

அவுஸ்திரேலியாவின் உள்ளூர் 'ரி20' தொடர் 'பிக் பாஷ்' லீக். இதன் இரண்டாவது அரையிறுதியில் மெல்போர்ன் ரெனெகேட்ஸ் - சிட்னி சிக்சர்ஸ் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற மெல்போர்ன் களத்தடுப்பை தேர்வு செய்தது. சிட்னி அணிக்கு பிலிப் (52), ஹியுஸ் (52) அரைச்சதம் அடித்து உதவினர். வின்ஸ் 28 ஓட்டங்கள் எடுத்தார்.

20 ஓவர்கள் நிறைவில் சிட்னி சிக்ஸர்ஸ் 3 விக்கெட்டுக்களை இழந்து 180 ஓட்டங்களை எடுத்தது.

அணித் தலைவர் ஹென்ரிக்ஸ் (28), சில்க் (17) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

அடுத்து களமிறங்கிய மெல்போர்ன் அணியை ஹரிஸ் (4) ஏமாற்ற ஹார்பெர் (36), வைட் (29) உதவினர். அணித் தலைவர் பின்ச் 44 ஓட்டங்கள் எடுத்தார்.

கடைசி 12 பந்துகளில் 25 ஓட்டங்கள் தேவைப்பட்டன. அபெட் வீசிய 19ஆவது ஓவரில் 2 சிக்சர் அடித்த கிறிஸ்டியன் வெற்றியை உறுதி செய்தார்.

மெல்போர்ன் அணி 19.5 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 184 ஓட்டங்கள் எடுத்து 3 விக்கெட்டுக்களால் வெற்றியிலக்கை அடைந்து இறுதிக்கு முன்னேறியது.


FWC

## இதய அஞ்சலி

15.02.2019 அன்று மீளாத்துயில் கொண்ட ஆரம்ப கால அங்கத்தவரான

அமரர்

**கே.செல்வவிநாயகம்**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வெளிக்கள நிலையத்தினர்
தொண்டைமானாறு

(7540)



## முல்லைத்தீவு மாவட்ட சவாரிச் சங்கம் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

முல்லைத்தீவு மாவட்ட சவாரிச் சங்க பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் இன்று பி.ப 2 மணிக்கு நடைபெற இருப்பதால் அனைத்து சவாரிப் பிரியர்களையும் சமுகமளிக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கிறோம்.

காலம்:
16.02.2019
சனிக்கிழமை
பி.ப 2.00 மணி

(C-5528)

தொட்டியடி, விசுவமடு

நிர்வாகம்



## 25வது ஆண்டு திருமண நிறைவு விழா



திரு/திருமதி அன்ரன் மோகன்ராஜ் ஜக்குலீன்
மன்னார் (GA)

தம்பதிகளின் 25ஆவது ஆண்டு திருமண நிறைவு விழாவினை இன்று (16.02.2019) மன்னாரில் மிகச்சிறப்பாக கொண்டாடுகிறார்கள். அவர்களை இறைவனின் ஆசிர்வாதத்துடன் இன்றுபோல் என்றும் குடும்பமாக பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறோம்.

பிரான்சிஸ் சேவியர் லூர்த்தம்மா
5ம் வட்டாரம், இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு.
077 306 5188

வாழ்த்துவோர்:
யோகராசா, விஜி
பிள்ளைகள்

(C-5510)

# 4474 மில்லியனில் கிளிநொச்சி வைத்தியசாலைக்கான இரண்டாம் கட்ட அபிவிருத்திப் பணி பிரதமரால் ஆரம்பம்





கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் இரண்டாம் கட்ட அபிவிருத்திப் பணிகளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று ஆரம்பித்து வைத்துள்ளார்.

மத்திய சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு அமைவாக 4474 மில்லியன் ரூபா உத்தேச மதிப்பீட்டில் சகல வசதிகளுடனும் இவ் வைத்தியசாலை நிர்மாணிக் கப்படவுள்ளது. இதில் 1974 மில்லியன்கள் நெதர்லாந்து அரசின் நிதியுதவியிலும் 2500 மில்லியன்கள் அரசின் பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் த.காண்டீபன் மற்றும் முன்னாள் வடமாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் ஆகியோர் மத்திய சுகாதார அமைச்சு மற்றும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சு ஆகியற்றினூடாக கடந்த காலங்களில் பல்வேறு கட்டமாக மேற்கொண்ட முயற்சியை அடுத்தே கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கான இரண்டாம் கட்ட அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அடிக்கல் நாட்டும் வைபவத்தைத் தொடர்ந்து கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கென 50 மில்லியன் பெறுமதியான ஒரு தொகுதி மருத்துவ உபகரணங்களும் வைபவ ரீதியாகப் பிரதமர் மற்றும் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன ஆகியோரால் வைத்தியசாலைக்குவழங்கிவைக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையின் கட்டுமானப் பணிகள் 2003 ஆம் ஆண்டு 600 கட்டில்களுடன் கூடிய அதிநவீன வைத்தியசாலைக்கான திட்டத்துடன் ஆரம்பிக்கப்பட்டிருப்பினும் 2006 ஆம் ஆண்டு சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்ததுடன் அக்கட்டுமானப் பணிகள் அரைகுறையாக நிறுத்தப்பட்டிருந்தன.

சேவையின் தேவை கருதி அவ்வாறு இடைநடுவில் நின்றுபோன வைத்தியசாலையின் கட்டட வளங்களுடன் கிளிநொச்சிப் பொது வைத்தியசாலையானது 2006 ஆம் ஆண்டிலிருந்து இயங்கியிருந்தது.

2008 ஆம் ஆண்டின் இறுதியில் இடம்பெயரும் வரை 200 கட்டில்களுடன் இயங்கிய இந்த வைத்தியசாலை 2009 ஆம் ஆண்டு மீள் குடியேற்றத்துடன் 10 கட்டில்களுடன் மீண்டும் இயங்கத் தொடங்கியது.

2010 ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் 200 கட்டில் வசதிகளுடன் இவ்வைத்தியசாலை தனது சேவையினைத் தொடர்ந்தாலும் இடை நடுவில் நின்று போன கட்டுமானப் பணிகளை மீளவும் முன்னெடுப்பதற்கான தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இதன் விளைவாக 2016 ஆம் ஆண்டின் இறுதியில் மாவட்ட, மாகாண சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள், கிளிநொச்சி பொறியியல் பீடாதிபதி தலைமையில் உருவாக்கப்பட்ட நிபுணர் குழுவினர் மற்றும் மத்திய சுகாதார அமைச்சின் உயரதிகாரிகள் அனைவரும் இணைந்து 4474 மில்லியன் உத்தேச மதிப்பீட்டில் சகல வசதிகளுடனும் கூடிய கிளிநொ ச்சிப் பொது வைத்திய சாலையுடன் இணைந்த மகப்பேற்றியல் விசேட வைத்திய மையத்தினை உள்ளடக் கிய கட்டம் இரண்டிற்கான முன்மொழி வினை உருவாக்கி யிருந்தனர்.

ஐந்து பகுதிகளாகக் கொண்ட, 36 மாதங்களில் கட்டி முடிப்பதற்குத் திட்டமிடப்பட்ட மேற்படி அபிவிருத்தித் திட்டத்திற்கு 2017 ஆம் ஆண்டு வைகாசி மாதம் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டதனை தொடர்ந்து நேற்று கட்டடப் பணிகள் பிரதமரினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் சுகாத்ார அமைச்சர் ராஜித சேனாரட்ன, அமைச்சர்களான வஜிர அபேகுணவர்த்தன, றிசாத் பதியுதீன், ரவூப் ஹக்கீம், ஹரிசன், சாகல ரத்னாயக்க, விஜயகலா மகேஸ் வரன் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுமந்திரன், சிறிதரன், சித்தார்த்தன் மற்றும் அமைச்சின் செயலாளர்கள், அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (9-312)


## 14 ஆம் ஆண்டு நினைவலைகள்



திதி:பூர்வபக்க ஏகாதசி

தோற்றம் 17 05 1954

மறைவு 19 02 2005

**கருணைவேல் தேவமலர்**

வருடங்கள் பதினான்கு ஆண்டு என்று
சொல்ல மனசு மறுக்கின்றது
இதயத்தில் அகலாத சிரித்த முகத்தோற்றம்
என்றும் எம் நினைவலைகளை விட்டு அகலாது

(சி-5519)

அருண் கோ மில், துவாளி வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.

கணவன்: கருணைவேல், பிள்ளைகள், மருமக்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 02 05 1966

விண்ணில் 27 02 2018

**திரு. சுப்பிரமணியம் திருகேஸ்வரன்**

(PRINCIPAL SLPS GR-II. B.Ed)

*திதி:- 16.02.2019 (துவாதசி)*

*அன்பையும் பாசத்தையும் கல்வியையும்
எங்கள் மீது கொட்டும் அப்பா
எங்களை விட்டு நீங்கள் எங்கு சென்றீர்களோ
போகும் இடமெல்லாம் உங்கள் ஞாபகமே
உயிர் பிரியும் வலியை நாங்கள் உங்கள்
இழப்பில் அறிகின்றோம்
ஆண்டுகள் ஒன்று சென்றுபோயினும்
அன்பினாலே உன் நினைவுகள் அப்பா*

அன்னாரின் ஓராண்டு கிரியைகள் 16.02.2019 இன்று (சனிக்கிழமை) அவரது இல்லத்தில் நடைபெறுவதால் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(7532)

சில்லாலை மேற்கு. பண்டத்தரிப்பு.

உங்கள் பிரிவால் தினம் வாடும் குடும்பத்தினர்.


## இராசி பலன்

**மீனம்:** தொழில் ரீதியாக வர வேண்டிய வரவுகள் கிடைக்கலாம், உடல் நலன் சீராகும், உறவினர்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம், சுப செலவுகள் அதிகரிக்கலாம்.

**மேடம்:** நீண்ட நாளைய பிரச்சினை ஒன்று நல்ல முடிவுக்கு வரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சகோதர வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வாக்கு மேன்மையுண்டு.

**இடபம்:** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், அலங்காரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், நிதி நிலை உயரும் நாள், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கும்பம்:** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், தாழ்ந்த சுபாவமுண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

இராசி பலன் — கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | செவ் | | ராகு, சந் |
| சூரி, புத | | | |
| | | | |
| சனி, கேது, சுக் | குரு | | |

சந்திராஷ்டமம் மூலம், பூராடம்

**16.02.2019**

மாசி 04, சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.28 மணிக்கு
ஏகாதசி காலை 6.59 மணிவரை
துவாதசி பின்னிரவு 4.57 மணிவரை
திருவாதிரை பிற்பகல் 3.38 மணிவரை
சுபநேரம் 3.33-5.03 மணிவரை
இராகுகாலம் 9.33-11.03 மணிவரை
பீம ஏகாதசி விரதம்

வளவன்

**கடகம்:** தொழில் நலன்கருதிய பயணங்கள் இடம்பெறலாம், இட மாற்றத்தில் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது.

**மகரம்:** உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், செய்தொழிலை விருத்தி செய்ய முற்படுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**சிம்மம்:** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, பொன்னான நாள், கௌரவமான நாள்.

**தனுசு:** உறவினர்கள் சிலரைத் தேடிச் சென்று சந்திப்பீர்கள், குடும்ப நலன்கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், வியாபாரத்தை விரிவுபடுத்த முற்படுவீர்கள்.

**விருச்சிகம்:** சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களை காண வேண்டிய நாள், வரவும் செலவும் சமமாகும் நாள், சிலர் கௌரவ குறைவாக நடந்து கொள்ளலாம், பிரயாண பயமுண்டு.

**துலாம்:** தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், ரோக பயமுண்டு.

**கன்னி:** பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர், கனவு பலிதமுண்டு, செல்வாக்கு மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

# வடமாகாணத்தில் துறைமுக அபிவிருத்தியில் பல்வேறு திட்டங்கள்

- 2 ஆயிரம் அமெரிக்க டொலர் மூலதனம்
- 24 இறங்குதுறைகள்
- 2 பயிற்சிக் கல்லூரிகள்
- பாசி, கடலட்டை, நண்டு வளர்ப்பு
- ஒரு துறைமுகப் பூங்கா

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையுடன் சுமார் 2 ஆயிரம் அமெரிக்க டொலர் செலவில் பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மீன்பிடி அமைச்சின் கருத்திட்டப் பணிப்பாளர் பிரபாத் தெரிவித்தார்.

இத் துறைமுக அபிவிருத்தி மூலம் வடமாகாணத்தை சிறந்த கடல் வழிப் போக்குவரத்துத் தளமாக மாற்றுவதுடன் பொருளாதார ரீதியான முன்னேற்றத்துக்கும் ஊன்றுகோலாக அமையுமெனத் தெரிவித்தார்.

துறைமுக அபிவிருத்தியில் துறைமுகங்களின் உட்கட்டுமானங்களை கொழும்புத் துறைமுகத்துடன் ஒப்பிடும் அளவிற்கு நவீன மயப்படுத்தவுள்ளதாகவும் இந்தத் துறைமுக அபிவிருத்தியில் கப்பல் அணைக்குமிடம், எரிபொருள் களஞ்சியம், விநியோகப்பகுதி, வலை நூற்கும் பகுதி, இயந்திரம் பழுது பார்க்கும் பகுதி, வாகனத்தரிப்பிடம், பராமரிப்புப் பகுதி, நீர்விநியோகப்பகுதி, தீயணைப்புப் பகுதி, ஒப்பு நோக்கும் பகுதி, மின்சாரப் பகுதி, மலசலகூடம், தங்குமிடம் எனப் பல்வேறு துறை சார் அம்சங்களை முன்னிலைப்படுத்தியதான சர்வதேச துறைமுக அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஏற்ற வகையில் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மீன் பிடித்துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் 24 இறங்கு துறைகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய 4 மாவட்டங்களிலும் அமைக்கப்பட்வுள்ளதோடு மண்டைதீவுப் பகுதியில் கடல் அணையும் அமைக்கப்படும்.

ஏற்றுமதித் துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் கடல்பாசி, இறால்வளர்ப்பு, ஆய்வுகூடம் யாழ்ப்பாணத்தில் சுழிபுரம் பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதன்மூலம் சர்வதேச ரீதியான ஏற்றுமதியை விரிவுபடுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கரையோரக்கடல் வாழ் உயிரினங்கள் பற்றி ஆராய்வதற்கும் அது தொடர்பான சர்வதேசத் தரம் வாய்ந்த நிபுணத்துவப் பயிற்சி வழங்கவென மன்னார் மாவட்டத்தில் கரையோர கடல் வாழ் பயிற்சிக்கல்லூரி ஆரம்பிக்கப்படும்.

இதன் மூலம் சர்வதேசத் தரம்வாய்ந்த கல்வியைப் பெறுவதோடு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களையும் இதன்மூலம் பெறக்கூடியதாக இருக்கும்.

கரையோரக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தொழில் ரீதியாகவும் வாழ்க்கைத்தரம் அடிப்படையிலும் அநேக மானவர்கள் பின்தங்கியவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்களின் வாழ்வாதாரத்தையும் அடிப்படைவசதிகளையும் முன்னேற்றுவதற்காக வடமாகாணத்தில் 141 மீனவர் கரையோரக் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இம்மக்களின்கல்வி, தொழில் வாய்ப்பு, வாழ்விடம், வீதி அபிவிருத்தி என்பவற்றை முதன்மைப்படுத்தியதான அபிவிருத்திச்செயற்றிட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## சுகாதாரத் தொழிலாளர்களுக்கு அடிப்படை வசதிகளையாவது ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்

(சாவகச்சேரி)

சுகாதாரத் தொழிலாளர்களையும் சக மனிதர்களாக மதித்து அவர்களுக்கான அடிப்படை வசதிகளையாவது ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.கஜிதன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி நகரசபையில் கடமையாற்றும் சுகாதாரத் தொழிலாளி ஒருவர் வீதியில் வாகனத்துடன் மோதி இறந்த கட்டாக்காலி நாயைத் தனது துவிச்சக் கரவண்டியின் முன் இருக்கையில் வைத்து இரத்தம் சிந்தக் கொண்டு சென்றதாகவும் பின்னர் அதே துவிச்சக்கரவண்டியில் குறித்த தொழிலாளி தனது பிள்ளையை பாடசாலைக்குக் கொண்டு சென்றதனையும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

எனவே சுகாதாரத் தொழிலாளிகளையும் மனிதர்களாக மதித்து அவர்களுடைய சுகாதாரம் தொடர்பிலும் உரிய கவனம் செலுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இறந்த விலங்குகளை வீதிகளில் இருந்து அப்புறப்படுத்த பெட்டியுடன் கூடிய துவிச்சக் கரவண்டி ஒன்றை சாவகச்சேரி நகரசபையினர் கொள்வனவு செய்து கொடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-30)

## வடக்கில் முன்பள்ளி டிப்ளோமா பயிற்சி நெறி இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் 350 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு டிப்ளோமா கற்கை நெறி திட்டம் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் என ஆறுதல் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சு.டிவகலாலா தெரிவித்தார்.

வடமாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட முன்பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு மட்டும் இப்பயிற்சி நெறி வழங்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

இப்பயிற்சி நெறி யாழ். இந்து மகளிர் கல்லூரி, மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, வடமராட்சி வேலாயுதம் மகா வித்தியாலயம், கிளிநொச்சி மத்திய கல்லூரி, வவுனியா தெற்கு சி.சி.த.க. பாடசாலை மற்றும் புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்திலும் இடம்பெறுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)



யாழ்.பல்கலைக்கழக் சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறையினரும் யாழ்.நீரிழிவுக் கழகத்தினரும் இணைந்து "எமது சுகவாழ்வு எமது கைகளில்" என்னும் தொனிப்பொருளில் யாழ்.போக்குவரத்து சபை அலுவலகத்தில் கடந்த 13 ஆம் திகதி நடத்திய செயலமர்வின்போது யாழ்.பல்கலைக் கழக சமுதாய மற்றும் குடும்ப மருத்துவ துறைத் தலைவர் டாக்டர் பே.அ.டி.சூஞ்ஞ, யாழ்.போதனா வைத்தியசாலை சுகாதார கல்வி பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் துவாரகா மற்றும் யாழ்.நீரிழிவுக் கழகத்தலைவர் தி.மைக்கல் ஆகியோர் உரையாற்றுவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

## சாவகச்சேரியில் மாலை 6 மணிக்குப்பின்பு தனியார் கல்வி நிறுவனங்கள் நடத்தத் தடை

### நகரசபையில் தீர்மானம் நிறைவேற்றம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபைக் குட்பட்ட பகுதிகளில் மாலை 6 மணிக்குப் பின்பு தனியார் கல்வி நிறுவனங்கள் நடத்துவதைத் தடை செய்யும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நகர சபை உறுப்பினர் ம. நடனதேவனால் முன் வைக்கப்பட்ட இத் தீர்மானம் நேற்று முன்தினம் இடம்பெற்ற சபை அமர்வில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இத் தீர்மானம் தொடர்பில் உறுப்பினர் நடனதேவன் தெரிவிக்கையில், தமது சபைக்குட்பட்ட பகுதிகளில் சில தனியார் நிறுவனங்கள் இரவு 9 மணி வரை வகுப்புக்களை நடத்துவதாகவும் இதனால் தூர இடங்களில் இருந்து வருகை தரும் பெண் பிள்ளைகள் பல அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க நேரிடுவதாகத் தெரிவித்தார். இதன் காரணமாக இத்தகையதொரு தீர்மானத்தைக் கொண்டு வர நேரிட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த தீர்மானம் தொடர்பில் நகரசபை செயலாளரைக் கேட்ட போது எமது கலை, கலாசாரங்களைப் பாதுகாக்கும் நோக்கோடு கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை தான் வரவேற்பதாகவும் சபையின் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் தனியார் கல்வி நிலையங்களுக்குப் பொறுப்பானவர்களுக்கு அறிவிக்கவுள்ளதாகத் தெரிவித்தார். (இ-10-30)




## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

"சம கால அரசியலும் ஒன்றிணைந்த செயற்பாட்டின் அவசியமும்" எனும் தலைப்பில் ஒரு கலந்துரையாடல் எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 4 மணியளவில் DMI தனியார் கல்வி தொழில்நுட்ப நிறுவனத்தில் (இலுப்பையடிச் சந்திக்கு அண்மையில்) நடைபெறவுள்ளது. (இ-5)

## வாகன இலக்கத்தகடுகள்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் போக்குவரத்து திணைக்கள தலைமை அலுவலகத்திலிருந்து 2019.02.13 ஆம் திகதி யாழ்.அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல், யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலும் பொது மக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் மாவட்டச் செயலக இணையத்தளத்திலும் பார்வையிடலாம். இதற்கமைய புதிதாகவாகனங்களைப்பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப்பதிவுப் புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும் மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் (Sticker) என்பவற்றையும் யாழ். மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத்தகடுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என யாழ்ப்பாணம் மோட்டார் போக்குவரத்து திணைக்கள பிரதி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

AAB-9011, AAI-4087, AAI-6684, AAO-1132, ABS-9877, ABS-9919, ABS-9958, ABS-9964, ABS-9986, ABT-0036, ABT-0250, ABT-0255, ABT-0296, ABT-0434, ABT-0500, ABT-0509, ABT-0519, ABT-0574, ABT-0725, ABT-0737, ABT-0744, ABT-0781, ABT-1515, ABT-4544, ABT-5110, ABT-5898, ABT-9124, ABV–8888, BAB-5707, BAB-5717, BAH-1454, BAL-3706, BAV-5680, BBA-9580, BBC-1468, BBW-1762, BCM-7070, BDE-8792, BDH-1892, BDW-3699, BEO-9477, BGN-9848, CAB-6105, CAB-7636, CAB-8145, CAC-2397, CBD-6798, DAA-5933, DAB-6630, DAD-9259, GA-5410, GA-5660, GG-4692, GI-7107, GJ-7281, GK-8446, GN-3881, GN-7604, GP-6504, GQ-0932, GR-7717, GR-9047, GS-2130, GS-8443, GU-5829, GV-4676, GV-9142, GX-9299, GY-2882, GY-6693, HA-1628, HG-0308, HG-7089, HI-4400, HK-0775, HM-2251, HM-2312, HO-8469, HX-7929, HY-7553, HZ-3506, JC-4076, JC-6475, JF-3999, JG-2735, JI-2257, JM-0845, JM-2466, JN-5067; JO-2718, JO-6933, JO-8710, JS-6278, JU-9909, JY-3554, JZ-9702, KD-0201, KE-7881, KF-4088, KG-1078, KG-2190, KK-2931, KM-5644, KN-1203, KR-9174, KS-0314, KS-6927, KU-0111, LE-3898, LH-5456, LH-8069, LI-0671, LI-1659, LJ-4284, LJ-7477, LL-4509, LL-6666, LL-7352, LM-8323, LO-7272, LW-0380, LW-0385, LW-0386, MF-1105, MK-6407, MO-9865, MU-8844, MZ-6924, NA-1601, NC-9729, PB-2556, PC-6030, PC-6381, PE-3661, PG-6382, PI-2288, PI-2445, PI-8545, PL-0444, PP-2484, PX-1527, QA-1767, QA-4833, QA-7992, QA-9379, QA-9963, QD-5758, QF-1778, QF-2927, QF-8061, QH-4608, QJ-0550, QN-7149, QQ-2877, RB-1901, RV-0450, RV-6636, RW-9024, SO-8275, SO-8373, TH-1105, TZ-4723, UK-3616, UK-7844, UT-1952, UX-1707, VB-8688, VE-8181, VM-4976, VM-6741, VM-8926, VU-2147, VV-6943, VY-2256, WB-1330, WD-3682, WG-3728, WK-9422, WL-7468, WM-9688, WN-2624, WS-0822, WW-1900, XB-7467, XC-5848, XH-2965, XL-3397, XM-8787, YF-9729, YN-6226, YT-2116. (இ)

# அமெரிக்க கரையோர பாதுகாப்பு படையினர் வழங்கிய பயிற்சி நிறைவு



(கொழும்பு)

இலங்கைத் துறைமுக அதிகாரிகளுக்கு அமெரிக்க கரையோரப் பாதுகாப்புப் படையினரால் வழங்கப்பட்டுவந்த பயிற்சிகள் நேற்றுடன் நிறைவடைந்தன.

ஐக்கிய அமெரிக்கத் தூதரகத்தின் கொழும்பு அலுவல்கள் பிரிவு நேற்று வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் தொடர்பாக தெரிவித்துள்ளது.

அதன்படி துறைமுகப் பாதுகாப்பு தொடர்பாக ஆற்றல் மேம்படுத்தல் நடவடிக்கையொன்றை, 25இற்கும் மேற்பட்ட இலங்கை அதிகாரிகளுடன் இணைந்து கொழும்பு துறைமுகத்தில் கடந்த 11ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட பயிற்சிகள் நேற்றுடன் நிறைவடைந்தன.

துறைமுகத்தின் பௌதீக பாதுகாப்பு முறைமைகள் மற்றும் பாதுகாப்பு ஆற்றல்களைப் பலப்படுத்த இந்த நிகழ்வு உதவியதுடன், துறைமுக பாதுகாப்பு திட்டங்களின் ஒருங்கிணைப்பு மற்றும் அமுலாக்கத்தை மேம்படுத்திய பயிற்சிகளையும் உள்ளடக்கியிருந்ததென தெரிவிக்கப்படுகின்றது.

பயங்கரவாதம் மற்றும் ஏனைய அச்சுறுத்தல்களிலிருந்து அதிகரித்த பாதுகாப்பை வழங்குவது மட்டுமல்லாது, இலங்கையின் சுபீட்சத்துக்கும் பங்களிப்புச் செய்யும் ஏனைய நாடுகளுடனான வர்த்தகங்களை அதிகரிக்கச் செய்யவும் இலங்கைக்கு கடல்வழி பாதுகாப்பு உதவுகின்றது.

துறைமுக பாதுகாப்பு தொடர்பாக இலங்கை வலுவான உறுதிப்பாடொன்றை வெளிப்படுத்தியதாக இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு தலைமை வகித்த துறைமுக பாதுகாப்பு முன்னெடுப்புக்களுக்கான இலங்கைக்கான அமெரிக்க கரையோர பாதுகாப்புப் படையின் இணைப் பதிகாரி லெப்டினன்ட் மெற் ஆர்னோல்ட் தெரிவித்துள்ளார்.

அத்தோடு அதிகரித்த வர்த்தகங்கள் மற்றும் வர்த்தகத்துக்கான பிராந்திய மையமாக உருவாகும் இலங்கையின் இலக்கை அடைவதற்கும் அத்தியாவசியமான பாதுகாப்பு சூழலை உருவாக்குவதற்கு இந்த ஆற்றல் மேம்படுத்தல் நடவடிக்கைகள் உதவியது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# போதை வில்லைகளுடன் ஒருவர் கைது

(மினுவாங்கொடை)

மினுவாங்கொடை - எசெல்ல பகுதியில் சட்டவிரோத போதைப் பொருட்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

குறித்த நபரிடமிருந்து கஞ்சா கலவையால் செய்யப்பட்ட 4,438 மதன மோதகம் போதை வில்லைகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)


## ஆடு விற்பனைக்கு

முல்லைத்தீவுப் பகுதியில் ஆடுகள் விற்பனைக்குண்டு.

(C-5520)

**T.P. 077 168 1697**

## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாககணித்துத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு:-076 835 1932, 021 223 2222

உரும்பிராய்.

(6730)

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
### UNIT OF ALLIED HEALTH SCIENCES, FACULTY OF MEDICINE

**ACADEMIC PROGRAMME**

**B.Sc. in Medical Laboratory Sciences, B.Sc. in Nursing and Bachelor of Pharmacy.**

The Academic Programme for the new batch (13th batch) of Unit of Allied Health Sciences students will commence on **Monday, 25th February 2019 at 9.30 am** in the **Hoover Auditorium, Faculty of Medicine, Adiyapatham Road, Kokuvil.** An Inauguration programme will be held on **26th February 2019 at 9.00 am** in the **Hoover Auditorium, Faculty of Medicine, Adiyapatham Road, Kokuvil. It is appreciated that one of the Parents of each student attend this Inauguration Programme.**

**Registrar,**
**University of Jaffna.**

## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்:சதயம் 2<br>கி.பா:18 உயரம்: 169cm<br>தகைமை/தொழில்:Dip.in Law, அரசதொழில்<br>எதிர்பார்ப்பு:உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: B/9310 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 2<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு<br>தொ.இ: G/9314 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 3<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: A/L, Business Promotion Officer<br>எதிர்பார்ப்பு: A/L, அரசதனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/9311 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 3<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்:பட்டதாரி, Australia<br>எதிர்பார்ப்பு:Accountant, Engineer (Colombo,Australia)<br>தொ.இ: G/9316 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 3<br>கி.பா:24செவ் 1 இல் உயரம்:5'9"<br>தகைமை/தொழில்:A/L, Germany<br>எதிர்பார்ப்பு:A/L, பட்டதாரி(உள்நாடு), வெளிநாடு(Swiss,Germany,France)<br>தொ.இ: B/9312 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அனுசம<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:பல் வைத்தியர், Australia<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer (உள்நாடு, வெளிநாடு)<br>தொ.இ: G/9317 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 4<br>செவ் 7 ல் உயரம்:5'8"<br>தகைமை/தொழில்:A/L, கடைமுகாமையாளர்<br>எதிர்பார்ப்பு: A/L (மணமகன் விவாகரத்து பெற்றவர்)<br>தொ.இ: B/9313 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>செவ் 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L, Bank<br>எதிர்பார்ப்பு: அரசதொழில், பட்டதாரி உத்தியோகம்<br>தொ.இ: G/9326 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
### பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமா கற்கைநெறி முழுநேரம் முதலாம் அரையாண்டு பரீட்சைகள் 2018

மேற்படி பரீட்சையானது எதிர்வரும் 06.03.2019 ஆம் திகதி முதல் 14.03.2019 ஆம் திகதி வரை நடைபெறும்.

மேற்படி பரீட்சைக்கான. விண்ணப்பங்கள் 18.02.2019 ஆம் திகதி முதல் 22.02.2019 ஆம் திகதி வரை கல்வித்துறை அலுவலகத்தால் ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பங்களை கல்வித்துறை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணத்தினை பல்கலைக்கழக காசாளரிடமோ, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம். பற்றுச்சீட்டை பரீட்சை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(C-5517)

குருவே துணை



வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது

தமிழகத்திலிருந்து வருகை தந்திருக்கக் கூடியவரும் இலங்கையில் பல தரப்பட்டவர்களின் ஆதரவைப் பெற்றவருமான பேராசிரியர் அருள்நிதி உழவன் முத்துவேல் அவர்களால் பயிற்சிகள் நடாத்தப்பட இருப்பதால் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- ✦ எளியமுறை உடற்பயிற்சிகள்
- ✦ எளியமுறை தியானப்பயிற்சிகள்
- ✦ காயகல்பப் பயிற்சி
- ✦ அகத்தாய்வுப் பயிற்சிகள்

காலம்: 16.02.2019 சனிக்கிழமை தொடக்கம் 22.02.2019 வெள்ளிக்கிழமை வரை
நேரம்: மாலை 5 மணி தொடக்கம் 7.00 மணி வரை
பயிற்சிகளை வழங்குபவர்கள்: மனவளக்கலை பேராசிரியர் உழவன் முத்துவேல் துணைப்பேராசிரியர் த.நந்தகுமரன்.

யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல: 021 222 2772

# பிரதமர் தலைமையில் கிளி.மாவட்ட அபிவிருத்தி மீளாய்வு கூட்டம்






(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுக்காலை கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த மீளாய்வுக் கூட்டத்தில் கடந்த டிசம்பர் ஏற்பட்ட வெள்ளத்திற்கு பின்னரான நிலைமைகள், இரணைமடு யாழ்ப்பாணம் குடிநீர் திட்டம், வீதி அபிவிருத்தி, வீட்டுத்திட்டம், உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன.

முன்னதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மாவட்டத்தின் அபிவி ருத்தியும், தேவைகளும் குறித்து விளக்கமளித்தார்.

அத்துடன் பிரதமரால் வெள்ளத்தினால் வயல் அழிவுக்கு உள்ளான விவசாயிகள் பத்துப் பேருக்கான காசோலைகளும் யுத்தத்தால் பாதி க்கப்பட்ட 100 பேருக்குமான காசோலைகளும் வழங்கி வைக்கப்பட்டது. (9-312)

# பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த நடைபாதை வியாபாரிகளுக்கு எச்சரிக்கை





(குருமன்காடு)

வவுனியா நகரில் மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் நடைபாதை வியாபாரத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையிலும் பொலிஸாருடன் இணைந்து வவுனியா நகரசபையினர் நேற்று ஈடுபட்டனர்.

இதன்போது வவுனியா நகரப்பகுதிகளில் நடைபாதையில் அமைக்கப்பட்ட மேடைகள், தளபாடப் பொருட்களை அகற்றியுள்ளதுடன் இனிவரும் காலங்களில் நடைபாதையில் வியாபார நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் அவர்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் எச்சரிக்கை விடப்பட்டது.

வவுனியா, ஹொரவப் பொத்தான வீதி, இலுப்பையடி, சந்தை சுற்றுவட்ட வீதி என்பவற்றில் மக்களின் போக்குவரத்திற்கு இடையூறுகள் ஏற்படுத்தி நடைபாதையில் சுகாதாரத்திற்கு தீங்கான முறையில் மரக்கறிகள், பழங்கள் மற்றும் உணவுப் பொருட்களை விற்பனை செய்த வியாபாரிகளுக்கு எதிராக பொலிஸாருடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த மாதம் நகரசபை உத்தியோகத்தினரால் இவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

எனினும் அரசியல் தலையீட்டினால் இந் நடவடிக்கை கைவிடப்பட்டிருந்த நிலையில், மீண்டும் மக்களின் முறைப்பாட்டினையடுத்து பொலிஸாருடன் இணைந்து இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (9-250)

## துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர் துப்பாக்கியுடன் கைது

(கொழும்பு)

மீட்டியாகொட, உடுமுல்ல பிரதேசத்தில் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபர் ரி-56 ரக துப்பாக்கி மற்றும் 3 தோட்டாக்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 5ஆம் திகதி குறித்த நபர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், அவரை வைத்தியசாலையில் அனுமதித்த நபரை விசாரணைக்காக பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதன்போது காயமடைந்த நபர் துப்பாக்கியை திருத்தம் செய்யும் போது இயங்கியதில் காயடைந்துள்ளமை தெரியவந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# அனைத்து வீதிகளுக்கும் பெயர்ப்பலகை வேண்டும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பதினொரு வட்டாரங்களிலும் உள்ள நகரசபை வீதிகளுக்கு பெயர்ப்பலகை பொருத்தி பெயர்ப்பலகைகளில் வீதிகளின் தூரம் குறிப்பிடப்பட வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்களான க.கஜிதன் மற்றும் க.சிவராசா ஆகியோர் சபையில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சாவகச்சேரி நகரசபையில் உப தவிசாளர் பாலமயூரன் தலைமையில் இடம்பெற்ற சபை அமர்வின் போதே அவர்கள் இதனைத் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் பெயரிடப்படாத பல வீதிகள் உள்ளன. ஒவ்வொரு வீதிகளுக்கும் பெயரிட்டு, வீதிகளின் தூரம் அந்தந்த பெயர்ப் பலகைகளில் பொறிக்கப்படுதல் வேண்டும். பல வீதிகள் இன்றுவரை நகரசபையின் பதிவில் இல்லாமல் காணப்படுகின்றன.

ஒவ்வொரு வட்டாரத்திலும் நாற்பதிற்கும் மேற் பட்ட வீதிகள் காணப்படுகின்ற போதிலும் அரைவாசி வீதிகளே நகரசபையின் பதிவில் காணப்படுகின்றன. அத்துடன் நகரசபையின் பதிவுகளிலும் தெளிவில்லாத நிலை காணப்படுகிறது. அதாவ்து பல வீதிகள் தற்போது தார் வீதிகளாக மாறியுள்ள போதிலும் இன்றுவரை நகரசபை பதிவில் கிரவல் வீதி என்றே குறிப்பிடப்பட்டுள்ளன.

அத்துடன் சாவகச்சேரி நகரசபையின் பதினொரு வட்டாரங்களிலும் வீதி அபிவிருத்தி ஒரு சீரான முறையில் இடம்பெற வேண்டும். சில வட்டாரங்களில் அதிகளவான வீதிகள் செப்பனிட வேண்டிய தேவை இருப்பதாகவும் அவர்கள் மேலும் சுட்டிக்காட்டியிருந்தனர். (இ-30)

# விற்பனை மண்டபத்தை புனரமைக்க மக்கள், வியாபாரிகள் கோரிக்கை



(வரணி)

தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள வட வரணி சங்கக் கிளையின் விற்பனை மண்டபமானது 40 வருடங்களுக்கு மேலாக எவ்வித புனரமைப்புமின்றி விழும் நிலையில் காணப்புடுகின்றது.

ஓடுகள் உடைந்து விழுந்து காணப்படுவதுடன் இல்லாமலும் உள்ளன. இதனால் மழையில் நனைந்து மரங்கள் உக்கி பாறி விழும் நிலையில் மண்டபம் காணப்படுகின்றது. அத்துடன் மண்டபத்தின் கட்டடமும் வெடிப்புக்குள்ளாகி காணப்படுகின்றது. இம் மண்டபமானது முன்னர் வெங்காயக் கொள்வனவு செய்து சங்கத்தால் வியாபாரிகளுக்கு விற்பனை செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்டதாக மக்கள் தெரிவித்தனர். பின்னர் நாட்டில் இடம் பெற்ற யுத்த சூழ்நிலை காரணமாக வரணி கிராம மக்கள் வடமராட்சி பிரதேசத்திற்கு இடம் பெயர்ந்து சென்றமையால் வியாபார நடவடிக்கைகள் கைவிடப்பட்டு சங்கமும் இயங்காமல் மூடப்பட்டிருந்தது. பின்பு மக்கள் மீளக் குடியேறி தமது இயல்பு வாழ்க்கையை மேற்கொண்டபோது சங்கமும் மீளத்திறக்கப்பட்டது. எனினும் விற்பனை மண்டபமானது சேதமடைந்து ஓடுகள் கழற்றப்பட்டும் இருந்தன. இதனை அப்போது புனரமைக்காமையால் இப்போது முழுமையாக சேதமடைந்துள்ளது.

மண்டபத்தின் புனரமைப்புத் தொடர்பாக கிளையின் நிர்வாகத்தினரால் தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர் பொது முகாமையாளருக்கு அறிக்கை மூலம் தெரியப்படுத் தப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. அவர்கள் ஆணையாளரின் அனுமதி பெற்றால் தான் மண்டபத்தை புனரமைக்க முடியும் எனத் தெரிவித்துள்ளனர். எனவே தற்போது மரக்கறி, மீன் போன்றவற்றை விற்பனை செய்வதற்கு இம் மண்ட பத்தை பயன்படுத்துவதற்கு நிர்வாகத்தினர் அனுமதி கேட்டுள்ளனர்.

ஆகவே யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணை யாளர் இவ் விற்பனை மண்டபத்தினை புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டும் என பொதுமக்கள், நிர்வாகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளதுடன் வியாபாரிகளின் பயன்பாட்டிற்கு வழங்குவதற்கு அனுமதிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-103)

# மதூஷ் உள்ளிட்ட 31 பேருக்கும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியல்



(டுபாய்)

டுபாய் நாட்டில் வைத்து கைது செய்யப்பட்ட, இலங்கையின் பிரபல பாதாள உலகக் கோஷ்டித் தலைவர் மாகந்துரே மதூஷ் உள்ளிட்ட 31 பேரையும், எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு. டுபாய் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த சந்தேகநபர்கள், நேற்றைய-தினம் டுபாய் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே, அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இவர்களுள், பாடகர் அமல் மற்றும் அவரது மகன் நதீமால், நடிகர் ரயன் ஆகியோரும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)







தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டுப்போட்டி நேற்று முன்தினம் அதிபர் ம.மணிசேகரம் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய ஆரம்பப்பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் லோ.ஸ்ரனிஸ்லாஸ் கலந்து கொண்டார். (படங்கள்:- ஈச்சமோட்டைச் செய்தியாளர்)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—166

# வெங்காயத்தில் கஸ்கியூட்டா என்னும் ஒருவகை தூக்குமான்கொடிக்களை



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

இது உங்களுக்கான தளம், தங்களது கருத்துக்களை செவிமடுத்து அதற்கான பதிலை தங்களுக்கு விளக்கமளிப்பதாக எடுத்துக்கொள்ளலாம்.

வெங்காயப் பயிர்ச்செய்கையில் பலவிதமான பீடைகள் சேதத்தை உண்டுபண்ணினாலும் அதில் கஸ்கியூட்டா என்னும் ஒருவகைக் களை அதீத சேதத்தை உண்டு பண்ணுவதனை விவசாயப் பெருமக்கள் கண்டறிந்துள்ளனர். இது அவ்வப்போது பாரிய பிரச்சினையாக எழுந்து பின்னர் விவசாயப் பெருமக்களின் சிறந்த பயிர்ச்செய்கை முறைகளுக்கூடாக கட்டுப்படுத்தப்பட்டதனையும் இதில் பதிவுசெய்யலாம். அந்த வகையில் கஸ்கியூட்டா என்னும் வேரற்ற தண்டற்ற களையை கட்டுப்படுத்துவது அனைவரினதும் கூட்டு முயற்சியில் தங்கியிருக்கின்றது.

இம்முறை அச்சுவேலியிலியிலுள்ள தம்பாலை என்னுமிடத்தில் வெங்காயப் பயிர்ச்செய்கையிலீடுபடும் இ.சண்முகராசா கஸ்கியூட்டாவினால் வெங்காயச் செய்கை பாதிக்கப்பட்ட விவசாயிகள் சார்பில் மடலொன்றும் அதனுடன் கஸ் கியூட்டாவின் மாதிரிகளையும் அனுப்பியிருந்தார். அவரது கருத்தினை அப்படியே பதிவிடுவது ஏனைய விவ சாயப் பெருமக்களுக்கும் பயன்படும் என்பதால் அதனை கீழே காணலாம்.

"எனது தோட்டக்காணியிலும் வேறு சிலரது தோட்டக்காணியிலும் ஒருவிதமான (தூக்குமான்கொடி போல்) வேர் காணப்படமுடியாத கொடிவகை வெங்காயம், மிளகாய், கரட், தக்காளி போன்ற பயிர்களிலும் வேகமாகப் பரவிவருகின்றது. இதனால் உற்பத்தி விளைச்சல் மிகமோசமாக பாதிப்படைந்து காணப்படுகின்றது. கடந்த வருடமும் தைமாதம் தொடக்கம் பயிர்களின் காலம் முடிவடையும் வரை காணப்பட்டது. பின் களைகொல்லி தெளித்தபின் சிறிது காலம் வெற்று நிலத்தில் காணப்படவில்லை. தற்போது பயிர்ச்செய்கையின் நடுப்பகுதியில் வேகமாகப் பரவிவருகின்றது. 2013 இதே காலப்பகுதியில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின் போது பயிர்களுக்குரிய பாதிப்பு (மழை, கடும்குளிர், காற்று) ஏற்பட்ட நிலைமையை தொடர்ந்து தங்களின் கவனத்திற்கு கொண்டு சென்று இடைக்காடு, தம்பாலை, கதிரிப்பாய் மக்களின் வெங்காய பயிரை சேகரித்து தங்களின் விவசாய பீட மாணவர்களின் உதவியுடன் காரணத்தைக் கண்டறிந்து இங்குவந்து விளக்கமளித்தீர்கள். அந்த விளக்கத்தினால் கிராமங்களின் முழுமையான மக்களும் கவனத்தில் எடுக்காவிடினும் அரைவாசிப்பேராவது பயன்பெற்றுள்ளதை தங்களுக்கு தெரிவிக்கவேண்டிய கடமையும் நன்றியும் எமக்கு உள்ளது. இதனால் தங்களின் அறிவுரையை இந்த வருடமும் கூட எம்மில் சிலர் நடைமுறைப்படுத்தி வெங்காய செய்கையில் பூரண வெற்றி காணக்கூடியதாகவுள்ளது. இந்த நம்பிக்கையின் அடிப்படையில் தம்பாலை, இடைக்காடு, கதிரிப்பாய் கிராமங்களில் சிலருக்கு ஏற்பட்டிருக்கும் மோசமான இந்த பாதிப்பை கட்டுப்படுத்த அல்லது முற்றாக இல்லாதொழிக்க தேவையான ஆலோசனைகளை பத்திரிகை மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வழங்க ஆவன செய்யுமாறு இருகரம் கூப்பி வேண்டுகின்றோம்"என எழுதப்பட்டுள்ளது.

வலம்புரியில் எழுதப்படும் தொடர்ச்சியான கட்டுரைகளை விவசாயப் பெருமக்களும் மாணவர்களும் இன்னும் மக்களும் வாசிக்கின்றார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. தொடர்ந்தும் எழுதவேண்டுமான என்னும் வினாவுக்கும் இதில் பதில் தரப்பட்டிருக்கின்றது. நிச்சயமாக வலம்புரியின் ஆசியுடன் தங்களுக்கான பதில் கேட்கப்படும் வினாக்களுக்கு வந்து சேரும் என கூறிக் கொள்வதில் பெருமைப்படுகின்றோம்.

முதலில் கஸ்கியூட்டா பற்றித் தெரிந்து கொள்வது நல்லது. அதனைப்பற்றி நீங்களும் அவதானித்திருக்கின்றீர்கள். இது அடிப்படையில் தாவரங்களில் பற்றிவளரும் படர்ந்து வளரும் முழு ஒட்டுண்ணித் தாவரமாகும். முழு ஒட்டுண்ணி என்பதனால் இதற்கு வேர் இல்லை ஆனால் இன்னொரு தாவரத்தை பற்றிவாழும் கொழுக்கிகள் உண்டு. தனது தண்டினால் தாவரத்தைச் சுற்றி படர்ந்து விரைவாக வளரும் தன்மையுடையது என்பதனால் இதனது மென்மையான வளையும் தண்டில் சிறிய பகுதியிருந்தாலே போதும் தாவரம் வீரியம் கொண்டு படரத்தொடங்கி விடும். மேலும் இதற்கு வேரும் இல்லை இலைகளும் இல்லை என்பதனால் தனக்கு தேவையான சத்துக்கள் அனைத்தையும் வெங்காயத்திலிருந்து உறுஞ்சி எடுத்துக்கொள்ளும். கஸ்கியூட்டா வளர வளர வெங்காயத்தின் சத்துக்கள் அனைத்தையும் அது உறிஞ்சிக்கொள்வதனால் வெங்காயத்திற்கு தேவையான சத்துக்கள் கிடைக்காமல் வெங்காயத்தின் வளர்ச்சியும் வெங்காய குமிழ் வளர்ச்சியும் பாதிக்கப்பட்டு விடும். அதிலும் மேலதிகமாக கஸ்கியூட்டா பூக்களை உருவாக்கி அதிலிருந்து விதைகளும் உருவாகி மேலும் விருத்தியடைவதற்கான சாத்தியக்கூறுகள் உண்டு. கஸ்கியூட்டா ஆனது கூட்டுப்பசளை மூலமும், நடந்துவரும் கால்நடைகளில் ஒட்டியும் பரவலடையும் தன்மையுடையது. அத்துடன் மழைவீழ்ச்சி அதிகமான காலங்களில் இதனது விதைகள் நீரில் மிதந்து இலகுவாக பரவும் தன்மையுடையதால் இத்தகைய களைகள் பற்றி விவசாயப் பெருமக்களுக்கு தெரியப்படுத்தி அவர்களை மேலும் இதைப்பற்றி தெளிவுபெற வைக்கலாம்.

கஸ்கியூட்டாவினது விதைகள் நீண்ட காலம் இருந்து வளரக்கூடியவை என்பதனால் இதனது பரவலை உடனடியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும். இல்லையென்றால் இது மற்றைய வெங்காயம் மற்றும் ஏனைய பயிர்களிலும் பரவி அதனை மேலும் கட்டுப்படுத்த முடியாது போய் விடும். அதனால் கஸ்கியூட்டாவினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு தற்போது பொருட்கள் உள்வாங்கப்பட்டிருப்பதனால் இதுவிடயத்தில் இன்னும் மேலதிகமாக அறிவதற்கு தயாராகவேண்டும்.

கஸ்கியூட்டாவினது முழுமையான இயல்புகளைக் கண்டு கொண்டால் இதனை அனைவரும் சேர்ந்து அழித்தாலன்றி இதனை கட்டுப்படுத்துவது சிரமம். ஒட்டுண்ணி வீரியம் உள்ளதாக இருப்பதனால் கிராம மக்களனைவருக்கும் இது பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். அநேகமாக காணிகளில் இந்த கஸ்கியூட்டா தொற்று ஏற்படாவிட்டால் நாம் கவலைகொள்ளத் தேவையில்லை.

கஸ்கியூட்டா என்னும் தாவர ஒட்டுண்ணியினால் பல வேறு இடங்களுக்கு பரவும் வல்லமை இருப்பதனால் இதனை மேலும் மேலும் வளர்ந்தால் கட்டுப்படுத்துவது கடினமாகு இருப்பதனால் வருமுன் காப்பதே நல்லது. மேலும் எந்தெந்த பயிர்களில் தொற்று ஏற்பட்டிருக்கின்றது என்பதனை அவதானித்து அந்த பயிர்களை நடுகை செய்வது தவிர்ப்பது நல்லது. காணியிலுள்ள களைகளிலும் இது பல்கிப்பெருகும் வல்லமையுள்ளது.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 180



ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு நடுகைக்காக செல்லும் வெங்காயக் குமிழ் அந்தந்த இடங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்படும். விவசாயப் பெருமக்கள் பயன்படுத்தும் உபகரணங்கள், பாதணியுடன் ஒட்டிவரும் மண் என்பனவற்றிலிருந்தும் பூஞ்சணம் பெறப்படுகின்றன. மழைநீர் வரும் போது அதனது தட்டுக்களில் உள்ள விதைகள் விழுந்து முளைத்தால் அதில் கஸ்கியூட்டா மாத்திரம் தனித்து வளரும் தன்மையுடையது.

இக்களை பரவினால் அழிப்பது மிகவும் கடினம். வெங்காயத்தை முழுமையாக பிடுங்கி வெங்காய குமிழை வெட்டியபின் அதன் தாரை எரித்துவிடுவது நல்லது. சிறு துண்டு போதும் விரைந்து வளரும் தன்மை இக்களைக்கு உண்டு. அதனால் அனைத்து விவசாயப் பெருமக்களும் இணைந்து முதலில் அவர்களது பிரதேசத்தில் இக்களையினை முழுவதுமாக அழிக்கவேண்டும்.

தொற்று ஏற்பட்ட பயிர்களின் மடல்களை கிடங்கு ஒன்றினுள் போட்டு எரித்து விடவேண்டும். முயற்சி செய்யுங்கள். நீண்ட பிரயத்தனத்தின்பின் இக்கட்டுப்பாடு சாத்தியமாகும்.

# இராகு-கேது பெயர்ச்சி - 2019

## 13.02.2019 – 31.08.2020

பெப்ரவரி 13 ஆம் திகதி பெயர்ச்சியாகும் இராகு உங்கள் இராசியிலும் கேது சப்தம ஸ்தானத்திலும் சஞ்சரிக்கப் போகின்றனர். முன்னதாகவே சனி 7 இல் இருக்கிறார். கண்டகச் சனியின் ஆதிக்கத்தோடு இப்பொழுது இராகு கேதுக்களும் இணைகின்றன. இப்படி இருக்கும் நேரத்தில் நமது வாழ்க்கைப்பாதை சீராக இருக்குமா? அல்லது செலவுகளை அதிகரிக்க வைக்குமா? என்றெல்லாம் சிந்திக்க வைக்கும். ஆயினும் நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை.

இராகு பகவான், புனர்பூசம் நட்சத்திரக் காலில் குரு சாரத்திலும் பிறகு திருவாதிரை நட்சத்திரக் காலில் சுய சாரத்திலும் தொடர்ந்து மிருகசீரிஷம் நட்சத்திரக்காலில் செவ்வாய் சாரத்திலும் சுமார் 1 1/2 ஆண்டு காலம் சஞ்சரிப்பார். அதேபோல கேது பகவான் உத்தராடம் நட்சத்திரக் காலில் சூரிய சாரத்திலும், பூராடம் நட்சத்திரக் காலில் சுக்கிர சாரத்திலும் மூலம் நட்சத்திரக் காலில் சுய சாரத்திலும் சஞ்சரிக்கப் போகின்றார்.

இந்த நட்சத்திரப் பாதசார அடிப்படையிலும் குருப்பெயர்ச்சி மற்றும் குருவின் அதிசார காலம், சனியின் வக்கிர இயக்க காலத்திற்கு ஏற்பவும் உங்களின் சுய ஜாதகத்தின் தசாபுத்திப்படியும் உங்களுக்கு உரிய பலன்கள் நடைபெறும்.

**ஜென்ம இராகு! சப்தம கேது!**

இதுவரை உங்கள் இராசிக்கு 2 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த இராகு, இப்பொழுது ஜென்ம இராசிக்கு வருகிறார். அஷ்டமத்தில் சஞ்சரித்து வந்த கேது, களத்திர ஸ்தானம் எனப்படும் 7 ஆம் இடத்திற்கு வருகிறார். ஜென்மத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது, பெரிய மனிதர்களின் தொடர்பும் அதன் மூலம் காரிய வெற்றியும் உண்டாகும். அரசுவழியில் அனுகூலமும் ஆதரவும் கிடைக்கும். ஆரோக்கியத்தில் அடிக்கடி அச்சுறுத்தல் ஏற்படும். மருத்துவச் செலவு கூடுகின்றதே என்று கவலைப் படுவீர்கள். மனக்குழப்பம் அதிகரிக்கும். இதுபோன்ற நேரத்தில் தைரியமும் தன்னம்பிக்கையும் அவசியம். உல்லாசப் பயணம் செல்வீர்கள். ஒரு சிலருக்கு வெளிநாட்டு வாய்ப்பு கைகூடும். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்கள் திறமையைப் பார்த்து வியந்து போவார்கள்.

சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேதுவால், குடும்பப் பிரச்சினைகள் கூடுதலாக இருக்கும். அவற்றை எளிமையாகக் கையாள்வது நல்லது. அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் சென்றால் தான் வாய்ப்புகள் வந்து சேரும். திருமணத் தடை அகல அதீத முயற்சி தேவைப்படும். 'நல்ல வரன்கள் வந்து வந்து போகிறதே' என்று கவலைப்படுவீர்கள். குடும்ப இரகசியங்களை வெளியில் சொல்வது, பிறரை விமர்சிப்பது போன்றவற்றால் பிரச்சினை உருவாகலாம். பிறரிடம் உங்களது பொறுப்புகளை ஒப்படைக்காதீர்கள். விரயங்கள் அதிகரிக்கும். வீடு மாற்றங்களும், இடமாற்றங்களும் அமையலாம். எதிலும் முன் யோசனையுடன் செயற்படுங்கள். அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்ள அதிகம் செலவிடும் சூழ்நிலை ஏற்படும்.

அனைத்தும் நல்லவிதமாக நடைபெற வழிபாடு ஒன்றே உங்களுக்கு உதவி புரியும்.

இதற்கிடையில் இன்னும் ஒரு மாதத்தில், 13.3.2019 முதல் 17.5.2019 வரையான கால கட்டத்தில், குரு அதிகார கதியில் தனுசு இராசிக்கு வருகிறார். அங்கிருந்து உங்கள் இராசியை சப்தம பார்வையாக பார்க்கிறார். தனுசு இராசியில் கேதுவோடு இணைகிறார்.




மாற்றங்கள் கிடைக்கும். புதிய முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். உடல் நிலையில் முன்னேற்றம் காணப்படும். அலுவலகப் பணியில் இருந்த பிரச்சினைகள் அகலும். மேலதிகாரிகளின் சலுகை கிடைக்கும். வரவேண்டிய சம்பளப் பாக்கிகள் வந்து சேரும். தொழில் புரிபவர்களுக்கு கூட்டாளிகளால் ஏற்பட்ட பிரச்சினை நீங்கும். புதிய கூட்டாளிகளைச் சேர்த்துக் கொள்ளும் இலாபம் ஈட்டும் நேரம் இது. முருகப்பெருமான் வழிபாடு முன்னேற்றத்திற்கு வித்திடும்.

**சூரிய சாரத்தில் கேது சஞ்சாரம்**
**(13.2.2019 முதல் 16.4.2019 வரை)**

உத்தராடம் நட்சத்திரக் காலில் சூரிய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, விரயங்கள் அதிகரிக்கும். விழிப்புணர்ச்சி அதிகம் தேவைப்படும் காலம்



இல்லறத்தில் ஏற்படும் இடையூறுகள் அகலவும், யோகபலம் பெற்ற நாளில் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை செய்து கொள்வது நல்லது. வெள்ளிக்கிழமை தோறும் விஷ்ணுவையும் லட்சுமியையும் வழிபடுவதும் உகந்தது.

**கவனம் தேவைப்படும் காலம்**

இராகு-கேது பெயர்ச்சியில் தனுசு இராசிக்கு கேது வருகிறார். அங்கிருக்கும் சனியோடு இணைந்து சஞ்சரிக்கப் போகிறார். அப்படி சஞ்சரிக்கும் கால கட்டத்தில் 8.5.2019 முதல் 3.9.2019 வரையான நேரத்தில் சனி வக்கிரம் அடைகிறது. இந்தக் காலத்தில் நீங்கள் மிகமிக கவனமாக செயற்பட வேண்டியது அவசியமாகும். மனக் குழப்பங்கள் அதிகரிக்கும். மாற்றுக் கருத்துடையோரின் எண்ணிக்கை உயரும். இதுவரை நல்லவிதமாக தொழில் செய்து வந்த கூட்டாளிகள் உங்களை விட்டு விலகுவார்கள். கொடுக்கல்-வாங்கல்களில் ஏமாற்றத்தைச் சந்திக்க நேரிடும். தீட்டிய திட்டங்கள் திசை மாறிச் செல்லலாம். குடும்பத்தில் பிரச்சினைகள் வரலாம். கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலம் தான் நன்மைகளை வரவழைத்துக் கொள்ள இயலும். தெய்வீக சிந்தனைகளை அதிகப்படுத்திக் கொள்ளுங்கள். வழிபாடு தான் நல்ல பலன்களை வழங்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்த இராகு- கேது பெயர்ச்சியால் ஏற்றமும், இறக்கமும் காணப் போகிறீர்கள். ஒரு தொகை செலவழிந்த பின்னரே, அடுத்த தொகை வந்து சேரும். குருவின் பார்வைக் காலத்தில் மட்டும் கூடுதல் நன்மை கிடைக்கும். மற்ற காலங்களில் மகிழ்ச்சி நிலைக்க எதையும் யோசித்துச் செய்வதே நல்லது. கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். குடும்ப இரகசியங்களை மூன்றாம் நபரிடம் சொல்ல வேண்டாம். செல்போன் பேச்சுகளால் சில பிரச்சினைகள் வரலாம். குழந்தைகளின் முன்னேற்றத்திற்காக ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். தாய்வழி ஆதரவு திருப்தி தரும். அதேநேரம் சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். பணிபுரியும் பெண்களுக்கு திடீர் இடமாற்றம் ஏற்படும். அது விருப்பமில்லாத வகையிலும் அமையலாம். மேலதிகாரிகளின் ஆதரவு குறையும். மாருதி வழிபாடும், குலதெய்வ வழிபாடும் மகிழ்ச்சியை வழங்கும். (தொடரும்)

## இராசிக்கு இராகு வருவதால் வழிபாடு அவசியம்

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

எனவே அது உங்களுக்கு பொற்காலமாக அமையும். வந்த துயரங்கள் வாசலோடு நின்றுவிடும். வளர்ச்சியில் ஏற்பட்ட தளர்ச்சி மறையும். கேதுவால் ஏற்படும் துயரங்களை இந்த காலகட்டத்தில் குருபகவான் குறைப்பார்.

**குரு சாரத்தில் இராகு சஞ்சாரம்**
**(13.2.2019 முதல் 19.8.2019 வரை)**

புனர்பூச நட்சத்திரக் காலில் குரு சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது, கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். உங்களின் கனவுகள் நனவாகும். கவலைகள் மறையும். நல்ல செய்திகள் நாளும் வந்து சேரும். ஆலயப் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி பெறும். நிலுவைத் தொகை கைக்கு வந்து, கடன்களை கட்டி முடிப்பீர்கள். பிரிந்த தம்பதியர் ஒன்று சேருவதும், பிள்ளைகள் பிறக்கும் வாய்ப்பும் கூட ஒரு சிலருக்கு உண்டு. பொதுவாக இக்காலம் ஒரு பொற்காலம் என்றே சொல்ல வேண்டும். திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறும்.

**சுய சாரத்தில் இராகு சஞ்சாரம்**
**(20.8.2019 முதல் 27.4.2020 வரை)**

திருவாதிரை நட்சத்திரக் காலில் சுய சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது, வருமானம் திருப்திகரமாக இருக்கும். பிற இனத்தவர்களால் பெருமை சேரும். அதிக இலாபம் பெறக்கூடிய ஒப்பந்தங்கள் வரும். திருமணப் பேச்சுகளில் தாமதம் ஏற்பட்டாலும், நல்ல வரன் வந்து அமையும். குடும்பத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களையும் ஆடம்பரப் பொருட்களையும் வாங்கி மகிழ்வீர்கள். வெளிநாட்டு முயற்சியில் இருந்த தேக்க நிலை மாறும். பூர்வீகச் சொத்துப் பிரச்சினை நல்ல முடிவிற்கு வரும். புதிய வாகனங்கள் வாங்க ஆர்வம் காட்டுவீர்கள்.

**செவ்வாய்சாரத்தில்இராகுசஞ்சாரம்**
**(28.4.2020 முதல் 31.8.2020 வரை)**

மிருகசீரிடம் நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது, உத்தியோகத்தில் எதிர்பார்த்த

இது. வழக்குகள் சாதகமாக அமையாது. மறைமுக எதிர்ப்புகள் இருக்கும். தொழிலில் பிறரை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள், மீண்டும் உங்களிடமே வந்து சேரலாம். அலுவலகப் பணியில் இருப்பவர்களுக்கு வீண் பழிகள் வந்து சேரலாம். சக பணியாளர்கள் உங்கள் மீது குறை சொல்லத் தொடங்குவர். மேலதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாகாமல் பார்த்துக்கொள்ளுங்கள். இக்காலத்தில் பிள்ளையாரை வழிபடுவது நல்லது.

**சுக்கிர சாரத்தில் கேது சஞ்சாரம்**
**(17.4.2019 முதல் 23.12.2019 வரை)**

பூராடம் நட்சத்திரக் காலில் சுக்கிர சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, நல்ல பலன்கள் நடைபெறும். குறிப்பாக திருமணப் பேச்சுவார்த்தை கைகூடும். பிள்ளைகளின் வேலைவாய்ப்பு கருதி நீங்கள் எடுத்த முயற்சி வெற்றி தரும். அரசு வேலைக்காக நீங்கள் முயற்சி செய்திருந்தால் அதிலும் அனுகூலம் கிடைக்கும். இடமாற்றம், உத்தியோக மாற்றம் விரும்பியபடி அமையலாம். பயணங்கள் அதிகரிக்கும். வெளிவட்டாரப் பழக்கம் விரிவடையும். ஆபரணங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சுயசாரத்தில் கேது சஞ்சாரம்**
**(24.12.2019 முதல் 31.8.2020 வரை)**

மூலம் நட்சத்திரக் காலில் சுய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, குடும்பத்தில் கவனம் தேவை. குடும்ப உறுப்பினர்கள் உங்கள் குணமறிந்து செயற்பட மாட்டார்கள். வாழ்க்கைத் துணை வழியே விட்டுக்கொடுத்துச் செல்லுங்கள். வாகனப் பழுது அதிகரிக்கும். வீண் விரயங்களில் இருந்து விடுபட சுப விரயங்களை மேற்கொள்ளுங்கள். வீட்டை விரிவு செய்து கட்டும் முயற்சியில் ஈடுபடலாம். உறவினர்களின் இல்லத் திருமண விழாக்களை முன்னின்று நடத்துவீர்கள். பத்திரங்களில் கையெழுத்திடும் பொழுது யோசித்து செய்வது நல்லது.

**வழிபாடு**

ஜென்ம இராகுவால் நன்மைகள் கிடைக்கவும், 7 ஆம் இடத்து கேதுவால்

# முல்லை மாவட்டத்தில் சிறுநீரக நோய் தாக்கத்துக்குள்ளானோர் எண்ணிக்கை அதிகரிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த ஆண்டு வெலிஓயா பிரதேசத்தில் 411 பேரும் மல்லாவிப் பிரதேசத்தில் 362 பேரும் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் புள்ளி விபர தகவல்கள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு, வெலிஓயா ஆகிய பகுதிகளில் சிறுநீரக நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது.

இது தொடர்பில் தகவல் அறியும் சட்டம் மூலம் ஊடாக பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் வெலிஓயா மற்றும் மல்லாவி ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பகுதிகளில் இவ்வாறு சிறுநீரக நோய்த் தாக்கத்திற்கு உள்ளாவோரின் எண்ணிக்கை வருடாந்தம் அதிகரித்துச் செல்கின்றது.

கடந்த 2015ஆம் ஆண்டு வெலிஓயா பிரதேசத்தில் 251 பேரும் மல்லாவிப் பிரதேசத்தில் 143 பேரும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

2016ஆம்ஆண்டில் வெலிஓயா பிரதேசத்தில் 353 பேரும் மல்லாவிப் பிரதேசத்தில் 197 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

2017ஆம் ஆண்டில் வெலிஓயாவில் 425 பேரும் மல்லாவிப் பிரதேசத்தில் 224 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

2018 ஆம் ஆண்டு வெலிஓயா பிரதேசத்தில் 411 பேரும் மல்லாவிப் பிரதேசத்தில் 362 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கடந்த நான்கு ஆண்டுகளில் இந்த நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செலகின்றது.

இந்நிலையில் முல்லைத்தீவு மேற்படி இரண்டு பிரதேசங்களிலும் சிறுநீரக வைத்தியசாலைகளை அமைப்பதற்கான திட்ட முன்மொழிவுகள் மேற்கொள்ளப்பட்டு வெலிஓயாப் பிரதேசத்திலும் மல்லாவிப் பிரதேசத்திலும் இரண்டு சிறுநீரக வைத்தியசாலைகள் அமைக்கப்பட்டன.

மத்திய அரசினால் மேற்கொள்ளப்பட்ட இவ் அபிவிருத்திப் பணிகளை வெலிஓயா வைத்தியசாலை மக்கள் பயன்பாட்டிற்காக கையளிக்கப்பட்டுள்ளபோதும் மல்லாவி பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள சிறுநீரக வைத்தியசாலை இதுவரை அதன் கட்டுமானப்பணிகள் நிறைவுறுத்தப்படாமல் காணப்படுகின்றது.

இதனால் இப்பிரதேசத்தில் தற்போது சிறுநீரகப் பாதிப்புக்குள்ளாகிய 360 இற்கும் மேற்பட்ட சிறுநீரக நோயாளர்கள் சிகிச்சைகளுக்காக வெளிமாவட்ட வைத்தியசாலைகளுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (9-315)




# கிளிநொச்சி மாவட்டத்தில் மீன்பிடி உற்பத்தி வீழ்ச்சி

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் மீன்பிடி உற்பத்தி கடந்த 2017ஆம் ஆண்டைவிட 2018ஆம் ஆண்டில் வீழ்ச்சியடைந்துள்ளதாக திணைக்களப் புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யுத்தத்தின் பின்னரான மீள்குடியமர்வையடுத்து கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது சுமார் நான்காயிரத்து 113 குடும்பங்களைச்சேர்ந்த பதினாறாயிரத்து 801 வரையான மீனவர்கள் கடற்றொழிலை வாழ்வாதாரத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டில் மீன்பிடியில் வீழ்ச்சிநிலை காணப்படுகின்றது.

2018ஆம் ஆண்டில் வாழ்வாதார நோக்கத்திற்காக மேற்கொள்ளப்பட்ட மீனவர்களின் முதலீடுகளுக்காகவும் கிடைத்த மொத்த உற்பத்தி பத்தாயிரத்து 471 மெற்றிக்தொன் கடலுணவுகளாகும்.

ஆனால், 2017ஆம் ஆண்டில் பதினொராயிரத்து 664 மெற்றிக்தொன் கடலுணவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

2017ஆம் ஆண்டுக்கும் 2018ஆம் ஆண்டுக்குமிடையில் ஆயிரத்து 200 மெற்றிக்தொன் உற்பத்தி மாவட்டத்தில் குறைவாக கிடைக்கப்பெற்றுள்ளது.

குறிப்பாக, 2018ஆம் ஆண்டில் கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைதீவு கடற்பகுதியில் கடற்தொழில் செய்வதற்காகவும் அங்கு மக்கள் மீள்குடியேறுவதற்கு அனுமதிக்கப்பட்ட நிலையில் 2017 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட தொழில் பரப்பைவிட, 2018ஆம் ஆண்டில் கூடுதலான பகுதியில் தொழில்கள் மேற்கொள்ளப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (9-315)

# கிளிநொச்சி ஊரியான் பகுதியில் மண் அகழ்வில் ஈடுபடுவோர் மீது நடவடிக்கை

## கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி ஊரியான் பகுதியில் வயல் நிலத்தில் மண்அகழ்வதற்கான எந்த அனுமதிகளும் வழங்கப்படவில்லை என்று கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் வே.ஆயகுலன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கோரக்கன் கட்டு கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட ஊரியான் கமக்கார அமைப்பின் கீழுள்ள வயல் காணி ஒன்றிலிருந்து கடந்த புதன்கிழமை நீண்டகாலம் பழைமை வாய்ந்த மரங்கள் மற்றும் பனைமரங்கள் என்பன அழிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த காணியில் இருந்து முரசுமோட்டை கமக்கார அமைப்பின் தலைவரால் மண் அகழ்ந்தெடுக்கப்பட்டு தனது காணிக்குள் நிரப்பப்பட்டுள்ளதாக கமக்கார அமைப்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை இது தொடர்பில் கிளிநொச்சி கமநல சேவை நிலையத்தின் உத்தியோகத்தர் கதிர்காமநாதனைத் தொடர்பு கொண்டு கேட்ட போது, குறித்த ஊரியான் கமக்கார அமைப்பிற்குட்பட்ட மேற்படி காணியிலோ அல்லது கழிவு காணிகளிலோ மரங்களை அழித்து மண் அகழ்வு மேற்கொள்வதற்கோ வயல்நிலங்களை மண்ணிட்டு நிரப்புவதற்கோ அனுமதிக்கப்படவில்லை.

மேற்குறித்த வேலையை ஒரு அமைப்பினுடைய தலைவரும் சம்மேளனத்தின் பொருளாரும் இவ்வாறான ஒரு வேலையை எந்தவித அனுமதிகளுமின்றி செய்திருப்பது சட்டதிட்டங்களை அவமதிக்கும் செயலாகும் என்றும் இது தொடர்பில் உரிய கமக்கார அமைப்பிடம் இருந்து குறித்த விடயம் தொடர்பில் அறிக்கை கோரியிருப்பதாக தெரிவித்தார்.

கிளிநொச்சி ஊரியான் பகுதியில் மண்அகழ்வதற்கான எந்த அனுமதிகளும் வழங்கப்படவில்லை என்றும் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கமநல அபிவிருத்தி உதவிஆணையாளர்வே.ஆயகுலன் தெரிவித்தார். (9-315)

# குடியேற்றத்திட்ட காணிகளுக்கு முழுமையான பங்கு வழங்க வேண்டும்

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழான சிறுபோகச்செய்கைக்கு இம்முறை குடியேற்றத்திட்டக் காணிகளுக்கு முழுமையான பங்குகள் வழங்கப்பட வேண்டுமென இரணைமடு விவசாயிகள் சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் செ.சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின்கீழான காலபோகஅறுவடைகள்நிறைவடைந்து சிறுபோகச்செய்கைக்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்நிலையில்இந்தவிடயம் தொடர்பில் இரணை மடுக்குளத்தின் கீழான பழம் பெரும் விவசாயியும்சம்மேளனத்தின் முன்னாள் தலைவருமான செ.சிவப்பிரகாசம் கருத்துத் தெரிவிக்கையில்,

இரணைமடுக்குளத்தின் கீழ் ஏழாயிரம் வரையான பங்காளர்கள் உள்ள போதும், மேலும் மூவாயிரம் பங்காளர்கள் இதற்கு உள்ளீர்க்கப்படவேண்டிய கோரிக்கை கடந்த காலங்களில் இருந்து முன்வைக்கப்பட்டு வருகின்றது.

ஆகவே எதிர்காலத்தில் இந்த பங்காளர்களும் இணைத்துக்கொள்ளப்பட வேண்டும். இம்முறை சிறுபோகச்செய்கையின் போது, குடியேற்றத் திட்டங்களுக்காக வழங்கப்பட்ட தலா மூன்று ஏக்கர் காணிகளுக்கும் முழுமையான பங்குகள் வழங்கப்பட வேண்டும். அதாவது, 1958 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றத்திட்டங்களில் பயிர்ச் செய்கைகளுக்காக வழங்கப்பட்ட தலா மூன்று ஏக்கர் வயல் காணிகளும் தற்போது பல்வேறு துண்டுகளாக பங்கிடப்பட்டிருக்கின்றன.

ஆனால், இந்தக்காணிகளுக்கு மூன்று ஏக்கருக்கு 1.5 ஏக்கர் அல்லது ஒரு ஏக்கர் என்ற அடிப்படையில் சிறுபோக பயிர்ச் செய்கைகளுக்கான பங்குகள் வழங்கப்படுகின்றன. தற்போது இரணைமடுக் குளம் புனரமைக்கப்பட்டு போதியளவு நீர் தேக்கப்பட்டுள்ளது.

1994ஆம் ஆண்டில் இரணைமடுக்குளத்தின் நீர் மட்டம் 23 அடியாக இருந்தபோதும், சுமார் 12ஆயிரம் ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

தற்போது குளத்தின் நீர் மட்டம் 34 அடிக்கு மேல் காணப்படுவதுடன், நீர்ப்பாசன வாய்க்கால்களின் கட்டுமானப் பணிகளும் முன்னெடுக்கப்பட்ட நிலையில் பதினேழாயிரம் ஏக்கர் தொடக்கம் பத்தொன்பதாயிரம் ஏக்கர் நிலப் பரப்பில் சிறுபோக செய்கை மேற்கொள்ளமுடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (9-315)

# மாணவர்கள் கௌரவிப்பு



(குருமன்காடு)

வவுனியா தெற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட மாணவர்களுக்கும் வவுனியா வடக்கு வலயத்திற்குட்பட்ட 41 மாணவர்களுக்குமான கௌரவிக்கும் நிகழ்வு வவுனியா மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான மு.சிற்றம்பலத்தின் தலைமையில் நேற்று முன்தினம் மாலை நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட சட்டத்தரணிகள் சங்கமும், வவுனியா கல்வி முன்னேற்றத்தில் ஆர்வம் கொண்ட நல் உள்ளங்களும் இணைந்து ஏற்பாடு செய்த இந்நிகழ்வில் புலமைப்பரிசில் சித்தியடைந்த 10 மாணவர்களும், க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்த 32 மாணவர்களும் கௌரவிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதுடன் வசதியற்ற மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வவுனியா தெற்கு கல்விப்பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன், வவுனியா வடக்கு கல்விப் பணிப்பாளர் திருமதி சுரேந்திரன் அன்னமலர்ஆகியோர் கலந்து கொண்டதுடன் வவுனியா சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்கள், வவுனியா நகரசபை நகர சபை உறுப்பினர்கள், வைத்தியர்கள் வர்த்தகப் பிரமுகர்கள், கல்வியியலாளர்கள், பொது மக்கள், பெற்றோர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (9-250)

# கரைச்சி பிரதேச சபை அபிவிருத்திக்கு 138 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

(கண்டாவளை)

கரைச்சி, கண்டாவளை ஆகிய இரண்டு பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய கரைச்சி பிரதேச சபையின் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காக 138 மில்லியன் ரூபாய் நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது.

வீதிகள், பாலங்கள், கல்வி, மத வழிபாட்டுத்தலங்கள், விளையாட்டுத்துறை என்பவற்றை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் இத்தகைய நிதி மத்திய அரசினால் விடுக்கப்பட்டுள்ளது. ஊரெழுச்சி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கரைச்சி பிரதேச சபையினால் முன்மொழியப்பட்ட வேலைத்திட்டங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் பரிந்துரைக்கு அமைய இந்த நிதிகள் கிடைக்கப்பட்டுள்ளன.

இந்த அபிவிருத்தி திட்டங்கள் நடைமுறைப்படுத்தல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் பிரதேச மட்டத்தில் இடம்பெற்றது.

அதில் இந்த அபிவிருத்தி திட்டம் நிகழும் காலப்பகுதிகள், தொழில்நுட்ப தராதரங்கள், கடந்தகால வேலைத் திட்டங்களில் கற்றுக் கொண்ட படிப்பினையை வைத்து தரம் வாய்ந்த அபிவிருத்தியை மேற்கொள்வது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு கரைச்சி பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்ற 52 மில்லியன் ரூபாய்க்குமேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி பணிகள் சிறப்புற நிறைவு பெற்றிருக்கிற இவ் வேளையில் மீண்டும் 138 மில்லியன் ரூபாய்கள் கரைச்சி பிரதேச சபைக்கு கிடைக்கப் பெற்றிருப்பதன் காரணமாக பல்வேறுவகையான அபிவிருத்தி பணிகளை ஆரம்பிக்கக்கூடியதாக இருக்கிறது. இதற்கான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன்வருகின்ற மார்ச் மாத ஆரம்பத்தில் அனைத்து கிராமங்களிலும் கிராம மக்களின் பங்குபற்றலில் ஆரம்பமாகும் என தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார். (9-315)

# துர்நாற்றம் வீசும் வீதி நடவடிக்கை எடுக்கக்கோரிக்கை



(வவுனியா)

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்குட்பட்ட சமளங்குளம் கிராமத்துக்குச் செல்லும் பிரதான வீதியான உமாமகேஸ்வரன் வீதி அருகே கழிவுகள் கொட்டப்படுவதால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது.

சிறுவர்களின் மலகடகழிவுகள், உணவுக்கழிவுகள், போத்தல்கள், தகரங்கள் போன்றவை பொதுமக்களால் வீதியில் கொட்டப்படுகின்றன.

இவற்றை நாய்களும் கால்நடைகளும் இழுத்து நடுவீதியில் விட்டுச்செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த வீதியால் தினமும் பலநூற்றுக்கணக்கான பொதுமக்கள் பயணம் செய்து வரும் நிலையில் அவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதாகவும் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (9)

# பாரதம்

## ஜம்மு–காஷ்மீர் தாக்குதல்

# ‘சொர்க்கத்திற்கு சென்றிருப்பேன் காஷ்மீர் மக்களுக்கு கடைசி செய்தி’

### தீவிரவாதி ஆதிலின் கடைசிக் காணொலி



காஷ்மீர் புல்வாமாவில் மிக மோசமான தாக்கு தலை நடத்திய ஜெய்ஷ் -இ- முகமது அமைப்பின் தற்கொலைப்படை தீவிரவாதி ஆதிலின் கடைசிக் காணொலி சமூக வலை தளங்களில் வைரலாகி வருகிறது.

ஜம்மு காஷ்மீர் புல்வாமாவில் சிஆர்பிஎப் பேருந்து மீது காரை மோதி குண்டு வெடிக்கச் செய்து நடத்தப்பட்ட பயங்கரத் தாக்குதலில் சிஆர்பிஎஃப் வீரர்கள் 45 பேர் பலியாகியுள்ளனர். கடந்த 10 ஆண்டுகளில் நடந்த மிக மோசமான பயங்கரவாதத் தாக்குதலாக இது நடந்து முடிந்துள்ளது.

இந்தத் தாக்குதலை நடத்தியது தற்கொலைப்படை தீவிரவாதி ஆதில் அகமது தார். ஜெய்ஷ்-இ-முகமது பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த அவர், காக போராவைச் சேர்ந்தவர். தாக்குதல் நடந்த இடத்தில் இருந்து 10 கிலோ மீற்றர் தொலைவில்தான் காகபோரா உள்ளது.

சிஆர்பிஎப் பேருந்தின் மீது 350 கிலோ வெடி பொருட்கள் நிரம்பிய ஸ்கார்பியோ காரை மோதி தாக்குதல் நடத்திய ஆதில் அதில் தானும் உயிரிழந்துள்ளார். தாக்குதல் நடத்தும் முன்பு காணொலி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், "என் பெயர் ஆதில் ஓராண்டுக்கு முன்பாக ஜெய்ஷில் சேர்ந்தேன். ஓராண்டு காத்திருப்புக்குப் பின் ஜெய்ஷில் ஏன் சேர்ந்தேனோ அந்தக் காரணத்தை நிறைவேற்ற வாய்ப்பு கிடைத்தது. இந்த காணொலி உங்களை வந்தடையும் முன் நான் சொர்க்கத்துக்கு சென்றிருப்பேன். காஷ்மீர் மக்களுக்கு என் கடைசி செய்தி இது" என்று தெரிவித்துள்ளார். (4-7)

# ஜம்மு-காஷ்மீர் குண்டுத்தாக்குதல்; அரசியல் தலைவர்கள் கண்டனம்

ஜம்மு - காஷ்மீரில் மத்திய ஆயுத பொலிஸ் படை வீரர்கள் சென்ற வாகனத் தொடரணி மீது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் இதுவரை 40 வீரர்கள் உயிரிழந்துள்ளனர். இந்த கொடூரத் தாக்குதலுக்கு அரசியல் தலைவர்கள் பலரும் தமது கண்டனங்களையும், உயிரிழந்த வீரர்களின் குடும்பத்தினருக்கு இரங்கலையும் தெரிவித்துள்ளனர்.

அந்தவகையில், பயங்கரவாதத் தாக்குதலுக்கு கடும் கண்டனத்தை தெரிவித்துள்ள இந்திய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தாக்குதலில் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாக தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

இந்த தாக்குதல் தொடர்பாக பிரதமர் மோடி தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளார். அத்துடன் வீரர்களின் தியாகம் வீண் போகாது என்றும் அவர் டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதுவர் கென் ஜஸ்டர், பயங்கரவாத தாக்குதலுக்கு கடுமையாகக் கண்டனம் தெரிவித்துள்ளார். அத்துடன் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைக்கு அமெரிக்கா என்றும் துணை நிற்கும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய நிதியமைச்சர் அருண் ஜெட்லி, குறித்த தாக்குதலுக்கு தக்க பதிலடி விரைவில் கொடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், பாதுகாப்புப் படையினர் மீதான போலித்தனமான தாக்குதலை வன்மையாக கண்டிப்பதாக தெரிவித்துள்ளார். அத்துடன் உயிரிழந்த படைவீரர்களின் குடும்பத்தினருக்கு அவர் தனது அனுதாபத்தையும் தெரிவித்துள்ளார்.

மேலும், காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, உயிரிழந்த படை வீரர்களின் குடும்பத்துக்கு தனது அனுதாபத்தை டுவிட்டரில் தெரிவித்துள்ள அவர், காயமடைந்த படை வீரர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி பயங்கரவாத தாக்குதலில் உயிரிழந்த வீரர்களுக்கு இரங்கல் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், "இப்போது அரசியலைப் பற்றி பேசுவது பொருத்தமாகாது என நினைக்கிறேன். பயங்கரவாத தாக்குதலில் உயிரிழந்த 30 சி.ஆர்.பி.எப் வீரர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோன்ற தாக்குதல் எதிர்காலத்தில் நடக்காமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வீரமரணம் அடைந்த வீரர்களின் குடும்பத்திற்கு ஒட்டுமொத்த நாடே தோளோடு தோள் நிற்கும்" என்று தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதல் தொடர்பாக உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அதிகாரிகளுடன் தீவிர ஆலோசனை நடத்தி வருகிறார். (4-7)

# ஜம்மு - காஷ்மீர் தாக்குதலில் எம்மை தொடர்புபடுத்தாதீர்கள்

### இந்தியாவின் குற்றச்சாட்டுக்கு பாகிஸ்தான் மறுப்பு



ஜம்மு-காஷ்மீர் தாக்குதல் மிகப்பெரிய வருத்தத்துக்குரியது, எங்களை அதில் தொடர்புபடுத்தாதீர்கள் என்று இந்தியாவின் குற்றச்சாட்டை பாகிஸ்தான் மறுத்துள்ளது.

ஜம்முவிலிருந்து காஷ்மீருக்கு நேற்று முன்தினம் மாலை சிஆர்பிஎப் வீரர்கள் சென்ற பேருந்து அவந்திபோரா நெடுஞ்சாலையில் சென்றபோது, ஜெய்ஷ் இ முகமது தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதி வெடிபொருட்கள் நிரப்பப்பட்ட காரை மோதச்செய்து தற்கொலைப்படைத் தாக்குதல் நடத்தினான். இந்தத் தாக்குதலில் 45 சிஆர்பிஎப் வீரர்கள் கொல்லப்பட்டனர். 38 வீரர்கள் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலுக்கு பாகிஸ்தான் ஆதரவில் செயற்படும் ஜெய்ஷ் இ முகமது தீவிரவாத இயக்கமே காரணம் என்று இந்தியா குற்றம்சாட்டியது. தங்கள் மண்ணில் செயற்படும் தீவிரவாத அமைப்புகளுக்கு ஆதரவு அளிப்பதை நிறுத்த வேண்டும் என்றும், தீவிரவாதிகளின் புகலிடங்களை அழிக்கவும் வலியுறுத்தியது. அதுமட்டுமல்லாமல் பாகிஸ்தானில் செயற்படும் மசூத் அசார் தலைமையிலான ஜெய்ஷ் இ முகமது தீவிரவாத இயக்கத்தை ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின்படி தடை செய்ய சர்வதேச சமூகத்தினர் ஆதரவு தர வேண்டும் என்றும் இந்தியா கோரிக்கை விடுத்தது.

பாகிஸ்தானில் சுதந்திரமாக செயற்பட மசூத் அசாருக்கு அனைத்து விதமான உரிமைகளையும் அந்நாட்டு அரசு வழங்கியுள்ளது. மசூத் அசார் தன்னுடைய தீவிரவாத செயற்பாடுகளை தடையின்றி செய்யவும், இந்தியாவின் மீது தாக்குதல் நடத்தவும் பாகிஸ்தான் ஆதரவு அளிக்கிறது. இந்தியாவின் பாதுகாப்பை வலுப்படுத்தவும் காத்துக்கொள்ளவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம் என மத்திய அரசு அறிவித்திருந்தது.

இந்த அறிக்கை வெளியிடப்பட்டு நீண்டநேரமாகியும் பாகிஸ்தான் தரப்பிலிருந்து பதிலில்லை. நள்ளிரவில் பாகிஸ்தான் தூதரகத்தின் சார்பில் இந்தியாவின் குற்றச்சாட்டை மறுத்து அறிக்கை வெளியிடப்பட்டது. அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது,

எந்தவிதமான விசாரணையும் இன்றி புல்வாமா தாக்குதலுக்கு பாகிஸ்தானை குற்றம்சாட்ட வேண்டாம். புல்வாமாவில் நடந்த தீவிரவாத தாக்குதல் உண்மையில் ஆழ்ந்த வருத்தத்திற்குரியது. ஜம்மு-காஷ்மீர் பள்ளத்தாக்கில் நடக்கும் வன்முறைச் சம்பவங்களை நாங்கள் தொடர்ந்து கண்டித்து வருகிறோம். இந்தத் தாக்குதல் எந்த வழியில் எந்த காரணத்துக்காக நடத்தப்பட்டிருந்தாலும் அதை வன்மையாகக் கண்டிக்கிறோம்

அதேசமயம், எந்தவிதமான ஆதாரங்களும் விசாரணையும் இன்றி புல்வாமா தாக்குதலுக்கு பாகிஸ்தான் அரசை தொடர்புபடுத்தி இந்திய அரசு பேசுவதையும், இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிடுவதையும் கடுமையாக மறுக்கிறோம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

# சிம்பாவேயில் அணை சுரங்கத்திலிருந்த 25

(ஹராரே)

சிம்பாவே தலைநகர் ஹராரே அருகே கடோமா நகரில் உள்ள 2 சுரங்கங்களுக்கு அருகே கட்டப்பட்டு இருந்த அணை உடைந்ததில் 25 தொழிலாளர்கள் சிக்கிக்கொண்டனர். அவர்கள் அனைவரும் வெள்ளத்தில் மூழ்கி உயிரிழந்திருக்கக்கூடும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆபிரிக்க் நாடுகளில் ஒன்றான சிம்பாவேயில் ஏராளமான தங்க சுரங்கங்கள் உள்ளன. இதில் தலைநகர் ஹராரேயில் இருந்து 145 கி.மீ. தொலைவி

அருகேயுள்



## எல்லை சுவர் வி

# அமெரிக்காவில் அ பிரகடனப்படுத்த ட்ர

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், மெக்சிக்கோ எல்லையில் சுவர் எழுப்ப வேண்டிய நிதியை பெறுவதற்காக அவசர நிலை பிரகடனத்தில் கையெழுத்திட இருக்கிறார்.

இதுகுறித்து வெள்ளை மாளிகை பத்திரிகை செய்தித் தொடர்பாளர் சாரா சாண்டரஸ் தெரிவிக்கும் போது, "அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அவர் முன்பு கூறியது போல எல்லைச் சுவர் எழுப்புவதற்கு தேவைப்படுவதற்கான மசோதாவில் கையெழுத்திடவுள்ளார். இந்த சுவரின் மூலம் நமது நாடு பாதுகாக்கப்படும் என்று நமது ஜனாதிபதி மீண்டும் உறுதியளித்துள்ளார்" என்றார்.

மேலும் இதுகுறித்து நாடாளுமன்ற சிரேஷ்ட உறுப்பினர் மெக்கோனெல், "நான் ஜனாதிபதி ட்ரம்ப்பை சந்தித்தேன். ட்ரம்ப் சுவர் எழுப்புவதற்கு நிதியை பெறுவதற்கான மசோதாவில் கையெழுத்திடவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து அவர் அவசர நிலையை பிரகடனப்படுத்த இருப்பதாகவும் நாடாளுமன்றத்தின் பிற உறுப்பினர்களிடம் கூறினேன். நான் ட்ரம்பின் முடிவுக்கு ஆதரவு அளிக்கிறேன்" என்றார்.



ஆனால் ட்ர

நாயகக் கட்சியி

துள்ளனர். இது

என்று அவர்க

தெற்கு மெ

அமெரிக்காவு

அகதிகள் வரு

சுவர் எழுப்ப வே

# அமெரிக்கர்கள் செல்வதைத் தவிர்க

### ட்ரம்ப் நிர்வாகம் எச்சரிக்கை

(வோஷிங்டன்)

பாகிஸ்தானில் பயங்கரவாத நடவடிக்கைகள் பெருகி வருவதால் அமெரிக்க மக்கள் அங்கு செல்வதை தவிர்க்க வேண்டுமென ஜனாதிபதி ட்ரம்ப் நிர்வாகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாகிஸ்தான் தனது மண்ணில் உள்ள பயங்கரவாதிகளை ஒடுக்குவதில் பாரபட்சம் காட்டுவதாக அமெரிக்கா தொடர்ந்து குற்றம் சாட்டி வருகிறது.

இந்த நிலையில் பாகிஸ்தானில் பயங்கரவாத நடவடிக்கைகள் பெருகி வருவதால் அமெரிக்க மக்கள் அங்கு செல்வதை தவிர்க்க வேண்டுமென ஜனாதிபதி ட்ரம்ப் நிர்வாகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.


இது தொடர்பாக அந்நாட்டு விமான போக்குவரத்துத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

பாகிஸ்தானில் பொதுமக்கள் அதிகம் கூடும் சந்தைகள், வணிக வளாகங்கள், பள்ளி-கல்லூரிகள், வைத்தியசாலைகள் மற்றும் வழிபாட்டு தலங்களில் தாக்குதல் நடத்துவதற்கு பயங்கரவாதிகள் சதி திட்டம் தீட்டி வருகிறார்கள்.

எனவே அமெரிக்க மக்கள் பாகிஸ்தான் செல்லும் முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும். குறிப்பாக பலுசிஸ்தான் மற்றும் கைபர் பக் துங்வா மாகாணங்களுக்கு செல்வதை கட்டாயமாக தவிர்க்க வேண்டும்

# வெளிநாடு

## ணை உடைந்து வெள்ளம் 25 தொழிலாளர்கள் பலி !




தொலைவில் உள்ள கடோமா நகருக்கு அருகேயுள்ள 2 சுரங்கங்கள் நீண்ட காலமாகப் பயன்பாடின்றி கிடக்கின்றன.

இந்த சுரங்கங்களில் அண்மையில் சட்டவிரோதமாக நுழைந்த சிலர் தங்க வேட்டையில் ஈடுபட்டு இருந்தனர். அந்த பகுதியில் பலத்த மழை பெய்ததால், சுரங்கங்களுக்கு அருகே கட்டப்பட்டு இருந்த அணை ஒன்று நேற்று முன்தினமிரவு திடீரென உடைந்தது. அதிலிருந்து கரை புரண்டு ஓடிய வெள்ளம் 2 சுரங்கங்களிலும் நிறைந்தது. இதில் 25 தொழிலாளர்கள் சிக்கிக்கொண்டனர்.

சம்பவம் குறித்து தகவல் அறிந்து விரைந்த சென்ற மீட்புக்குழுவினர் சுரங்கத்தில் இருந்து தண்ணீரை வெளியேற்றி, தொழிலாளர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் அவர்கள் அனைவரும் வெள்ளத்தில் மூழ்கி உயிரிழந்திருக்கக் கூடும் என அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த சம்பவம் சிம்பாவேயில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

## அமெரிக்க-மெக்சிக்கோ எல்லையில் தத்தளித்த குடியேற்றவாசிகள் மீட்பு



அமெரிக்கா மற்றும் மெக்சிக்கோ குடிவரவு அதிகாரிகள் தமது நாடுகளின் ரியோ கிரான்டே எல்லைக்குள் வந்த குடியேற்றவாசிகளை மீட்டுள்ளனர்.

லோபஸ் என்பவரும் அவரது ஐந்து வயது மகனும் கடற்பகுதியில் தத்தளித்துக் கொண்டிருந்த போது மெக்சிக்கோ எல்லைப்பகுதி அதிகாரிகள் அவர்களை மீட்டு அழைத்துச் சென்றுள்ளனர்.

அவர்களுடன் வந்த பெர்ரர் என்பவர் கூறுகையில், நாங்கள் நினைத்தோம், அனைவரும் கடலில் மூழ்கி விடுவோம் என்று என தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிறிதொரு சிறிய குடியேற்றவாசிகளைக் கொண்ட குழுவொன்று டெக்ஸாஸ் ஈகள் பாஸ் பகுதியில் வைத்து அமெரிக்க அதிகாரிகளால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

எல்லைப்பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்ட நிலையிலும், எல்லையை கடந்து, சுமார் 2,000 மத்திய அமெரிக்க புலம்பெயர்ந்தோர் மெக்சிக்கோ நாட்டின் பக்கத்திலுள்ள தற்காலிக குடியேற்ற தங்குமிடங்களை நோக்கி நகர்கின்றனர்.

அவர்களில் பலர் தற்காலிக குடியேற்றங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதுடன், உத்தியோகபூர்வ ஆவணங்களை பெறுவதற்காக காத்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (4-7)

## விவகாரம்

## அவசர நிலையை ட்ரம்ப் தீர்மானம்



ஆனால் ட்ரம்பின் இந்த முடிவை ஜனநாயகக் கட்சியினர் கடுமையாக விமர்சித்துள்ளனர். இது சட்டத்துக்கு முரணானது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தெற்கு மெக்சிக்கோ எல்லை வழியாக, அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாக அகதிகள் வருகின்றனர். இதைத் தடுக்க சுவர் எழுப்ப வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் வலியுறுத்தி வருகிறார்.

ஆனால், இதற்கு ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். இதன் காரணமாக, நிதியாண்டுக்கான செலவினங்களுக்கு ஒப்புதல் பெற முடியாமல் அமெரிக்க நிர்வாகம் முடங்கியது.

ஆனால், சுவர் எழுப்ப நிதி ஒதுக்க ஒப்புதல் தர முடியாது என்று ஜனநாயக கட்சியின் உறுப்பினர்கள் அடங்கிய பிரதிநிதிகள் சபை தொடர்ந்து மறுத்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (4-7)

## ஈராக்கில் இராணுவம் தாக்குதல் 5 ஐ.எஸ்.பயங்கரவாதிகள் பலி!

(பக்தாத்)

ஈராக்கில் இராணுவ வீரர்கள் நடத்திய அதிரடித் தாக்குதலில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் 5 பேர் பலியானார்கள்.

ஈராக்கில் ஆதிக்கம் செலுத்தி வந்த ஐ.எஸ். பயங்கரவாதிகள் முற்றிலும் ஒழிக்கப்பட்டு விட்டதாக கடந்த 2017ஆம் ஆண்டு



இறுதியில் அப்போதைய பிரதமர் ஹைதர் அல்-அபாடி அறிவித்தார்.

ஆனால் அண்மையில் அங்கு ஐ.எஸ். அமைப்பு மீண்டும் தலைதூக்க தொடங்கியுள்ளது. அவர்களை ஒடுக்க ஈராக் இராணுவ வீரர்கள் தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்த நிலையில் மொசூல் நகரிலுள்ள குகைகளில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாக இரகசியத் தகவல் கிடைத்தது.

அதன் பேரில் இராணுவ வீரர்கள் அந்த பகுதியை சுற்றிவளைத்து அதிரடி தாக்குதல் நடத்தினர்.

இதில் 5 பயங்கரவாதிகள் பலியாகினர். மேலும் பயங்கரவாதிகளின் 8 குகைகள் நிர்மூலமாக்கப் பட்டன. (4-7)

## ஆங்சான் சூகியின் ஆலோசகர் படுகொலை; இருவருக்கு மரண தண்டனை வழங்கித் தீர்ப்பு

மியன்மாரில் அந்நாட்டு தலைவர் ஆங் சான் சூகிக்கு ஆலோசகராக இருந்த சட்டத்தரணி கொலை செய்யப்பட்ட வழக்கில் இருவருக்கு அந்நாட்டு நீதி மன்றம் மரண தண்டனை வழங்கியுள்ளது.

இதுகுறித்து ஊடகங்கள் வெளியிட்ட செய்தியில், "மியன்மார் தலைவர் ஆங் சான் சூகியின் ஆலோசகராக இருந்த மியன்மாரின் பிரபல சட்டத்தரணி கோனி மரணத்தில் தொடர்புடைய இருவருக்கும் அந்நாட்டு நீதிமன்றம் மரண தண்டனை விதித்து மியன்மார் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது" என்று செய்தி வெளியிட்டுள்ளது.

மியன்மாரில் பிரபல சட்டத்தரணியாகவும் அரசியல் ஆலோசகராகவும் இருந்தவர் கோனி. இவர் மியன்மாரின் சிறுப்பான்மையினராகவுள்ள முஸ்லிம் சமூகத்தைச் சார்ந்தவர். இவருக்கு தொடர்ந்து கொலை மிரட்டல்கள் வந்த நிலையில் கடந்த 2017 ஆம் ஆண்டு மியன்மாரிலுள்ள யான்கோன் விமான நிலையத்தில் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார். (4-7)

## ள் பாகிஸ்தான் ிர்க்க வேண்டும்

என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

க

## எகிப்தில் 2034 ஆம் ஆண்டுவரை ஜனாதிபதி பதவியில் இருக்கலாம்

### நாடாளுமன்றம் ஒப்புதல்



(கெய்ரோ)

எகிப்திய நாடாளுமன்றம், 2034 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதி அப்டெல் ஃபத்தா அல்-சிசி பதவியில் நிலைத்திருக்க அனுமதிக்கும் மற்றும் நீதித்துறையில் அவரது கட்டுப்பாட்டை வலுப்படுத்தும் அரசியலமைப்பு திருத்தங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வின் போது முன்மொழியப்பட்ட மாற்றங்களுக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

முன்மொழியப்பட்ட மாற்றங்கள் மேற்கத்தேய நட்பைக் கொண்ட அரபு நாட்டில் வசிக்கும் ஏறக்குறைய 100 மில்லியன் மக்களை பிரித்துள்ளன.

இந்த நிலையில், நாட்டில் பாரிய அபிவிருத்தி செயற்றிட்டங்கள் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு தமது ஜனாதிபதிக்கு கால அவகாசம் வழங்குவதற்கு தாம் எண்ணியுள்ளதாக ஜனாதிபதி சிசியின் ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும், அவரை விமர்சிக்கும் ஒரு தரப்பினர் மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

அந்த வகையில், எகிப்தின் நவீன வரலாற்றில் சுதந்திரம் தொடர்பான இடை விடாத அடக்குமுறைக்கு தலைமை தாங்கும் ஒரு ஜனாதிபதியின் கைகளில் அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பது கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயம்என்று உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் குழுக்களால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (4-7)

## உலகிலேயே மிகப்பெரிய விமானத் தயாரிப்பு நிறுத்தம்

### ஏர்பஸ் நிறுவனம் அறிவிப்பு

(துலூஸ்)

உலகின் மிகப்பெரிய 'சுப்பர்ஜம்போ ஏ-380' விமானங்கள் தயாரிப்பதை 2021 ஆம் ஆண்டு நிறுத்தவுள்ளதாக ஏர்பஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பாவை சேர்ந்த பிரபல விமானத் தயாரிப்பு நிறுவனம் 'ஏர்பஸ்'. உலகிலேயே மிகப்பெரிய விமானமான 'சுப்பர்ஜம்போ ஏ-380' ரக விமானங்களை இந் நிறுவனம் தயாரித்து வந்தது.

500 பயணிகள் அமரும் வண்ணம், 2 அடுக்குகளை கொண்ட 'சுப்பர் ஜம்போ ஏ-380' விமானங்கள் கடந்த 2008ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டிலுள்ளன.

இந்த நிலையில், 'சுப்பர் ஜம்போ ஏ-380' விமானங்கள் தயாரிப்பதை 2021ஆம் ஆண்டு நிறுத்த உள்ளதாக ஏர்பஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

'சுப்பர்ஜம்போ ஏ-380' விமானங்களை தயாரிக்க செலவு அதிகம் என்பதாலும், கடந்த சில ஆண்டுகளில் அதன் கொள்முதல் மிகவும் குறைந்துவிட்டதே இதற்கு காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

# ஸ்திரமான தேசிய தலைமைத்துவம் சுபீட்சமான நாட்டை உருவாக்கும்

## சபாநாயகர் கரு எதிர்பார்ப்பு



(கொழும்பு)

அடுத்த பத்தாண்டுகளில் நாட்டில் பலம் மிக்கதும் ஸ்திரமானதுமான தேசிய தலைமைத்துவம் ஏற்படுத்தப்பட்டால்தான் நீண்டகால அரசியல் சவால்கள் மற்றும் ஏனைய விடயங்களை எதிர் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்று சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

"ஸ்திரமும் சுபீட்சமுமான இலங்கையை உருவாக்க வேண்டுமானால், மக்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். இதனைச் செய்ய வேண்டுமானால் நாம் அனைவரும் கைகோர்க்க வேண்டும்" என்று சபாநாயகர் மேலும் கூறினார்.

"71 வருடங்களுக்கு முன் இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த போதிலும், பலம் மிக்க தேசிய தலைமைத்துவம் இன்னும் நாட்டில் உருவாகவில்லை. எமது நாட்டில் இயற்கை வளமும் மனித வளமும் நிறைந்துள்ளது.

எனவே, அதனை அமைதியும் சுபீட்சமும் உள்ளதாக மாற்றுவது ஒன்றும் சிரமமான விடயமல்ல. நாட்டில் பலம்மிக்க தேசிய தலைமைத்துவம் இருந்தால்தான் இது சாத்தியமாகும். அவ்வாறான தலைமைத்துவம் இன, மத பேதமின்றி அனைவரையும் சமமாக மதிப்பதாக இருக்க வேண்டும்" என்று அவர் தெரிவித்தார்.

பவ்ரல் அமைப்பின் 30 ஆவது வருட நிறைவு நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே சபாநாயகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் சுதந்திரமும் நியாயமுமான தேர்தல் நடப்பதை உறுதிசெய்ய பவ்ரல் வழங்கும் பங்களிப்பை சபாநாயகர் பாராட்டினார்.

அத்துடன், 1999 இல் வயம்பவில் நடைபெற்ற தேர்தல் மிகவும் மோசமான தேர்தலாக இருந்தது என்றும் அத்தேர்தலில் வாக்காளர்களின் ஆள் மாறாட்டம், தேர்தல் அதிகாரிகளை அச்சுறுத்தியமை மற்றும் ரவுடித்தனம் ஆகியவை பரந்த அளவில் இடம்பெற்றதாகவும் தெரிவித்த அவர் பவ்ரல் அமைப்பு எப்போதுமே பக்கம் சாராது நடு நிலையில் செயற்படுவதாகவும் மேலும் சுட்டிக்காட்டினார். (7)

# மத்திய மாகாணத்திற்கான பொதுச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் நியமனம்





(கொழும்பு)

மத்திய மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் புதிய உறுப்பினர்களுக்கான நியமனங்களை நேற்று முன்தினம் மத்திய மாகாண ஆளுநர் வழங்கி வைத்தார்.

கடந்த காலங்களில் மத்திய மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் பணி தொடர்பான அதிருப்தியால் 6 ஆம் திகதியன்று மத்திய மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு கலைக்கப்பட்டதாக மத்திய மாகாண ஆளுநர் அறிவித்திருந்தார்.

அதனை தொடர்ந்து புதிய உறுப்பினர்களை நியமித்ததாகவும் இனிவரும் காலங்களில் சிறப்பான பணி தொடரும் எனவும் தெரிவித்தார்.

இக் குழுவின் புதிய தலைவராக சட்டத்தரணி ரீ.ஹரீந்திரநாத் துனுவிலவும் ஏனைய உறுப்பினர்களாக குணபால தென்னகோன், வைத்திய கலாநிதி கிரிஷான் ராஜ் சுந்தரம், டபிள்யூ.எம்.எஸ்.டீ. வீரகோன், என்.டீ.கமல் பியும் சிறி, சட்டத்தரணி ஏ.எம்.வைஸ் மற்றும் ஏ.எம்.ஆர்.பி.தென்னகோன் உள்ளிட்ட ஏழு பேர் கொண்ட புதிய மத்திய மாகாண பொது சேவை ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. (7)

# பிள்ளையானை சிறையில் சந்தித்த மகிந்த அணியினர்



(கொழும்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தனை பொது ஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சென்று சந்தித்துள்ளனர்.

மட்டக்களப்புக்கு இன்று விஜயம் மேற்கொண்டுள்ள அந்தக் கட்சியின் தேசிய பிரதி அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.அமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான ரொசான் ரணசிங்க, நிமால் லங்கஸா ஆகியோர் நேற்று சிறைச்சாலைக்குச் சென்று முன்னாள் முதலமைச்சரை பார்வையிட்டனர். இதன்போது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தனின் நலம் விசாரித்த அவர்கள் கலந்துரையாடல்களையும் நடத்தியுள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தனும் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மெட்ரிக் கடிகாரம்

எனக்குத் தெரிந்த ஒரு தாத்தா இருந்தார். அவரிடம் போறது என்றால் எங்களுக்கு எல்லாம் மிகவும் பயம். ஒன்றும் அடிக்க மாட்டார்! ஆனால் அதைவிட கஷ்டமான ஒரு காரியத்தை செய்வார். அதாவது கணக்குப் போடுவார்...மனக்கணக்கு!

புதிர் மாதிரி எதையாவது சொல்லி அதுக்கு விடை என்ன என்று கேட்பார். மூளைக்குப் பயிற்சி கொடுக்கின்றாராம்!

''பேசாமல் தெருவில் கிட்டிப்புள்ளு விளையாடிக் கொண்டு இருந்திருக்கலாமே... இவரிடம் வந்து மாட்டிக் கொண்டோமே என்று தோன்றும்! மாட்டிக் கொண்டதுக்குப் பிறகும் என்ன செய்வது...'' கொஞ்சநேரம் யோசிக்கிறது மாதிரி யோசித்து பின்பு ஒன்றும் தெரியவில்லை தாத்தா என்று சொல்லி அவர் சொல்லுகின்ற விளக்கத்தை பொறுமையாகக் கேட்டுக் கொண்டு அதுக்குப் பிறகுதான் தப்பித்து வரமுடியும்!

அப்படி என்ன அவர் பெரிய கணக்கை போட்டுவிடுவார் என்கிறீர்களா?

உதாரணத்திற்கு ஒன்று சொல்கின்றேன். உங்களாலே முடியுதா பாருங்களேன்.

காலே முக்கால் காசுக்கு நாலே அரைக்கால் வாழைக்காய்! காசுக்கு எத்தனை காய்?

இது அவர் போடுகின்ற மனக்கணக்கு! யாருக்கு பதில் தெரியும்?

வீசம்–மாகாணி கணக்கையெல்லாம் விட்டுவிட்டு வெகுதூரத்திற்கு வந்துவிட்டோம். இப்ப மெட்ரிக் சிஷ்டத்திற்கு வந்துவிட்டோம். அதுக்கும் கல்குலேட்டர் தேவைப்படுகின்றது. இப்ப போய் காலே அரைக்கால் அரையே அரைக்கால் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். அது எப்படி சேர்?

இந்தக் காலத்தில் பிள்ளைகளுக்கு இப்ப எல்லாம் பத்து பத்தா சொன்னாத்தான் புரியும்!

கொஞ்சக்காலத்திற்கு முன்னால் நம்ம ஊரிலே ரூபாய்க்கு 16 அணா! இப்ப ரூபாய்க்கு 100 காசு!

மைல் கணக்கு எல்லாம் மாறி இப்ப கிலோ மீற்றர் கணக்குக்கு வந்தாச்சு!

அந்த வகையிலே ஒரு லேட்டஸ்ட் யோசனையை இப்ப சிலபேரு கொண்டு வருகின்றார்கள்!

அதாவது மணிக் கணக்கையும் மெட்ரிக் சிஷ்டத்திற்கு கொண்டுவந்து விட்டால் என்ன என்கிறார்கள்!

இப்ப எல்லாம் ஒரு நாளைக்கு பகல் 12 மணி. இராத்திரி 12 மணி. இதை இனிமே பகல் 10 மணி. இராத்திரி 10 மணி என்று மாற்றிக் கொண்டால் என்ன என்பது இவர்கள் கேள்வி!

அதேமாதிரி ஒரு மணிக்கு 100 நிமிடம் ஒரு நிமிடத்திற்கு 100 விநாடி!

இது நடைமுறைக்கு வந்துவிட்டால் இனிமேல் மெட்ரிக் கடிகாரம் புழக்கத்திற்கு வந்துவிடும்!

மெட்ரிக் கடிகாரம் என்றால் வேறு ஒன்றும் இல்லை..

இப்ப இருக்கின்ற கடிகாரத்தை 12 ஆக பிரித்திருக்கிறார்கள். அதிலே 10 பிரிவா பிரித்திருக்கிறார்கள் அவ்வளவு தான்! இப்ப 12 என்று இருக்கிற இடத்திலே அப்ப பத்தென்று இருக்கும்! அதாவது 10 மெட்ரிக் மணி!

மத்தியானம் 12 மணி. நடுராத்திரி 12 மணி என்று சொல்லுகிறோம் அல்லவா அது எல்லாம் பகல் 10 மணி. நடு இரவு 10 மணி என்று ஆகிடும்! இப்ப உள்ள கடிகாரத்திலே டயலை மட்டும் மாற்ற வேண்டியிருக்கும்! அவ்வளவுதான்!

மெட்ரிக் கடிகாரத்திலே ஒரு முள் இருந்தாலே போதும். அதாவது சின்ன முள்!

இப்ப மணி என்ன என்று யாராவது கேட்டால் நீங்களே பாத்துக் கொள்ளுங்களேன்! என்று கையை நீட்ட வேண்டியதில்லை!

நாங்களே சுலபமாக பாத்துச் சொல்லலாம்!

இருக்கிறது ஒரு முள்ளு! அது எங்கே இருக்கின்றது என்று பார்க்க வேண்டியது... ஏழு மணியைத் தாண்டி 40 ஆவது பிரிவிலே இருக்கின்றதா? உடனே 7.40 என்று சொல்லிவிட வேண்டியதுதான். எலக்ட்ரோனிக் வகை கடிகாரத்திலே இந்த முறையை புகுத்துவது இன்னமும் சுலபம்!

வாழ்க்கையிலே எல்லாவற்றையும் மிகவும் சுலபமாக்கிக் கொண்டு வருகின்றோம். உயிரைப் போக்குவது உட்பட!

நீட்டல்–முகத்தல்–நிறுத்தல் அளவு எல்லாவற்றையும் பத்து பத்தா ஆக்கியாச்சு!

இனிமேல் காலம் தான் பாக்கி! அதிலேயும் கை வைக்க வேண்டியது தானே!

ஒரு இரகசியம். இயற்கையைப் புரிந்து கொண்டவர்களுக்கு எல்லாமே சுலபம் தான்! இயற்கையே மெட்ரிக் சிஷ்டத்திற்கு சப்போட் தான் சேர்! அதனாலே தான் கையிலே பத்து விரல். காலிலே பத்து விரல்.


கையிலே 16. காலிலே 24 என்று இல்லை!

ஒரு மாமனார்– மாப்பிள்ளைக்கு பத்து மோதிரம் செய்து போட்டு விடுகின்றேன். ஆனால் கை பூறாகவும் மோதிரம் போடுவதற்கு சிரமம் என்றார். என்ன காரணம்?

அந்த மாப்பிள்ளைக்கு மொத்தம் 12 விரல். ஒரு கைக்கு ஆறு வீதமாக!

சில சமயம் இயற்கையோடு மெட்ரிக் சிஷ்டத்திலேயும் இப்படி சில தவறுகள் ஏற்பட்டுப் போவது அதனாலே கஷ்டப்படுவது மாமனார்கள் தான்!

## ஊடகவியலாளர்களுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பில் வவுனியாவில் கலந்துரையாடல்



ஊடகவியலாளர்கள் எதிர் நோக்கிய பிரச்சினைகளுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று ஊடக அமைச்சு மற்றும் தகவல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நேற்று வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

வவுனியா அரச அதிபர் ஐ.எம்.ஹனீபா தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் ஊடக அமைச்சின் பணிப்பாளர் ஜெயந்த, தகவல் திணைக்களப் பணிப்பாளர் ஹசன், மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ் குமார் மற்றும் வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை ஊடகவியலாளர் உடல், உள ரீதியாகவும் பொருள் ரீதியாகவும் ஏற்பட்ட பாதிப்புக்கள், இழப்புக்கள், அச்சுறுத்தல்கள் குறித்து ஊடக அமைச்சினால் தகவல்கள் பெறப்பட்டு அதற்கான இழப்பீடுகள் வழங்கப்படவுள்ளதாக ஊடக அமைச்சின் பணிப்பாளர் தெரிவித்திருந்ததுடன், அவ்வாறான பாதிக்கள் குறித்து விண்ணப்பிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்தும் ஊடகவியலாளருக்கு விளக்கமளித்திருந்தார். அத்துடன் ஊடகவியலாளர்கள் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதுடன், ஊடகவியலாளருக்காக வழங்கப்படுகின்ற வங்கிக் கடன்களுக்கு அரச உத்தியோகத்தர்களின் பிணை அவசியமில்லை என்பதையும் இதன்போது வலியுறுத்தியிருந்தார்.

இதேவேளை, 2006 தொடக்கம் 2015 வரையான காலப்பகுதியில் பாதிப்படைந்த ஊடகவியலாளருக்கான இழப்பீடுகளை வழங்க நாடு பூராகவும் ஊடக அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-250)

### ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் உள்ளிட்ட

# 13 கோரிக்கைகள் அடங்கிய மகஜர் அமைச்சர் அர்ஜுனவிடம் கையளிப்பு

(கரணவாய்)

வழித்தடத்தில் பேருந்துச் சேவையை நடத்தாத சாலைகள் அவ் வழித்தடத்திற்கான பருவகால சீட்டை வழங்குகின்றன. எனவே இதனை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் உள்ளிட்ட 13 கோரிக்கைகள் அடங்கிய மகஜரைப் போக்குவரத்து மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சரிடம் பருத்தித்துறை சாலை முகாமையாளர் கந்தசாமி கையளித்தார்.

இ.போ.ச.பருத்தித்துறை சாலைக்கு நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் போக்குவரத்து மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்க விஜயம் மேற்கொண்டிருந்தார்.

அவரிடம் பருத்தித்துறை சாலை முகாமையாளர் கந்தசாமி 13 கோரிக்கை அடங்கிய மகஜரைக் கையளித்தார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சேவையில் ஈடுபடுவதற்கான புதிய பேருந்துகள் தேவை.

நாள் சம்பளத்திற்கு கடமையாற்றும் 12 ஊழியர்களை நிரந்தரமாக்க வேண்டும்.

சாலை பரிசோதகர் 13 பேர் நிரந்தரமாக்கப்பட வேண்டும்.

வவுனியா, முல்லைத்தீவு ஆகியவற்றிற்கான இரவுத் தங்கல் கடமைகளை ஆரம்பிக்க ஆவன செய்ய வேண்டும்.

பருத்தித்துறை-கண்டிக்கான பேருந்துச் சேவையை ஆரம்பிக்க ஆவன செய்ய வேண்டும்.

பருத்தித்துறை - முல்லைத்தீவுக்கான பேருந்துச் சேவையை முல்லைத்தீவு சாலையினர் மேற்கொள்வதில்லை. ஆனால் அவர்கள் பருத்தித்துறை - முல்லைத்தீவுக்கான பருவகாலச் சீட்டை வழங்குகிறார்கள் அது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

இதே போன்று பருத்தித்துறை -கிளிநொச்சிக்கான பேருந்துச் சேவையை கிளிநொச்சி சாலையினர் மேற்கொள்வதில்லை. ஆனால் அவர்கள் பருத்தித்துறை - கிளிநொச்சிக்கான பருவகாலச் சீட்டை வழங்குகிறார்கள். அது தடுத்து நிறுத்த வேண்டும்.

ஊழியர்களுக்கான ஓய்வு அறை, மலசலகூடங்கள் அமைக்கப்பட வேண்டும்.

18 சாரதிகள், 7 காப்பாளர்களுமாக மொத்தம் 25 ஊழியர்கள் 1000 ரூபாய் வேதனத்தில் கடமை செய்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்க வேண்டும்.

சாலை முழுவதுமாக அரை சுற்றுமதில் அமைத்து புனரமைக்க வேண்டும்.

மோட்டார் சைக்கிள்கள் நிறுத்துவதற்கு வாகனத் தரிப்பிடம் அமைக்க வேண்டும்.

கொழும்பு சேவையில் ஈடுபடுவதற்கு குளிரூட்டப்பட்ட நான்கு பேருந்துகள் வேண்டும் போன்ற கோரிக்கைகள் அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-60)

# பாடசாலை மாணவர்களுக்கு ஆய்வு திறமையையும் கற்பிப்பது அவசியம்

### கோத்தபாய அறிவுரை




(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு சிறு வயது முதலே கல்வி உள்ளிட்ட ஆய்வு திறமையையும் கற்பிப்பது அவசியமாகும் என பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

# மைத்திரியால் மீண்டும் வெற்றிபெற முடியாது

### ஜே.வி.பி.கணிப்பு



(கொழும்பு)

தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் நிறைவடைவதற்கு முன்னதாக ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிவிப்பு வெளியிடக்கூடும் எனத் தாம் கருதுவதாக ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பலாங்கொடை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொதுமக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ரில்வின் சில்வா மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவாராயின் அவரால் வெற்றிபெற முடியாது.

ஐக்கிய தேசியக் கட்சியால் அவருக்கு ஆதரவு வழங்கப்படமாட்டாது.

இந்நிலையில், அவர் மகிந்த ராஜபக்ஷவின் உதவியை நாடவேண்டும் என ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

எனினும், மகிந்தவின் கூடாரத்தில் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் பிரச்சினை உள்ளது.

இந்நிலையில், ஜனாதிபதித் தேர்தலை உரிய காலத்திற்கு முன்னதாக நடத்தினால், தற்போதைய ஜனாதிபதியே, ஜனாதிபதி வேட்பாளராக முடியும் என ஜனாதிபதி கருதக்கூடும் என ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். (இ-7)

### 290 நாட்களில் மாற்றம்

# பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளக்கூடிய தலைவர் தான் நாட்டிற்கு அவசியம்-டளஸ்



(மாத்தறை)

நாட்டைப் பற்றியும் நாட்டின் எதிர்காலச் சந்ததியினரைப் பற்றியும் எண்ணிச் செயலாற்றும் தலைவரொருவர், இந்த நாட்டுக்குத் தேவையெனத் தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும, இன்று இந்த நாட்டின் பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளக்கூடிய தலைவரொருவரே அவசியமென்றும் இன்னும் 290 நாட்களில், நாட்டை மாற்றக் கூடிய முடிவொன்றை எடுக்கக்கூடியதாக இருக்குமென்று நம்புவதாகவும் தெரிவித்துள்ளார். மாத்தறை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்று இந்த நாட்டுக்கு, அரசியல் கட்சியொன்று அவசியமில்லை என்றும் ஒவ்வொரு வர்ணங்களைக் கொண்ட கொடிகளுக்கன்றி, தேசிய கொடிக்கே பிரச்சினை ஏற்பட்டுள்ளதென்றும், அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)

# "ஆசாபாரி" மீது துப்பாக்கிச் சூடு

(கொழும்பு)

கொழும்பு கொட்டாஞ்சேனை மல்வத்தை பிரதேசத்திலுள்ள வீட்டில் வசித்து வந்த கஞ்ஜிபானி என்ற பெண் மீது நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அப்பெண் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

39 வயது "குடு சூட்டி" எனும் பெயரில் அறிமுகமாகியுள்ள ஆசாபாரி எனும் பெண்ணே இவ்வாறு காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இப்பெண்ணின் முதுகு மற்றும் தலைப் பகுதிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# ஆட்டோ சாரதிகளுக்கு தொழிற்பயிற்சி

(கொழும்பு)

இவ்வருடம், ஒரு இலட்சம் ஆட்டோ சாரதிகளுக்கு தொழிற்பயிற்சிகளை வழங்க, தேசிய தொழிற்பயிற்சி அதிகாரசபை தீர்மானித்துள்ளது.

முதற்கட்டமாக 2,000 பேருக்கு இவ்வாறு தொழிற்பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக, அந்த அதிகாரசபையின் தலைவர் சாரங்க அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை ரீதியில், 78 இலட்சம் ஆட்டோக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் 10 இலட்சத்துக்கு மேற்பட்டோர் தமது வாழ்வாதாரத் தொழிலுக்காக ஆட்டோக்களைப் பயன்படுத்தி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தொழிற்பயிற்சியில் இணைந்துகொள்ள விரும்புவோர் 1951 என்ற இலக்கத்துக்கோ அல்லது 011-228 8782 என்ற தொலைபேசி இலக்கத்துக்கோ அழைப்பை ஏற்படுத்தி பதிவுகளை மேற்கொள்ள முடியுமென, தொழிற்பயிற்சி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

# வரணி வைத்தியசாலைக்கு குளிரூட்டி சாதனங்கள்



(வரணி)

வரணி பிரதேச வைத்தியசாலைக்கு நோயாளர் நலன்புரிச் சங்கத்தினரின் வேண்டுகோளை ஏற்று ஐக்கிய இராச்சிய வரணி வாழ் மக்கள் நலன்புரிச் சங்கத்தினரால் குளிரூட்டி உபகரணங்கள் கடந்த 12 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் அச்சுதனிடம் அதன் இணைப்பாளர்களில் ஒருவரான த.செல்வக்குமாரால் கையளிக்கப்பட்டன.

இந்த குளிரூட்டி சாதனங்களின் பெறுமதி ரூபா 3 இலட்சமாகும். இவை பிரதேச வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் வைத்தியசாலை பொறுப்பதிகாரியின் அலுவலக அறை போன்றவற்றுக்கு பொருத்தப்படவுள்ளன.

இதன் மூலம் நோயாளர்களின் நலன்கள் மேலும் பேணப்படும் என நலன்புரிச் சங்கத்தினர் தெரிவித்தனர். (இ-103)




யாழ்.வதிரி வடக்கு மெ.மி.த.க.பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அதிபர் சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன் கலந்து கொண்டு சிறப்பித்தார். (படங்கள்:- மகாலிங்கம்)

# போர்த்துக்கீசர் - ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணப் பட்டினம் - ஒரு பார்வை

05

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.




### அம்மன்னீல் (Hammanheil) கோட்டை

1620 ஆம் ஆண்டில் போர்த்துக்கீசர் யாழ்ப்பாண இராச்சியத்தை முழுமையாகக் கைப்பற்றித் தமது ஆட்சியின்கீழ் கொண்டுவந்த பின்னர், பாக்கு நீரிணைப்பகுதியில் இருந்து யாழ்ப்பாண நகரத்தையொட்டி அமைந்துள்ள நீரேரிப் பகுதிக்குள் வருவதற்கான கடல்வழியின் பாதுகாப்புக்காக அம்மன்னீல் (Hammanheil) கோட்டையை அமைத்தனர். கடற்கோட்டை என்று அழைக்கப்படும் இக் கோட்டை காரைநகர் தீவுக்கும் வேலணைத் தீவுக்கும் இடையில் அமைந்துள்ள ஒடுங்கிய கடற்பகுதியில் உள்ள சிறிய மணற்திட்டு ஒன்றில் அமைந்துள்ளது. ஒல்லாந்தர் காலத்திலும் யாழ்ப்பாணத்தின் பாதுகாப்புக்கு இன்றியமையாததாக இந்தக் கோட்டை கருதப்பட்டு திருத்தப்பட்டு முற்றிலும் ஒல்லாந்தரைக் கொண்ட படையினர் இக்கோட்டையில் நிறுத்தப்பட்டனர்.




அம்மன்னீல் (Hammanheil) கோட்டை தற்போதைய தோற்றம்



அம்மன்னீல் கோட்டையின் அமைப்பு (17ம் நூற்றாண்டு)

இக் கோட்டை எட்டுப் பக்கங்களைக் கொண்ட பல்கோண வடிவம் கொண்டது.


1796 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் பிரித்தானியரின் கைக்கு வந்தபோது, இக் கோட்டையும் அவர்களின் ஆளுகைக்குள் வந்தது. எனினும் இவர்கள் காலத்தில் இதன் பாவனை தொடர்பான முக்கியத்துவம் குறைந்துவிட்டது. 1930களில் இது நோயாளர்களைத் தனிமைப்படுத்தும் நிலையமாகப் பயன்பட்டதாக நெல்சன் என்பவர் தனது நூலில் (Nelson, Dutch Forts of Sri Lanka) குறிப்பிட்டு உள்ளார். தற்பேர்து இது கடற்படையினரால் ஹோட்டலாக மாற்றப்பட்டுள்ளது.




காரைநகர்த் தீவுக்கும் வேலணைத் தீவுக்கும் இடையில் அமைந்துள்ள அம்மன்னில் கோட்டை

### ஆனையிறவுக் கோட்டை

1760-1776ஆம் ஆண்டில் ஒல்லாந்தர் இக் கோட்டையை நிறுவினர். இக் கோட்டை அமைக்கப்பட்ட காலத்தில் ஆனையிறவுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையே ஆழம் குறைவான நீரேரி இருந்தது. கோடை காலத்தில் மட்டும் நீர் வற்றிக் குறுகிய நிலத்தொடர்பு இருக்கும் இப்பகுதியூடாக முறையான சாலைகள் எதுவும் இருக்கவில்லை. வற்றுக் காலத்தில் ஏற்றுமதிக்காக வன்னிப் பகுதியில் இருந்து கொண்டுவரப்படும் யானைகளை இவ்வழியூடாகவே ஊர்காவற்றுறைக்குக் கொண்டுவந்தனர். இது தவிர பிற வணிகப் பொருட்களும் இவ்விடத்தினூடாக வன்னிக்கும், யாழ்.குடாநாட்டுக்கும் இடையே எடுத்துச் செல்லப்பட்டன. இவ்வாறான வணிகக் கட்டுப்பாட்டுத் தேவைகளுக்காகவே ஒல்லாந்தர் ஒரு கோட்டையை ஆனையிறவில் நிறுவினர். இக் கோட்டையின் தள அமைப்பு ஏறத்தாழ சதுர வடிவானது.




ஆனையிறவுக் கோட்டை கோட்டையின் வடிவ அமைப்பு

பிரித்தானியர் இதன் ஒரு பகுதியைச் சிறிய ஓய்வுவிடுதியாக (rest house) மாற்றியமைத்தனர். ஓய்வுவிடுதியின் அமைப்புக்காகத் தென்புறச் சுவரும், மேற்குப் புறச் சுவரின் பெரும் பகுதியும் உடைக்கப்பட்டன. கொத்தளச் சுவர்கள் இருந்தவாறே பேணப்பட்டாலும், வடமேற்குக் கொத்தளப் பகுதியில் நிரப்பியிருந்த மண் அகற்றப்பட்டு அப்பகுதியில் ஒரு கட்டடம் அமைக்கப்பட்டது. 1980 களுக்குப் பின்னர் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின் போது ஆனையிறவுப் பகுதி பெருமளவு தாக்குதலுக்கு உட்பட்டது. இதனால் ஆனையிறவுக் கோட்டையும் பெரும் சேதத்துக்கு உள்ளானது. 2004 ஆம் ஆண்டுக்கு முன்னரே இக் கோட்டை முற்றாக அழிந்து விட்டது.



ஆனையிறவுக் கோட்டை கோட்டையின் படம்
1984 இற்கு முன் இருந்த கட்டடம்

### பைல் கடவைக் கோட்டை (Pass Pyl)

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்கிழக்குப் பகுதியில் குடாநாடு தலை நிலத்துடன் இணையும் இடத்துக்கு அருகே, அமைந்துள்ள ஒடுங்கிய நிலப்பகுதியில் (தற்போதைய வெற்றிலைக்கேணி), கிழக்குக் கடற்கரைக்கு அணித்தாக இருந்த ஒரு சிறியகோட்டை, ஆகும். பைல் கடவைக் கோட்டை (Pyl- பைல் என்பது டச்சுக் கவர்னர் (governor) ஒருவரின் பெயராகும்) ஆனையிறவுக் கோட்டையைப்போல்சதுர வடிவம் கொண்டது. இக்கோட்டையும் ஆனையிறவுக் கோட்டை, பெசுச் சூட்டர் கடவைக் கோட்டை என்பனவும் யாழ்ப்பாண நீரேரியின் ஆனையிறவுக்குக் கிழக்கேயுள்ள பகுதிக்கு வடக்கே ஒரே கோட்டில் வரிசையாக அமைந்துள்ளன.

இவை மூன்றும் ஒரே தொகுதியாக ஒரே நோக்கத்தோடு இயங்கின. தலைநிலத்திலிருந்து குடாநாட்டுக்கான நுழைவழியைக் கண்காணித்துப் பாதுகாப்பதே இக் கோட்டைகளின் முக்கியமான நோக்கம். ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணத்தின் கட்டளை அதிகாரியாக இருந்த என்றிக் சுவார் டெக்குரூன் தற்காலிகமாக யாழ்ப்பாணத்தை விட்டுச்சென்ற போது எழுதிய நினைவுக் குறிப்பில் காணப்படும் பின்வரும் விபரங்கள் இக் கோட்டைகளின் நோக்கங்களைத் தெளிவாக விளக்குகின்றன.

- சிங்களவர்கள் சதி வேலைகளில் ஈடுபடும்போது வன்னியர்களையும் நம்பமுடியாது என்பதால், வன்னியர்களின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கு இக்கோட்டைகள் பெரிதும் உதவும்.
- இக்கோட்டைகளின் முக்கிய நோக்கம் யாழ்ப்பாணத்துக்குள் வன்னியர்கள் நுழையாமல் பார்த்துக்கொள்வதும், சிங்களவர்களின் படையெடுப்பில் இருந்து மக்களைப் பாதுகாப்பதும்.
- மக்கள் நுழைவுச்சீட்டு இன்றி இப்பகுதிகளூடாகப் போக்குவரத்துச் செய்வதைத் தடுத்தல்.
- அனுமதிச் சீட்டுக்கள் இன்றிப் பொருட்களை மக்கள் வெளியே கொண்டு செல்வதையும் உள்ளே கொண்டு வருவதையும் தடுத்தல்.
- அடிமைகளைக் கடத்திச் செல்லாமல் பார்த்துக் கொள்ளுதல்.
- யானை முதலிய காட்டு விலங்குகள் யாழ்ப்பாணப் பகுதிக்குள் ஊடுருவுவதைத் தடுத்தல் போன்ற நோக்கங்களை குறிப்பிட்டிருந்தார்.

(தொடரும்...)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

172




“பத்தொன்பதாவது நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் மதுவிலக்கு இயக்கங்கள் இந்து- சைவ மத மறுமலர்ச்சி யின் இன்றியமையாத அங்கமாக இருந்தன. இருந்த போதிலும் சைவத்தமிழரின் மதுவிலக்கு நடவடிக்கை ஒருபோதும் அரசியலுடன் நெருங்கிய சம்பந்தம் உள்ளதாக இருக்கவில்லை. ஆயினும் மதுவிலக்குப் போராட்டக்காரர் அரசாங்கத்தைக் கண்டித்து விமர்சித்த நிகழ்வுகளும் இருந்தன”

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

இச் சந்தர்ப்பத்திலே தான் கிறிஸ்தவ எதிர்ப்பியக்கம் தோன்றி விருத்தியடைந்து சைவத்தமிழர் விழிப்புணர்வுபெற ஆதாரமான பங்களிப்பைச் செய்து தமிழர் என்றால் அதன் அர்த்தம் இதுதான் என்ற அபிமானம் அவர்களுக்கு ஏற்படக் காரணமாயின.

இவை யாவுமே ஈற்றில் தமிழ்த் தேசியவாதம் தோன்றுவதற்குக் காரணமாயின என்பதில் ஓர் ஐயமுமில்லை.

**மது விலக்கு இயக்கங்கள்**

பத்தொன்பதாவது நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் மதுவிலக்கு இயக்கங்கள் இந்து-சைவ மத மறுமலர்ச்சி யின் இன்றியமையாத அங்கமாக இருந்தன.

இருந்தபோதிலும் சைவத் தமிழரின் மதுவிலக்கு நடவடிக்கை ஒருபோதும் அரசியலுடன் நெருங்கிய சம்பந்தம் உள்ளதாக இருக்கவில்லை. ஆயினும் மதுவிலக்குப் போராட்டக்காரர் அரசாங்கத்தைக் கண்டித்து விமர்சித்த நிகழ்வுகளும் இருந்தன.

மதுபோதையின் தீமைகளுடன் அரசாங்கத்தைச் சம்பந்தப்படுத்தியது இவற்றுக்கு உதாரணமாகும். இருந்த போதிலும் அந்நிய தீய பழக்கங்களுக்கும் கிறிஸ்தவ விழுமியங்களுக்கும் எதிரான இந்தக் கண்டனங்கள் கிறிஸ்தவ அரசாங்கத்தையிட்டுச் சாதுரியமான வகையில் மேற்கொள்ளப்பட்ட தீவிரம் தவிர்க்கப்பட்ட விமர்சனங்களாகவே இருந்தன.

மீட்டுப் பார்க்கையில் சமய மறுமலர்ச்சியும் அதன் கூட்டு இயக்கமான மதுவிலக்கு இயக்கமும் ஆசியாவின் எல்லாப் பாகங்களிலும் தேசியப் பெருமைகளை மீளக்கொண்டு வருவதில் இன்றியமையாததொரு அங்கமாக இருந்ததைக் காண முடிகிறது.

இலங்கைத் தமிழ்ச் சமூகங்களில் நிகழ்ந்த இந்த நடவடிக்கைகளை ஆராய்வதற்கு இது வரையில் எந்த அறிஞருமே முயற்சி மேற்கொள்ளாதிருப்பது ஆச்சரியமாக உள்ளது. இதற்கு மாறாகத் தமிழர் மத்தியில் மதுவிலக்கு இயக்கமே இருக்கவில்லை என்பது போல் அறிஞர்கள் குறிப்புணர்த்தியுள்ளனர்.

உதாரணமாக டி.சில்வாவின் கூற்று வருமாறு,

இருபதாம் நூற்றாண்டின் முதலாவது தசாப்தத்தில் மது விலக்குப் போராட்டம் மிகப் பெரிய அளவில் பரவியிருந்தது. இது விசேடமாக மேற்கு, தெற்கு மாகாணங்களின் சிங்களப் பிரதேசங்களில் நிகழ்ந்தது.

டி.சில்வாவின் கூற்று தவறானதாக அல்லது அதிகபட்சம் அசிரத்தையான கூற்றாகத் தோன்றுகின்றது. ஏனெனில் பத்தொன்பதாவது நூற்றாண்டின் நடுப்பகுதியில் இலங்கையின் வடக்கு- கிழக்கில் மதுவிலக்கு இயக்கம் இருந்திருக்கிறது.

இருந்தபோதும் சிங்கள மது விலக்கு இயக்கம் தமிழ் மது விலக்கு இயக்கத்திற்கு முன்னர் நிகழ்ந்ததாகவே கருதப்படுகின்றது. 1850 மோணிங் ஸ்ராரின் பின்வரும் செய்தி இதையே குறிக்கின்றது.

கொழும்பில் ஒரு மதுவிலக்கு இயக்கம் அமைக்கப்பட்டதென கேள்வியுற்றோம். இதைப் போன்றதொரு சங்கம் கண்டியிலும் உருவாக்கப்பட்டு பலர் ஆவணங்களில் கையொப்பமிட்டுள்ளனர்.

இதைப்போன்ற நற்காரியத்தைச் செய்வதற்குத் திறன் படைத்த மக்கள் எவராவது யாழ்ப்பாணத்தில் இல்லையா?

இருந்த போதிலும் 1850 இல் இந்த செய்தி வெளியிடப்பட்ட போது யாழ்ப்பாணத்தில் மாணவர் மட்டத்தில் ஏற்கனவே ஒரு மதுவிலக்குச் சங்கம் உருவாகியிருந்தது.

ஒரு இளைஞன் தன் தாயினால் விடுமுறைக் கல்வி நிலையத்துக்கு அனுப்பப்பட்டபோது அங்குள்ள மாணவர்கள் ஏற்கனவே உருவாக்கியிருந்த மதுபான விலக்குச் சங்கத்தில் அவனும் இணைந்து கொண்டான். இந்த நிகழ்வு அவனுடைய தந்தையை அதைப் போன்ற தொரு சங்கத்தை அமைக்கத் தூண்டியது.

1850 இலிருந்து பல மதுவிலக்குச் சங்கங்கள் யாழ்ப்பாணத் தீபகற்பமெங்கனும் உருவாக்கப்பட்டன. இவை மானிப்பாய், தெல்லிப்பழை, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை என்ற் இடங்களில் அமைக்கப்பட்டதாக டிசெம்பர் 1851 மோணிங் ஸ்ரார் அறிவித்துள்ளது.

மதுவிலக்குச் சங்கங்கள் அச்சுவேலி, கரவெட்டி, உடுவில் ஆகிய இடங்களில் உருவாக்கப்பட்டன. மதுவிலக்குச் சங்கங்கள் எமது ஒவ்வொரு நிலையத்திலும் சில வெளியூர் நிலையங்களிலும் நிறுவப்பட்டன என 1845-1854 அமெரிக்க மிஷன் அறிக்கை கூறுகின்றது.

தமிழ்ச் சமூகத்திலுள்ள பலர் தமது சம பிரஜைகளின் குடிப் பழக்கத்தையும் மதுபான வியாபாரத்தையும் அரசாங்கத்தின் சாராயக் குத்தகைக்கு விடும் முறைமையையும் எதிர்த்தனர்.

வண. டி. புவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் கள்ளுக் குத்தகை முறைமை எல்லா இடங்களிலும் செயற்படுவதை அவதானிக்கும்போது அது சமூகத்தில் பெருமளவிலான மக்களுக்கு மதுப்பழக்கத்தை ஆரம்பித்து வைப்பதற்கு சிறந்தவொரு முறையாகக் கருதப்படலாம்.

எல்லா மதுக்கடைகளும் அரசாங்க அனுமதிப் பத்திரம் அவசியமாக இருந்தது. இந்த முறைமை மூலம் அரசாங்கத்துக்குரிய வரிகள் கிடைக்கப்பெற்று அரசவருமானம் பெறுவதற்குரிய பெறுமதிமிக்க வழியாக அவை இருப்பதை உறுதி செய்தது.

(தொடரும்)

# மாநகரின் ஆட்சி அதிகாரம் எமக்குக் கிடைத்திருந்தால் மக்களை பாதிக்கும் செயற்பாடுகள் இடம்பெற்றிருக்காது

## ஈ.பி.டி.பியின் மாநகர சபை உறுப்பினர் றீகன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எமது கரங்களுக்கு யாழ். மாநகரின் ஆட்சி அதிகாரம் கிடைத்திருந்தால் குடிநீருக்கான வரி அதிகரிப்பு மட்டுமல்லாது மக்களுக்கான எந்தவொரு அசௌகரியங்களை ஏற்படுத்தும் செயற்பாடுகளுக்கும் நாம் இடம்கொடுத்திருக்கமாட்டோம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாநகரசபை உறுப்பினர் றீகன் தெரிவித்துள்ளார்.

குருநகர் தொடர்மாடி பகுதி மக்களது பிரச்சினைகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்தறிவதற்காக செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அப்பகுதிக்கு நேரில் சென்று மக்களது பிரச்சினைகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்தறிந்து கொண்டார்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாநகரை இன்று ஆட்சி செய்பவர்கள் மக்களது நலன்களை எள்ளளவும் சிந்தித்து பார்ப்பது கிடையாது. அவர்கள் இவ்வாண்டுக்கான பாதீட்டை கொண்டு வந்தபோது அதில் குடிநீருக்கான கட்டண அதிகரிப்பு உள்ளடக்கப்பட்டிருந்ததை எமது கட்சி முழுமையாக எதிர்த்திருந்தது.

அதுமட்டுமல்லாது மக்களின் நலன்களை முன்னிறுத்தாத அந்தப் பாதீட்டையும் நாம் முழுமையாக எதிர்த்திருந்தோம். ஆனால் அந்த பாதீட்டை தோற்கடிப்பதற்கான அரசியல் அதிகாரம் எம்மிடம் சபையில் இல்லாததன் காரணமாக அது நிறைவேற்றப்பட்டு இன்று மக்களை அதிக பிரச்சினைக்குள்ளாக்கியுள்ளது.

இப்பகுதியில் அதிகமானவர்கள் வறிய மக்களாகவே காணப்படுகின்றனர். அதனால் அம் மக்களை இந்த குடிநீர் கட்டண அதிகரிப்பு பெரிதும் பாதித்துள்ளது.

இந்நிலை வருவதற்கு காரணம் மக்களது தவறான அரசியல் தெரிவாகவே இருக்கின்றது. யாழ்.மாநகரசபையின் ஆட்சி அதிகாரத்தை கடந்த காலத்தில் நாம் நிர்வகித்தபோது மக்களுக்கு பல இலவச திட்டங்களை பெற்றுக் கொடுத்திருந்தோம். ஆனால் இன்று அவ்வாறான நிலை காணப்படவில்லை என்று தெரிவித்தார். (இ-7)

# 50 ரூபா மேலதிக கொடுப்பனவு தொழிலாளர்களை ஏமாற்றி கம்பனிகளை பாதுகாக்கும் செயல்

(ஹற்றன்)

வரவு - செலவுத்திட்டத்தினூடாக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒரு வருட காலத்திற்கு 50 ரூபா மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளமையானது, கம்பனிகளை பாதுகாக்கவும் தொழிலாளர்களை ஏமாற்றி போராட்டத்தை கொச்சைப் படுத்தி அதனை முடிவிற்கு கொண்டு வரவும் எடுக்கப்பட்ட கூட்டு சதி முயற்சி என மலையக சிவில் அமைப்புக்களின் ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அவர்கள் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில், தொழில் தருநர்களும் தொழிற்சங்கங்களும் இரகசியமாக செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் வெறும் 20 ரூபா அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதை தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதன் காரணமாகவே போராட்டங்கள் தொடர்கின்றன எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ-7)

# அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான தேசிய ஆக்கத்திறன் விருது விழா நாளை

(கொழும்பு)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முதன்மையான செயற்பாடுகளில் ஒன்றான இந்துசமய அறநெறிக்கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இளம் இந்துச் சிறார்களின் இதயங்களில் உள்ள தெய்வீகத் தாமரையை மலரச் செய்து அவர்களின் ஆளுமையும் திறமைகளும் மலர்ந்து விரிவடைய வைக்கும் கல்வியை வழங்கி இளம் சந்ததியினரை நல்வழிப்படுத்தி ஒழுக்கவிழுமிய பண்பாடு மிக்க ஒரு எதிர்கால சந்ததியினரை உருவாக்கும் இலட்சிய நோக்குடன் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் ஓர் அம்சமாக அறநெறிப்பாடசாலை மாணவரின் ஆக்கத் திறன்களை வெளிக்கொணர்ந்து விருத்தி செய்யும்நோக்குடன் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே பேச்சாற்றல், கதாப்பிரசங்கம் எழுத்தாற்றல், சித்திரம், வில்லுப் பாட்டு, பண்ணிசை, நாடகம், பரதநாட்டியம் ஆகிய 8 துறைகளில் இவ் ஆக்கத்திறன் மதிப்பீடுகள் நடத்தப்பட்டன.

2018 ஆம் ஆண்டுக்குரிய தேசிய ஆக்கத்திறன் விருதுகளிற்கான தெரிவுகள் இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய மட்டங்களில் இடம்பெற்றன.

இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான தேசிய ஆக்கத்திறன் விருது -2018 வழங்கும் நிகழ்வு நாளை 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் தேசிய ஒருமைப்பாடு அரசகரும மொழிகள் சமூக மேம்பாடு மற்றும் இந்துசமய அலுவல்கள் அமைச்சர் மனோ கணேசனின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விருது வழங்கும் வைபவத்திற்கு சிறப்பு விருந்தினர்களாக முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இவ்வைபவத்தில் தேசிய மட்டத்தில் தெரிவான முதல் மூன்று இடங்களைப் பெற்ற 21 மாவட்டங்களைச் சேர்ந்த 293 மாணவர்களுக்கான விருது களும் பதக்கங்களும் சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை தேசிய ரீதியில் ஆக்கத்திறன்களை சிறப்பாக வெளிக்காட்டிய 21 மாவட்டங்களைச் சேர்ந்த 867 மாணவர்கள் தேசிய ரீதியில் விசேட பாராட்டுதல்களையும் பெறவுள்ளதுடன் மாவட்ட ரீதியில் ஆக்கத்திறன்களை சிறப்பாக வெளிக்காட்டிய 22 மாவட்டங்களைச் சேர்ந்த சுமார்6000 மாணவர்களும் பிரதேச ரீதியில் ஆக்கத்திறன்களை சிறப்பாக வெளிக்காட்டிய 22 மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 12 ஆயிரம் மாணவர்களும் பாராட்டுதல்களை பெறவுள்ளனர்.

இவர்களுக்கான சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கும் வைபவம் காலக்கிரமத்தில் மாவட்ட பிரதேச ரீதியில் இடம்பெறும் என பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் அறிவித்துள்ளார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1645

Search for people, places and things

## கிருஷ்ணவேணி

**காயங்களை விட ஆறுதல் சொல்ல யாருமில்லையே என்பதுதான் அதிகமாக வலிக்கின்றது**



## அஞ்சலி

**ஒருவனைக் கண்டிக்க நேர்ந்தால் தனிமையில் கண்டியுங்கள்! ஒருவனை பாராட்ட நேர்ந்தால் பலர் அறியப் பாராட்டுங்கள்**



## மீனா

**எந்த உறவும் நிரந்தரமல்ல... எந்தப் பிரிவும் நிரந்தரமல்ல நீ அன்பாகப் பழகும் இந்த நேரம் மட்டுமே நிரந்தரம்**



## சுந்தர்

**பெண்களுக்கு அழகு முக்கியமல்ல அடக்கம் தான் முக்கியம்... ஆண்களுக்கு அதிகாரம் முக்கியமல்ல அன்புதான் முக்கியம்**



## காவேரி

**சுமையைக்கூட சுகமாக நினைப்பவனே தாய்**



## காஜல்

**கலகலப்பாய் இருங்கள் ஆனால் ஒருபோதும் மற்றவர்களை கலங்கப்படுத்தாது இருங்கள்**



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

### முதலில் நடத்தப்படவேண்டும்

# மாகாணசபைத் தேர்தல் குறித்த நிலைப்பாட்டில் மாற்றமில்லை



## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தல் முதலில் நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

பவ்ரல் அமைப்பின் 30 ஆவது வருடப்பூர்த்தி நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஜனநாயகமும் தேர்தலும் தங்களுக்கு வேண்டியதைப் போன்று பயன்படுத்தப்படுகின்றன.

எந்த அளவுக்கு சுதந்திரமான முறையில் தேர்தல் நடத்தப்பட்டாலும் அது உரிய காலத்திற்குள் இடம்பெறவில்லை என்றால் பயன் இல்லை.

முதலில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை விவாதத்துக்கு உட்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

நவம்பர் மாதம் 10 ஆம் திகதி வரும் வரையில் காத்துக் கொண்டிருக்கிறோம்.

அதற்கு முன்னர் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நீர்மின் உற்பத்தி நிலையத்திற்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டம்



(கினிகத்தேனை)

கினிகத்தேனை புரோட்லேண்ட் நீர்மின் உற்பத்தி நிலையத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. குறித்த உற்பத்தி நிலைய காரியாலயத்திற்கு முன்பாக பொல்பிட்டிய பிரதேசத்தில் வசிக்கும் 50 இற்கும் மேற்பட்ட மக்கள், நேற்று வெள்ளிக்கிழமை காலை இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

புரோட்லேண்ட் நீர்மின் உற்பத்தியால் பாதிக்கப்பட்ட 37 குடும்பங்களில் 4 குடும்பங்களுக்கு மாத்திரமே நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதாகவும், ஏனையவர்களுக்கு இதுவரையில் நட்டஈடு வழங்கப்படவில்லை என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே தமக்கு நட்டஈடு வழங்க விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தியதோடு, ஆக்ரோஷமாக கோசமிட்டவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

புரோட்லேண்ட் நீர்மின் உற்பத்தியால் 33 குடும்பங்களைச் சேர்ந்த 50 இற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, அங்கு வெட்டப்பட்டுள்ள சுரங்கப் பாதையால் அவர்களின் குடியிருப்புக்களும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

இதற்கு முன்னரும் புரோட்லேண்ட் நீர்மின் உற்பத்தி நிலையத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# உயிரிழந்த ஊழியரின் மனைவிக்கு வேலைவாய்ப்பு

## அமைச்சர் அர்ஜீன பணிப்பு

(கரணவாய்)

இ.போ.ச பருத்தித்துறை சாலையில் பணிபுரிந்து சிறுநீரக நோயால் மரணமடைந்த ஊழியரின் மனைவிக்கு சாலையில் பொருத்தமான வேலை ஒன்றை வழங்குமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் அர்ஜீன ரணதுங்க பணிப்புரை விடுத்தார்.

இ.போ.ச பருத்தித்துறை சாலைக்கு போக்குவரத்து மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்க நேற்று வெள்ளிக்கிழமை விஜயம் மேற்கொண்டிருந்தார்.

அங்கு ஊழியராக பணியாற்றி கடந்த 2017-04-07 அன்று சிறுநீரக நோயால் மரணமடைந்த அரவிந்தகுகன் என்பவரின் மனைவி வந்து தனது கணவன் ஊழியராக கடமையாற்றி வந்த நிலையில் நோயால் பீடிக்கப்பட்டு இறந்ததாகவும் தனக்கு சாலையில் வேலை ஒன்றைப் பெற்றுத்தருமாறு அமைச்சரிடம் கோரினார்.

இதன்போதே அவருக்குப் பொருத்தமான வேலை ஒன்றை வழங்குமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்தார். (இ-60)

# இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட அதிசயம் மிக்க நீரூற்று

(கொழும்பு)

இலங்கையின் ஊவா மாகாணத்தில் அதிசயமிக்க நீரூற்று ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

வெலிமடை பிரதேச செயலாளர் பிரிவின், கெப்பட்டிபொல, உடுபாதன பிரதேசத்தில் இந்த நீரூற்று காணப்படுகிறது.



வரட்சியான காலத்திலும் நீர் வற்றிப் போகாமல் 24 மணித்தியாலமும் நீர் வெளியேறும் இயற்கையின் கொடையாக இந்த நீரூற்று அமைந்துள்ளது.

அந்தப் பகுதி மக்கள் நீரூற்றினை பிபிலி அராவ என்ற பெயரில் அழைக்கின்றனர்.

கெப்பட்டிபொல நகரத்தில் இருந்து பொரலந்தனை வீதியில் இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் ஒரு காடு போன்ற பகுதியில் இந்த நீரூற்று காணப்படுகின்றது.

7 அடி ஆழமான இந்த நீரூற்றின் மேல் பகுதியில் தொட்டி போன்று பொது மக்கள் அமைத்துள்ளனர். அதற்கமைய அதன் 2 பக்கங்களில் இருந்து 24 மணி நேரமும் மிகவும் சுத்தமான நீர் வெளியேறிக்கொண்டே இருக்கும்.

எவ்வளவு வரட்சியான காலநிலை ஏற்பட்டாலும் இந்த நீரூற்றில், குறைவின்றி நீர் வெளியேறிக் கொண்டிருப்பதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

நீரூற்றில் இருந்து வெளியேறும் நீரினை மக்கள் தமது அன்றாட தேவைகளுக்காக பயன்படுத்துகின்றனர்.

வரட்சி ஏற்படுகின்ற காலங்களில் வேறு பிரதேசத்தை சேர்ந்தவர்கள் அதிசய நீரூற்றில் நீரினைப் பெற்று நன்மை அடைகின்றனர்.

இந்த நீரூற்று இயற்கையினால் கொடுக்கப்பட்ட அதிசயம் என அந்தப் பகுதி மக்கள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர். (7)

# செய்தித்துளிகள்

## தூபியிலேறி புகைப்படம் எடுத்த இருவர் கைது

(மிகிந்தலை)

மிகிந்தலை ரஜமஹா விகாரை பூஜா பூமியில் புராதன தூபியின் மீதேறி புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்த இருவர், நேற்று முன்தினம் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு பின்னர், அவர்கள் மிஹிந்தலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

ரஸீன் மொஹமட் ஜிப்ரி (வயது-20) மூதூர் மற்றும் ஜலாலதீன் ரிப்தி அஹமட் (வயது-18) மூதூர் ஆகிய இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (7)

## இயந்திரக் கருவிகள் பதிவு

(கொழும்பு)

மரங்கள் வெட்டும் இயந்திரக் கருவிகளைப் பதிவு செய்தல் நடவடிக்கையை இம் மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி பதிவு செய்தலின் இறுதித் தினம் என பாதுகாப்பு அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதற்கமைய அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் தனியார் பாவனைக்குப் பயன்படுத்தும் சகல இயந்திரங்களும் அருகாமையிலுள்ள பொலிஸ் நிலையங்களில் சமர்ப்பிக்கப்பட்டு, பதிவு அனுமதிப்பத்திரம் ஒன்றை கைவசம் வைத்திருக்க வேண்டும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

## தாய், மகள் மீது அசிட் வீச்சு

### ஒருவர் உயிரிழப்பு!

(கம்புறுபிடிய)

கம்புறுபிடிய - போலஹெவத்த - ரன் கெகுலாவ பிரதேசத்தில் வீடு ஒன்றில் உறக்கத்திலிருந்த தாய் மற்றும் அவரது மகள் மீது அசிட் வீசித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் குறித்த அசிட் வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் 39 வயதுடைய பெண் உயிரிழந்துள்ளதுடன், மகள் கம்புறுபிடிய - ஆதபான வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாயிடமிருந்து பிரிந்த தனது தந்தை மற்றும் ஒரு நபருடன் வந்து இவ்வாறு அசிட் வீசித் தாக்குதலை மேற்கொண்டதாக தாக்குதலுக்குள்ளான மகள் பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார் மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 60 | 80 | 60 | 70 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 80 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 140 | 140 | 120 | 150 | 200 |
| தக்காளி | 80 | 60 | 60 | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 80 | 40 | 40 |
| கோவா | 50 | 50 | 60 | 60 | 60 |
| கரட் | 100 | 100 | 100 | 70 | 160 |
| பூசணி | 50 | 25 | 20 | 30 | 40 |
| புடோல் | 50 | 50 | 60 | 30, | 80 |
| வாழைக்காய் | 80 | 80 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 100 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 70 | 80 | 70 | 80 |
| பாகற்காய் | 100 | 120 | 80 | 80 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 70 | 50 | 120 |
| கருணைக் கிழங்கு | 50 | 40 | 60 | 40 | 80 |
| பயற்றங்காய் | 120 | 140 | 100 | 80 | 120 |
| லீக்ஸ் | 100 | 100 | 100 | 70 | 120 |
| பீற்றூட் | 30 | 25 | 60 | 40 | 60 |
| கறிமிளகாய் | 100 | 120 | 100 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 450 | 500 | 400 |
| போஞ்சி | 60 | 60 | 60 | 60 | 80 |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 | — | 40 | 60 |
| கீரை-1பிடி | 20 | 30 | 30 | 15 | 20 |
| தேசிக்காய் | 50 | 60 | 80 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45 | 40 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 130 | 130 | 120 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 30 | 50 | 80 | 60 | 80 |
| முள்ளங்கி | 30 | 40 | 60 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 45 | 50 | 10 | 40 |
| வல்லாரை | 10 | 50 | 20 | 10 | 20 |
| ஈரப்பலா | 50 | 100 | 50 | 100 | 60 |

# மாசி மாத இராசி பலன்கள்

## 13.02.2019 - 14.03.2019

விளம்பி வருடம் மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சுக்கிரன், சகாய ஸ்தானத்தில் இருக்கிறார். அவரோடு உங்கள் இராசிக்கு யோககாரகனாக விளங்கும் சனியும் கூடியிருக்கிறார். எனவே இந்த மாதம் எதிர்பாராத மாற்றங்கள் வந்து சேரும். இதுவரை தடைப்பட்ட காரியங்கள் தடையின்றி நடைபெறும். சேமிப்பு உயரும். தாயின் உடல் நலம் சீராகும். பூர்வீக இடம், வீடு ஆகியவற்றை முறையாகப் பராமரிக்கும் எண்ணம் உருவாகும். கலைத்துறையினருக்கு பிரபலஸ்தர்களின் ஒத்துழைப்பால் பெரிய வாய்ப்புகள் கிடைக்கும் நேரம் இது.

மாதத் தொடக்க நாளிலேயே ராகு-கேதுக்களின் பெயர்ச்சி நிகழவிருக்கிறது. இந்தப் பாம்புக் கிரகங்களின் பெயர்ச்சி, உங்கள் வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றங்களையும், ஏற்றங்களையும் கொடுக்கப் போகிறது.

9ஆம் இடத்திற்கு வரும் ராகுவால் உங்களின் வளர்ச்சி அதிகரிக்கும். வாய்ப்புகள் வாசல் கதவைத் தட்டும். வெற்றிச் செய்தி வீடு வந்து சேரும். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர். 'குண்டு மணி அளவுகூட தங்கம் இல்லையே' என்று கவலைப்பட்டவர்கள், சேமிப்பு உண்டாக்கி அதன் மூலம் ஆபரணங்கள் வாங்கி அழகு பார்ப்பீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வுடன் கூடிய பதவி உயர்வு கிடைக்கும்.

சகாய ஸ்தானத்தில் கேது இருப்பதால், ஆன்மீக வழிபாடுகள் செய்வதன் மூலம் எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். சனி பகவானுக்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வருவதோடு, யோகபலம் பெற்ற நாளில் ராகு- கேதுக்களுக்கும் நாகசாந்திப் பரிகாரம் செய்தால் நலம் யாவும் வீடு வந்து சேரும். வளமான வாழ்க்கைக்கு அடித்தளம் அமையும். உடன்பிறந்தவர்கள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர். ஈடுபாட்டோடு செய்யும் எந்தச் செயலும் வெற்றி பெறும்.

மாத தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு இரண்டாம் இடத்தில் குரு இருப்பதால், நிதிநிலை உயர்ந்து நிம்மதி அடைவீர்கள். அதே சமயம் ஒரு தொகை செலவழிந்த பிறகே, அடுத்த தொகை உங்கள் கைகளில் புரளும். குருவின் பார்வை பலத்தால் உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணி நிரந்தரம் கிடைக்கும்.

இம்மாதம் வரும் மாசி மகத்தன்று முழுமையாக விரதம் இருந்து முருகப்பெருமானை வழிபாடு செய்யுங்கள். சிவராத்திரி அன்று அருகில் இருக்கும் சிவாலயத்திற்குச் சென்று சிவ பூஜையில் கலந்துகொள்வதன் மூலம் கவலைகள் மாறும். கனிவான வாழ்க்கை அமையும்.

**மகர சுக்கிரன் சஞ்சாரம்**

பெப்ரவரி 25ஆம் திகதி மகர இராசிக்குச் சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிநாதனாகவும், அஷ்டமாதிபதியாகவும் விளங்கும் சுக்கிரன், 4ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது 'இது




## ஒன்பதாம் இடத்து ராகுவால் பொன், பொருள் குவியும்!

வரை வாகனம் வாங்கும் முயற்சியில் பலன் கிடைக்கவில்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கு, இப்பொழுது மகிழ்ச்சியடையும் விதத்தில் வாகன யோகம் வரப்போகின்றது. அதுமட்டுமல்ல, வாழ்க்கைத் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். வசதியான வீடுகள் அமையும். இல்லம் கட்டிக் குடியேறும் எண்ணம் கைகூடும்.

சுய ஜாதகத்தில் செவ்வாய் பலம் நன்றாக இருந்தால் வீடுகட்டிக் குடியேறலாம். செவ்வாய் பலம் குறைவாக இருந்தால், கட்டிய வீடாக விலைக்கு வாங்கிக்கொள்ளலாம். பெற்றோர்களின் ஆதரவு கிடைக்கும் நேரம் இது.

**அதிசார குருவின் பலன்**

குரு பகவான் மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 2ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு பகை கிரகமான குரு, வாக்கு, தனம், குடும்பம் என்பதைப் பற்றி அறிந்து கொள்ள உதவும் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இல்லத்தில் ஒன்றுக்கும் மேற்பட்டவர்களின் வருமானம் கிடைத்து, நிதி பற்றாக்குறை அகலும். யாருக்கேனும் வாக்குக் கொடுத்தால் அதை நிறைவேற்றும் ஆற்றல் பிறக்கும்.

இம்மாதக் கடைசியில், அதாவது மார்ச் 13 ஆம் திகதி குரு அதிசார கதியில் தனுசு இராசிக்குச் செல்கிறார். அது மூன்றாம் இடமான சகாய ஸ்தானம் ஆகும். மேலும் தனுசு இராசி, குருவிற்குரிய வீடு. அங்கிருந்தபடி 7, 9, 11 ஆகிய இடங்களைக் குரு பார்க்கிறார். எனவே திருமண முயற்சிகளில் இருந்த தடை அகலும். திடீர் பயணங்கள் திகைக்க வைக்கும் தித்திக்கவும் வைக்கும். பூர்வீகச் சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் அகலும். வெளிநாட்டில் இருந்து வரும் தகவல் உங்களை வியப்படைய வைக்கும். இளைய சகோதரத்தால் ஏற்பட்ட பிணக்குகள் மாறி, இணக்கம் ஏற்படும். கூட்டாளிகள் உங்களுக்கு கூடுதல் இலாபத்தைக் கொண்டு வந்து சேர்ப்பார்கள். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும்.

இம்மாதம் ராகு-கேதுக்களை முறையாக வழிபடுவதோடு வெள்ளிக்கிழமை தோறும் வடக்கு நோக்கி அருள்பாலிக்கும் அம்பிகையை வழிபாடு செய்யுங்கள்.

**பெண்களுக்கான பலன்கள்**



இம்மாதம் உங்களுக்கு தைரியமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். குடும்பச்சுமை அதிகரிக்கலாம். கணவன்-மனைவிக்குள் அன்னியோன்யமும், ஒற்றுமையும் உருவாகும். ஒருவருக்கொருவர் புரிந்து கொண்டு செயல்பட்டு மற்றவர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். வாங்கிய கடனைக் கொடுக்கச் சந்தர்ப்பங்கள் கூடிவரும். நூதனப் பொருட்களின் சேர்க்கை உண்டு. வேலைக்காக விண்ணப்பித்த பெண்களுக்கு இப்பொழுது கைநிறையச் சம்பளம் வாங்கும் வேலை கிடைக்கும்.

தனியார் துறையில் பணிபுரிப வர்கள் அரசு வேலைக்காக விண்ணப்பித்திருந்தால் அது கைகூடும். குலதெய்வ வழிபாடும், சிவ ராத்திரியன்று உமாமகேஸ்வரர் வழிபாடும் உள்ளத்தில் மகிழ்ச்சியை நிலைக்க வைக்கும்.






விளம்பி வருடம் மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசியில் தனபஞ்சமாதிபதியான குரு வீற்றிருக்கிறார். எனவே நிதிநிலை உயரும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். மதிநுட்பத்தால் மகத்தான காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பூமி வாங்கும் யோகமும், பொன், பொருள் சேர்க்கையும் ஏற்படும்.

உங்கள் இராசிநாதன் செவ்வாய் சொந்த வீட்டில் சஞ்சரிக்கிறார். குடும்ப ஸ்தானத்தில் புதனுடன் சூரியன் இணைந்து புத-ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார். தொடக்கத்தில் குருவின் பார்வை 5, 7, 9 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே தொழில் முன்னேற்றம், செல்லும் இடங்களில் செல்வாக்கு உயர்வு, பதவியில் உள்ளவர்களின் உதவி கிடைக்கும்.

இம்மாதத் தொடக்க நாளிலேயே ராகு-கேதுக்கள் எனப்படும் பாம்பு கிரகங்கள் பெயர்ச்சியாகின்றன. 2இல் சஞ்சரிக்கும் கேதுவும், 8இல் சஞ்சரிக்கும் ராகுவும் திரண்ட செல்வத்தை வழங்கப் போகிறார்கள்.

இதுவரை உங்கள் இராசிக்கு 8ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் ராகுவால், இனி இன்பங்கள் உருவாகும். எதிரிகள் விலகுவார்கள். உதிரி வருமானங்கள் பெருகி உள்ளத்தை மகிழ்விக்கும் வீடு மாற்றங்கள் முதல் நாடு மாற்றங்கள் வரை, உங்களின் விருப்பப்படி மாற்றங்கள் வந்து கொண்டே இருக்கும். புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டு. வியர்வை அரும்ப உழைப்பில் மூழ்கித் திளைக்கும் உங்களுக்கு, உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும் நேரம் இது. ஆடை, ஆபரணங்கள் வாங்குவதில் அதிக கவனம் செலுத்துவீர்கள்.

உங்கள் இராசிக்கு 2ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் கேதுவால், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். விசேடமான ஆலயங்களுக்குச் சென்று பரிகார பூஜைகள் செய்வதில் கவனம் செலுத்துவீர்கள். கேது இருக்கும் வீடு, குருவிற்குரிய வீடு என்பதால் உதிரி வருமானங்கள் உங்களுக்குப் பெருகும். இல்லம்-கட்டிக் குடியேறுவது அல்லது கட்டிய வீட்டை விரிவாக்கம் செய்வது போன்ற பணிகளைச் செய்வீர்கள். ஆன்மீகம், பத்திரிகை, இயந்திரத் துறை மற்றும் கலைத் துறைகளில் பணிபுரிபவர்களுக்கு இம் மாதம் வெற்றிக்குரிய மாதமாக அமையப்போகிறது.

இருப்பினும் மாசி மகத்தன்று விரதமிருந்து முருகப் பெருமானை வழிபாடு செய்யுங்கள். பௌர்ணமி நாளில் கிரிவலம் வாருங்கள். சிவராத்திரி அன்று முழுமையாக விரதமிருந்து சிவன் சந்நிதியில் சிவ பதிகம் பாடி சிவ பூஜையில் கலந்து கொள்ளுங்கள். நீங்கள் செய்யும் காரியங்கள் வெற்றியாகும். செல்வ நிலை உயரும்.

**மகர சுக்கிரன் சஞ்சாரம்**

பெப்ரவரி 25ஆம் திகதி மகர இராசிக்குச் சுக்கிரன் செல்கிறார். சுக்கிரன் உங்கள் இராசிக்கு 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். அவர், 2ஆம் இடத்தில் தனஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, நினைக்க இயலாத ராஜயோகத்தைக் கொடுப்பார். எந்த வேலையை எந்த நேரத்தில் செய்ய விரும்புகிறீர்களோ, அதே நேரத்தில் அற்புதமாகச் செய்து முடிப்பீர்கள். அதனால் பலரின் பாராட்டுகள் கிடைக்கும். மகரத்திற்கு சுக்கிரன் செல்லும் பொழுது, உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பால் கடன் சுமை குறையும். வாங்கிய இடத்தை விற்பதன் மூலம் பெரும் தொகை வந்து சேரும். தேங்கிய காரியங்கள் ஒவ்வொன்றாக நடைபெற்று உங்களை திக்குமுக்காட வைக்கும்.

**அதிசார குருவின் பலன்**

குரு பகவான் மாதத் தொடக்கத்தில், உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கிறார். தனபஞ்சமாதிபதி உங்கள் இராசியிலேயே சஞ்சரிப்பதால் சேமிப்பு உயரும். செய்தொழிலில் லாபம்




## சந்தோசங்களை சந்திக்கும் நேரமிது

இருமடங்காகும். மார்ச் 13ஆம் திகதி குரு பகவான், தனுசு இராசிக்கு அதிசாரகதியில் செல்கிறார். இந்த காலத்தில் இன்னும் சிறப்பான பலன்கள் நடைபெறும். காரணம் தனாதிபதியான குரு பகவான், தனது சொந்த வீட்டிலேயே சஞ்சரிக்கப் போகிறார். அதோடு அது உங்கள் இராசிக்கு தன ஸ்தானம் ஆகும். எனவே இந்த நேரத்தில், நினைத்து பார்க்க முடியாத ராஜயோகம் உங்களுக்கு கிடைக்கலாம். இதுவரை நீங்கள் கண்ட கனவுகள் அனைத்தும் நனவாகும். குடும்பத்தில் மங்கல ஓசைகேட்கும். மணவிழா, மணிவிழா, முத்துவிழா, கிரகப்பிரவேசம், தொழில் நிலையம் திறப்புவிழா, ஆலயத் திருப்பணி, இடம் வாங்கும் யோகம் போன்ற ஏராளமான சுபகாரியங்கள் இல்லத்தில் வரிசையாக நடைபெறும். குரு வலிமை அடையும் பொழுது, முன்னேற்றத்தின் முதல்படிக்குச் செல்லமுடியும். அரசியலில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு அதிக சம்பளத்துடன் பதவி உயர்வு தேடி வரும். பிள்ளைகளின் கடமைகளை நிறைவேற்றுவீர்கள். வெளிநாட்டு யோகம் சிலருக்கு வாய்க்கும். குருவின் பார்வை 6, 8, 10 ஆகிய இடங்களில் பதிவதால் புதிய தொழில் தொடங்கும் முயற்சி வெற்றியாகும்.

இம்மாதம் சர்ப்பசாந்திப் பரிகாரங்களைச் செய்துகொள்வதோடு, விநாயகப் பெருமானையும், துர்க்கையையும் வழிபடுங்கள்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் உங்களுக்கு சேமிப்பு உயரும். சிந்தனைகள் அனைத்தும் வெற்றி பெறும். தாய்வழி ஆதரவு தக்கவிதத்தில் கிடைக்கும். இந்த நேரத்தில் நீங்கள் கேட்ட உதவிகளைச் செய்ய அவர்கள் முன் வருவர். கணவன்-மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். புகுந்த வீட்டிற்கு பெருமை சேர்க்கும் விதம் நடந்து கொள்வீர்கள். பிள்ளைகளின் முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். அவர்களுக்கான வேலை வாய்ப்பு, திருமண காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

பணிபுரியும் பெண்களுக்கு உத்தி யோக உயர்வு, ஊதிய உயர்வும் வரக்கூடிய சந்தர்ப்பம் உண்டு. வாகனம் வாங்க கேட்ட தொகை கிடைக்கும். குலதெய்வ வழிபாடும், சிவராத்திரி திருநாளில் சிவபெருமான் வழிபாட்டையும் மேற்கொண்டால் யோகமான வாய்ப்புகள் வந்து சேரும்.

(தொடரும்...)

பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை.
– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பிரதமர் அவர்களே! இது நியாயமானதா?

இலங்கைக் குடியரசின் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு அன்பு வணக்கம்.

வடபகுதிக்கான மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு தாங்கள் வருகை தந்ததன் அடிப்படையில் இக்கடிதத்தைத் தங்களுக்கு எழுதுகின்றோம்.

இக்கடிதத்தின் விபரம் தங்களுக்குக் கிடைக்குமா என்பது பற்றிய ஐயங்கள் தேவையற்றவை.

ஏனெனில் தமிழர் தாயகத்தின் அரசியலிலும் அரச நிர்வாகத்திலும் இருக்கக்கூடியவர்கள் வடக்கிலும் கிழக்கிலும் பிரச்சினைகள் இல்லை என்பதைக் காட்டி தங்களிடம் நல்ல பெயர் வாங்கவே விரும்புகின்றனர்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை அறிய வருகின்ற தாங்களும் சாதாரண மக்களைச் சென்று சந்தித்து தகவல் அறிவதற்கு ஆர்வப்பட்டதுபோல் தெரியவில்லை.

மாறாக குளிரூட்டப்பட்ட கருத்தரங்கு அறைகளில் கூடியிருந்து உயர்மட்ட அரச அதிகாரிகளினதும் தங்களின் ஆட்சியிலும் ஆட்சிக்கு ஆதரவாகவும் இருக்கின்ற அரசியல்வாதிகளையும் இருத்தி வைத்துக் கொண்டு தமிழ் மக்களின் பிரச்சினைகளை உங்களால் ஒரு போதும் அறிய முடியாது.

தவிர, தமிழ் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்ற போதிலும் அவை பற்றி அரச நிர்வாகங்கள் கண்டு கொள்வதில்லை.

நிலைமை இதுவாக இருக்கையில், தங்களின் வருகை தமிழ் மக்களுக்கு எந்தளவுக்குச் சாதகமாக இருக்கும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

அதிலும் நீங்கள் ஆற்றிய உரைகளைத் தொகுத்தும் வகுத்தும் ஆராய்கின்றபோது அடுத்துவரும் மூன்று மாதங்களில் வடபுலம் மிகப்பெரிய மாற்றங்களை அடையும் போல இருக்கிறது.

இருந்தும் இவ்வாறான உரைகள் நமக்குப் பழக்கமானவை என்பதால் எல்லாவற்றையும் பொறுத்திருந்து பார்ப்பதுதான் நல்லது.

இவை சில குறிப்புகள் மட்டுமே. இக்கடிதத்தைத் தங்களுக்கு எழுதுவதன் முக்கிய நோக்கம் தங்கள் ஆட்சியில் சிங்கள இளைஞர் யுவதிகளுக்கு வட பகுதியில் வேலைவாய்ப்பு வழங்கப்படுவதைச் சுட்டிக்காட்டுவதுதான்.

வடபகுதியில் பல்லாயிரக்கணக்கான இளைஞர் யுவதிகள் வேலையற்றிருக்க, வடபகுதியில் இயங்கும் அரச அமைப்புகளுக்கு தென்பகுதி சிங்கள இளைஞர் யுவதிகள் வேலைவாய்ப்புப் பெற்று வருகின்றனர் எனும்போது இஃது எந்தளவு தூரம் தமிழ் மக்களைத் திட்டமிட்டு வஞ்சிக்கின்ற செயல் என்பதை தாங்கள் அறியாமல் இருக்க முடியாது.

எனினும் இதுபற்றி தங்களைத் தாங்கி நிற்கும் எங்கள் அரசியல்வாதிகள் வாய் திறந்திருக்க மாட்டார்கள் என்பது சர்வ நிச்சயம்.

எதுவாயினும் அண்மையில் சிங்கள இளைஞர் யுவதிகள் பலர் வேலைவாய்ப்புப் பெற்று வட மாகாணத்துக்கு வந்து சேர்ந்துள்ள அரச அமைப்புக்களைத் குறித்துக் காட்டுவது நல்லது என்று கருதுகின்றோம்.

அந்த வகையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, யர்ழ்ப்பாணப் பல்கலைக் கழகம், நிலஅளவைத் திணைக்களம், இலங்கை மின்சார சபை என்பன சிலவாகும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் இளைஞர் யுவதிகள் வேலையற்றிருக்க சிங்கள இளைஞர் யுவதிகளுக்கு வடக்கில் அரச நியமனம் வழங்குவது நியாயமானதா? என்பதை நீங்களே தீர்மானியுங்கள்.

# மகளின் திருமணம் முடிந்து 5ஆம் நாள் தாயார் மரணம்

## மீசாலை மடத்தடியில் சோகம்

மகளின்திருமணம்முடிந்து ஐந்தாம் நாள் தாயார் மரணமடைந்த சோகச் சம்பவம் ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை காலை சாவகச்சேரி - மீசாலை மடத்தடிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக தெரிய வருவதாவது.

56வயதான இராஜ குல சிங்கம் தயாரூபி என்ற குறித்த பெணமணி கடந்த சில தினங்களாக காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்ததாகவும், இருப்பினும் மகளின் திருமண வேலைகள் காரணமாக அதனை பொருட்படுத்தாது இருந்ததாகவும் கடந்த ஞாயிறுக்கிழமை திருமணம் முடிந்த பின்னரே சிகிச்சை பெற்றதாகவும் தெரிய வருகிறது. இந்நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை காலையில் வீட்டில் மயங்கி விழுந்துள்ளார். உடனடியாக அவரை மீட்ட உறவினர்கள் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்கு கொண்டு சென்ற போதிலும் ஏற்கெனவே அவரது உயிர் பிரிந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டு மரண விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-30)

# நிர்ஜலா ஏகாதசி



மாசி மாதம் 16.02.2019 ஏகாதசி நிர்ஜலா ஏகாதசி எனப்படும்.

ஒருமுறை வேதவியாசரிடம் தருமர் ஏகாதசி விர தத்தின் பெருமையைக் கேட்டுக் கொண்டிருந்தார். அப்போது அங்குவந்த பீமன, முனி சிரேஷ்டரே, தாங்கள் கூறிய விரதத்தை என் குடும்பத்தார் வேண்டுமானால் கடைப்பிடிக்கலாம். ஆனால் என்னால் இயலாது. காரணம் என் வயிற்றில் விருகம் என்ற அக்கினி உள்ளது. அதனால் அளவில்லாமல் உணவு உண்டால்தான் என் பசி அடங்கும்.

எனவே நான் எல்லா ஏகாதசி அன்றும் விரதம் அனுஷ்டிக்க முடியாவிட்டாலும் ஏதேனும் ஒரு ஏகாதசியாவது ஆண்டிற்கொருமுறை விரதம் இருக்க விரும்புகிறேன். அந்த ஒரு ஏகாதசி விரதத்தின் பலனே ஆண்டு முழுவதும் வரும் ஏகாதசிகளின் விரத பலனாகக் கிடைக்கும்படி ஏதேனும் உபாயம் கூறுங்கள் என்று வேண்டினான்.

வியாசரும் அவனை நிர்ஜலா ஏகாதசியன்று நீர்கூட அருந்தாதவாறு விரதம் அனுஷ்டிக்குமாறு கூறினார். அவ்வாறே பீமன் இதை அனுஷ்டித்து அனைத்து ஏகாதசிகளில் விரதமிருந்த பலனைப் பெற்றான்.இந்த ஏகாதசி விரதம் பீம ஏகாதசி விரதம் என்றும் அழைக்கப்படுகிறது.

**இரா.வெங்கடகிருஷ்ணன்**

# அமைச்சரால் மட்டும் போக்குவரத்துச் சபையை கட்டியெழுப்ப முடியாது

## அர்ஜூன யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் போக்குவரத்துச் சபை மூலம் பொதுமக்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதற்கு அனைத்து ஊழியர்களும்முன்வர வேண்டுமெனப் போக்குவரத்து அமைச்சர் அர்ஜூன ரணதுங்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்ட அமைச்சர் கோண்டாவிலில் அமைந்துள்ள யாழ். சாலைகளின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்விலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விஜயத்தின் போது போக்குவரத்துச் சேவையிலுள்ள குறைபாடுகள் தொடர்பில் கேட்டறிந்ததுடன் அமைச்சர் ஒருவரால் இலங்கைப் போக்குவரத்துச் சேவையை வினைத்திறனாக்க முடியாதெனவும் அனைத்து ஊழியர்களும் இதற்காக ஒத்துழைக்க வேணடுமெனவும் தெரிவித்தார்.

கடந்த வருடம் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடமாகாண தொழிற்சங்கங்கள் நடத்திய போராட்டங்கள் தொடர்பில் தாம் அறிந்ததாகவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது மிக நீண்டகாலமாக ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிய யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர் ஆகிய சாலைகளைச் சேர்ந்த ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டதோடு பதவியுயர்வு வழங்காத குறித்த சாலைகளைச் சேர்ந்த ஊழியர்களுக்கும் பதவியுயர்வும் வழங்கப்பட்டது.(இ-10)

# சுதந்திரக் கட்சியின்றி பொதுஜன பெரமுனவின் வெற்றி சாத்தியமில்லை

## பசிலுக்கு எதிராக கம்மன்பில

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 42 வீத வாக்குகளை மட்டுமே பெற முடிந்ததாகவும் இதனால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி அமைக்காது வெற்றியை எதிர்பார்க்க முடியாது எனவும் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கூட்டணி அமைப்பதற்கு எதிராக எவராவது பேசுவாராயின் அது ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றி பெற செய்யும் உடன்பாட்டை நிறைவேற்றுதல் மட்டுமே எனவும் அவர் தெரிவித்தார்.

தேசியவாத மற்றும் இடதுசாரி அணியில் வெற்றி பெறக்கூடிய வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ என அடையாளம் காணப்பட்டாலும் அனைத்து கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் வேட்பாளர் குறித்து தீர்மானிக்கப்படும் எனவும் உதய கம்மன்பில தெரிவித்தார்.

எது எப்படி இருந்த போதிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் துணையின்றி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினால் வெற்றி பெற முடியும் என முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ அண்மையில் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர்அழுத்த மற்றும்தாழ் அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட்ட மைப்பு மற்றும் பராமரிப்புவேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 5.30 மணிவரை யாழ்.பிரதேசத்தில் அச்சுவேலி, தோப்பு, ஒரு பகுதி, செல்வநாயகபுரம், வசாவிளான், கதிரிப்பாய், தம்பாலை, இடைக்காடு, வளலாய், விஜிதா மில், அச்சுவேலி கைத்தொழிற் பேட்டை, ஈவினை, சுதந்திரபுரம், குட்டியப்புலம், நிலாவரை, சிறுப்பிட்டி, புத்தூர், வீரவாணி, ஊறணி, வாதரவத்தை, ஆவரங்கால், பெரிய பொக்கணை, பூதர் மடம், கோப்பாய், இருபாலை, வசந்தபுரம், கட்டைப்பிராய், இலங்கநாயகி, ஆடியபாதம் வீதி, நல்லூர், கல்வியங்காடு, திருநெல்வேலி ஒரு பகுதி, திருநெல்வேலி சந்தை பிரதேசம், திருநெல்வேலி பாற்பண்ணை பிரதேசம், இராமலிங்கம் ஆடியபாதம் வீதி சந்தி, முகாமைத்துவ பீடம், கோப்பாய் இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில பட்டாணிச்சூர் கிராமம், லக்ஸபானா வீதி, தோணிக்கல் ஆகிய இடங்களிலும், மன்னார் பிரதேசத்தில் ஆத்திக்குழி, அச்சங்குளம், எருவிட்டான், அறுகுகுன்று, அளவக்கை, மாவிலங்கேணி, வாழ்க்கை பட்டான்கண்டல், பல்லங்கோட்டை, பண்டாரிகுளம், நானாட்டான், உமணகிரி, நறுவிலிக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- உன்னால் ஒருவருக்கும் உதவி செய்ய முடியாது. மாறாக உன்னால் சேவை தான் செய்ய முடியும். உயிர்களுக்கு தொண்டு செய்பவன் கடவுளுக்கே தொண்டு செய்தவன் ஆவான்.
- நீ செல்லும் பாதை, கத்தி முனையில் நடப்பது போல மிகவும் கடினமானது தான் என்றாலும், மனம் தளராமல் குறிக்கோளை நோக்கி முன்னேறு.
- தோல்வியைத் தழுவி உயிர்வாழ்வதை விடப் போர்க்களத்தில் மாய்வதே மேல்.
- மக்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும். நீ உனது சொந்த உறுதியான முடிவில் பிடிப்புடன் இரு. பிறகு நிச்சயமாக மற்றவை நடந்தேறி உலகம் உனது காலடியில் பணிந்து கிடக்கும்.
- ஒரு கருத்தை எடுத்துக் கொள். அந்த ஒரு கருத்தையே உனது வாழ்க்கை மயமாக்கு. அதையே கனவு காண். மூளை, தசை, நரம்பு என உடலின் ஒவ்வொரு பாகத்திலும் அந்த ஒரு கருத்தே நிறைந்திருக்கட்டும்.
- எது வந்தாலும் போராடிக் கொண்டிரு. கோழையாவதனால் நீ எந்த ஒரு பயனையும் பெற மாட்டாய்.

# திருகுமரன்-லஜிதன் ஞாபகார்த்த கரப்பந்தாட்டத் தொடர் ஆரம்பம்

அளவெட்டி மத்தி விளையாட்டுக்கழகம் மறைந்த முன்னாள் வீரர்களான திருகுமரன், லஜிதன் ஆகியோர் ஞாபகார்த்தமாக வடமாகாண ரீதியாக நடத்தும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக சமூக திலகம் லயன். கிருபாகரன் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக (வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் பொ.ஆதவன், ஜே/218 கிராம சேவகர்களான சயுரிதிகா அருந்தவநேசன், சிவகுமாரி மதிசீலன், கௌரவ விருந்தினர்களாக வி.விஜயகுலசிங்கம், தே.வஜிந்தன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அன்றயதினம் இடம்பெறவுள்ள முதல் போட்டியில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து புத்தூர் சென்றல் ஸ்ரார் விளையாட்டுக்கழகம மோதவுள்ளது. (க)

# கரப்பந்தாட்ட அணிகள் தவறாது சமுகம் தரவும்

அரியாலை சுதேசிய விழாவின் 100 ஆண்டு முன்னோடி போட்டிகளின் ஆண், பெண்களுக்கான கூடைப்பந்தாட்ட போட்டிகளுக்கான போட்டி அட்டவணை தயாரித்தலும் கலந்துரையாடலும் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

போட்டியில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் தலைவர்களை சமுகமளிக்குமாறு விழா ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க)

# அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட யாழ். மாவட்ட ரீதியிலான கரப்பந்தாட்ட முடிவுகள்



அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடத்தப்படும் யாழ்.மாவட்ட ரீதியான கரப்பந்தாட்டத்தொடரின் முதலாவது போட்டியில் மட்டுவில் மோகன்தாஸ் அணி நாயன்மார்கட்டு பாரதி அணியை 29:27, 25:19 என்ற ரீதியிலும் 2 ஆவது போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி அரியாலை ஐக்கிய அணியை 25:22, 25:18 என்ற ரீதியிலும் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது. (க)

வலம்புரி SPORTS

# இலங்கையுடனான டெஸ்ட் ஸ்டெய்ன் படைத்த சாதனை



தென்னாபிரிக்கா-இலங்கை அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டியில், தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் டேல் ஸ்டெய்ன் அபார சாதனை படைத்துள்ளார். இலங்கை அணி தற்போது தென்னாபிரிக்காவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் டர்பனில் தொடங்கியது. தென்னாபிரிக்க அணி 235 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்த நிலையில், 2 ஆவது நாளில் இலங்கை அணி முதல் இன்னிங்சில் 191 ஓட்டங்களுக்கு சுருண்டது.

தென்னாபிரிக்காவின் வேகப்பந்து வீச்சாளரான டேல் ஸ்டெய்ன் இந்த இன்னிங்சில் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இதன்மூலம் 437 விக்கெட்டுகளை டெஸ்டில் கைப்பற்றியுள்ளார். இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஸ்டூவர்ட் பிராட் 125 போட்டிகளில் 436 விக்கெட்டுகளையும் இந்திய முன்னாள் வீரர் கபில்தேவ் 131 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 434 விக்கெட்டுகள் கைப்பற்றியுள்ளனர்.

ஆனால் ஸ்டெய்ன் 92 டெஸ்ட் போட்டிகளில் தற்போது 437 விக்கெட்டுகள் கைப்பற்றியதன் மூலம் அவர்களது சாதனையை முறியடித்துள்ளார். இதன்மூலம் அதிக டெஸ்ட் விக்கெட்டுகள் கைப்பற்றிய வீரர்களில் 4 ஆவது இடத்தையும் ஒட்டுமொத்தமாக அதிக விக்கெட்டுகள் வீழ்த்தியவர்களில் 7 ஆவது இடத்தையும் பிடித்துள்ளார். (க)

# இலங்கை வலைப்பந்தாட்ட வீராங்கனைகளுக்கு புதிய வீடுகள் வழங்கி வைப்பு

2018 ஆம் ஆண்டின் ஆசிய வலைப்பந்தாட்ட சம்பியனான இலங்கை அணியின் நட்சத்திர வீராங்கனைகளான தர்ஜினி சிவலிங்கம் மற்றும் எழிலேந்தினி சேதுகாவலன் உட்பட 12 வீராங்கனைகளுக்கும் புதிய வீடுகள் வழங்கி வைக்கப்பட்டன.

வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சினால் மொறட்டுவயில் அமைக்கப்பட்ட சாயுராபுர வீடமைப்பு வளாகத்திலேயே இந்த 12 வீடுகளும் சம்பியன் இலங்கை அணியின் வீராங்கனைகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் சஜித் பிரேமதாசவால் இந்த வீடுகள் கையளிக்கப்பட்டன.

2018 ஆம் ஆண்டு செப்டெம்பரில் சிங்கப்பூரில் ஆசிய சம்பியன்ஷிப் வலைப்பந்தாட்டத் தொடர் நடைபெற்றது.

இறுதிப் போட்டி சிங்கப்பூரின் ஸ்போர்ட்ஸ் ஹப் உள்ளக விளையாட்டரங்கில் செப்டெம்பர் 9 ஆம் திகதி நடைபெற்றது.

இதில் இலங்கை அணி 69-50 என்ற புள்ளிகள் அடிப்படையில் சிங்கப்பூர் அணியை



வீழ்த்தி 5 ஆவது முறையாகவும் சம்பியின் பட்டத்தை சுவீகரித்துக் கொண்டுள்ளது.

இலங்கை வலைப்பந்தாட்ட அணியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த தர்ஷினி சிவலிங்கம் மற்றும் எழிலேந்தினி சேதுகாவலன் ஆகிய இரண்டு வீராங்கனைகள் இடம் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# மேற்கிந்தியத்தீவு வீரருக்கு ஐ.சி.சி.விதித்த தடை



இங்கிலாந்து தலைவரை மோசமாக திட்டியதற்காக தடை விதிக்கப்பட்டுள்ள ஷனன் கேப்ரியல் மன்னிப்பு கேட்டுக் கொண்டார்.

செயிண்ட் லூசியாவில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான 3 ஆவது டெஸ்ட் போட்டியில், மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரர் ஷனன் கேப்ரியல், இங்கிலாந்து தலைவா் ஜோ ரூட்டை தகாத வார்த்தைகளால் திட்டியதற்காக நான்கு போட்டிகளில் விளையாட தடை விதித்து ஐசிசி நடவடிக்கை மேற்கொண்டது.

இதுகுறித்து ஷனன் கேப்ரியல் கூறுகையில்,

அந்த நேரத்தில் அழுத்தம் அதிகமாக இருந்தது. ஜோ ரூட்டும் என்னை ஆழமாகப் பார்த்தார். இது அனைவரும் பயன்படுத்தும் உத்திதான். அந்நேரத்திலேயே வார்த்தை பரிமாற்றம் நடந்தது.

நான் நீங்கள் ஆண்கள் பிரியரா? என கேட்டதும், தன் பாலின நாட்டமுடையவராக இருப்பதில் தவறில்லை என பதிலளித்தார்.

அதற்கு நான், அதுபற்றி எனக்கு பிரச்சினையில்லை. ஆனால் புன்னகையிருப்பதை நிறுத்த வேண்டும் எனக் கூறினேன் என தெரிவித்துள்ளார்.

மேலும் இதற்காக ஷனன் கேப்ரியல் மன்னிப்பும் கேட்டுக் கொண்டுள்ளார். (க)

# டோனி போன்று செயற்படவில்லை தினேஷ் கார்த்திக் விளக்கம்

நியூசிலாந்து அணிக்கெதிரான மூன்றாவது இருபது-20 போட்டியின், இக்கட்டான சூழ்நிலையில் தான் ஏன் ஓட்டம் ஓடவில்லை என்று தமிழக வீரர் தினேஷ் கார்த்திக் விளக்கமளித்துள்ளார்.

நியூசிலாந்து அணிக்கெதிரான வாழ்வா?சாவா? என்ற மூன்றாவது இருபது-20 போட்டியின் கடைசி ஓவரில் இந்திய அணியின் வெற்றிக்கு 16 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

அந்த ஓவரின் மூன்றாவது பந்தை அடித்த தினேஷ் கார்த்திக் ஒரு ஓட்டம் எடுப்பதை தவிர்த்தார். இதனால் அந்தப் போட்டியில், நியூசிலாந்து அணி 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது.

அந்த நேரத்தில் குர்ணால் பாண்ட்யாவும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்ததால், பாண்ட்யாவுக்கு வாய்ப்பு கொடுத்திருக்கலாம் என்று சமூக வலைத்தளங்களில் அவருக்கு எதிராக விமர்சனம் எழுந்தது.

இதையடுத்து இது குறித்து தினேஷ் கார்த்திக் கூறுகையில்,

கடினமான சூழ்நிலையில் நானும், குர்ணல் பாண்ட்யாவும் பேட் செய்து கொண்டிருந்தோம்.

அப்போது என்னால் சிக்ஸர் அடிக்க முடியும் என்ற நம்பிக்கை இருந்ததால், நான் ஓட்டம் ஓடவில்லை. அதனாலேயே கடைசி ஓவரில் சிங்கிள் எடுப்பதை நான் தவிர்த்தேன். அந்தச் சூழலைத் திறமையாக எதிர்கொள்ள முடியும் என்று நாங்கள் நம்பினோம்.

ஆனால் துரதிர்ஷ்டம் தோல்வி எமக்குக் கிடைத்துவிட்டது. (க)

## யாழ்ப்பாண கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கம் நடத்தும் வருடாந்தம் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் கனகரத்தினம் ம.ம.வித்தியாலயத்தில் யாழ்ப்பாண கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்க தலைவர் இ.சிறிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டமானது காலை 10.00 மணிக்கு நடைபெறவிருந்த நிலையில் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்பகல் 2.30 மணிக்கு மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# இலங்கையின் பொருளாதாரம் இவ்வருடம் வீழ்ச்சி காணும்

## உலகவங்கி எச்சரிக்கை

(கொழும்பு)

2019ஆம் ஆண்டு, இலங்கையின் பொருளாதார வளர்ச்சி கடந்த ஆண்டு கணிக்கப்பட்டதை விட, சற்று அதிகமாக இருக்கும் என்று உலக வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை அபிவிருத்தி தொடர்பாக உலக வங்கி வெளியிட்டுள்ள பிந்திய அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 3.1 வீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டது. எனினும், இந்த ஆண்டு வளர்ச்சி 3.5 வீதமாக அதிகரிக்கும்.

எனினும், அதிகளவு கடன் மீளளிப்பு, பூகோள நெருக்கடிகள், தேர்தல்களால் ஏற்படக் கூடிய அரசியல் உறுதியற்ற நிலை போன்றவற்றினால், இலங்கை கடுமையான நெருக்கடிகளை இந்த ஆண்டு எதிர்கொள்ள நேரிடும் என்றும் அந்த அறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## தமிழ் மக்களுக்கான...

யும் ஏமாற்றுவதை எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு என்பது எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷவை பொறுத்தவரையில் ஒரு அரசியல் பிரசாரமே.

இவர்கள் ஒருபோதும் சமவுடையமையான அரசியல் கொள்கைகளை பின்பற்றமாட்டார்கள். ஆகவே பொய்யான வாக்குறுதிகளை குறிப்பிடுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

அத்துடன் நாடு பிளவுப்படும் வகையில் எவ்விதமான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை. புதிய அரசியலமைப்பின் ஊடாக தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்கப்படவேண்டும்.

அரசியல் ரீதியில் தமிழ் மக்கள் காலம் காலமாக பிரித்தாளப்பட்டுள்ளனர் என்ற விடயத்தை அனைவரும் ஏற்றுக்கொள்ளவே வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ம-3)

## தலைமன்னார், காங்கேசன்துறையிலிருந்து...

நடைபெற்றது.

மன்னார் நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற இவ் விழாவில் கலந்து கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

நான் இந்த ஆட்சியை கைப்பற்றியபின் முதன்முதலாக இப் பகுதிக்கு வருகைதந்துள்ளேன். நேற்று முன்தினம் நான் யாழ்ப்பாணத்துக்குச் சென்றேன் நாளை (இன்று) முல்லைத்தீவு மாட்டத்துக்கு செல்ல இருக்கின்றேன்.

நான்தற்பொழுது மன்னார்மாவட்டத்தின் அபிவிருத்தி விடயமாக கலந்தாலோசிக்கவந்துள்ளளேன். இந்த மக்கள் எனக்கு தந்த ஆதரவை நான் ஒருபோதும் மறக்கமுடியாது.

ஆகவே நான் இந்த நாட்டின் வடபகுதிக்கான அபிவிருத்திக்காக பாடுபடுவதுடன் எம் மத்தியில் ஒற்றுமையான சகோதரத்துவத்தை கட்டியெழுப்புவதற்கானமுயற்சியை மேற்கொள்வேன் என்பதை இந்த சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகின்றேன். ஆகவே நாம் அனைவரும் இந்த நாட்டிலே ஒற்றுமையுடன் ஒரே எண்ணம் கொண்டவர்களாக இருக்கின்றோம். இதற்காக அமைச்சர் றிசாட் பாரிய உதவி புரிந்தமைக்கு நான் அவருக்கு எனது வாழ்த்துக்களையும் தெரிவித்து அவரை நான் போற்றுகின்றேன்.

இப்பொழுது நமக்கு இருக்கின்ற பிரச்சினை இந்த நாட்டை நாம் அபிவிருத்தியில்முன்னுக்கு கொண்டு செல்ல வேண்டியுள்ளது. ஆகவே தான் இந்த நாட்டிலுள்ள வடக்கையும் எப்படி அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதை ஆராய்ந்து வருகின்றோம்.

யாழ்ப்பாணம் இந்த நாட்டிலே ஒரு முக்கியமான பிரதேசம். யுத்தத்துக்கு பிற்பாடு வடக்கு பகுதியை நாங்கள் அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது.

தெற்கு பகுதியை நாங்கள் அபிவிருத்தி செய்வதற்காக கப்பல் துறையை அபிவிருத்தி செய்கின்றோம். இத் துறையையும் தொழில் துறையையும் நாங்கள் அபிவிருத்தி செய்வதற்கு பல அர்ப்பணிப்புக்களை செய்து வருகின்றோம். இதற்காக நாங்கள் அதிகமான பணங்களை செலவிட்டு வருகின்றோம். இதற்காக பெற்றக் கடனை சீர் செய்வதற்கு நாங்கள் நேர்மையான முறையில் செயல்பட வேண்டிய அவசியம் எங்களுக்கு இருக்கின்றது.

நாங்கள் எப்படி தென்பகுதியை அபிவிருத்தி செய்கின்றோமோ அவ்வாறு யாழ்ப்பாணத்தையும் மன்னாரையும்இந்தவட மாகாணம் முழுவதையும் அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றோம். பலாலி விமான நிலையத்தை நாங்கள் பாரிய விமான நிலையமாக மாற்றி இந்த நாட்டின் ஒரு முக்கிய விமான நிலையமாக மாற்றுவதற்கு இருக்கின்றோம்.

இவ்வாறு காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்து றிசாட் பதியுதீனின் அமைச்சின் தொழில் நிறுவனமான சீமெந்து தொழிற்சாலையை அபிவிருத்தி செய்ய திட்டங்கள் தீட்டி வருகின்றோம்.

ஆகவே நாங்கள் அவ்விடத்தை ஒரு தொழில் அமைக்கும் கிராமமாகவும் சுற்றுலா பயணிகளுக்கான ஒரு இடமாகவும் அமைக்க இருக்கின்றோம். நாங்கள் தலைமன்னாரிலிருந்து தமிழ் நாட்டுக்கான கப்பல் சேவையையும் இவ்வாறு காங்கேசன்துறையிலிருந்து தமிழ் நாட்டுக்கான கப்பல் சேவைகளை நடத்த இருக்கின்றோம் என்ற நற்செய்தியை உங்களுக்கு இவ்விடத்தில் கூறிக்கொள்ளுகின்றோம்.

தலைமன்னார் துறை முகத்தை நாங்கள் மக்கள் போக்குவரத்துக்கு மட்டுமல்லாமல் அதை ஒரு சிறந்த கைத்தொழில் மையமாக அமைப்பதற்கும் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

நாங்கள் இந்தியாவுடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டு மன்னார், வவுனியா, திருகோணமலைகளுக்கான பாரிய அபிவிருத்திகளை செய்வதற்கான ஏற்பாடுகளைமேற்கொள்வேன் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நாங்கள் யாழ்ப்பாணத்தை அபிவிருத்தி செய்வதனூடாக சுற்றுலா துறையைமேம்படுத்தும் ஓர் இடமாக மாற்றுவோம். தம்புள்ள பகுதி மக்கள் கட்டுநாயக்காவை பயன்படுத்துவதைவிட பலாலி விமான நிலையத்தை பயன்படுத்தும் நிலையை உருவாக்குவோம். நாங்கள் அமைச்சர் றிசாட்டுடன் கலந்தாலோசித்துள்ளோம். மன்னாரை ஒரு சுற்றுல்லா மையமாக அமைப்பதற்கு மன்னார் கோட்டையை நாங்கள் அபிவிருத்தி செய்வதற்காக நடவடிக்கை எடுத்துள்ளளோம்.

மன்னார், பூநகரி பிரதேசங்களில் நாங்கள் மீனவகிராமங்களை அமைத்து மீன்பிடியையும் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய இருக்கின்றோம். நாங்கள் படகுகள் மூலமாக மன்னாரிலிருந்து காங்கேசன்துறைக்கும் இங்கிருந்துயாழ்ப்பாணம் சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் செல்லும் சுற்றுலா துறையை மேம்படுத்தும் திட்டங்களையும் மேற்கொள்ள இருக்கின்றோம்.

நான் எனது அதிகாரிகளுக்கு இன்று (நேற்று) பணித்துள்ளேன் மன்னார் மாவட்ட மீனவர்களுக்கான பாரியதிட்டத்தை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுள்ளேன். சிறந்த கடல் வளம் கொண்ட இவ் பிரதேசத்தை நன்கு அபிவிருத்தி கொண்ட மாவட்டமாக இந்த நாட்டின் அபிவிருத்தியின் ஒரு பங்காளி மாவட்டமாகமாற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள நான் பணித்துள்ளேன்.

இப்பகுதியிலுள்ள விவசாய குளங்களை அபிவிருத்தி செய்ய இருக்கின்றோம்.

இவ்வாறு மன்னார் பகுதியில் பனை, தென்னை அபிவிருத்திகளை முன்னெடுக்க இருக்கின்றோம்.

இந்த ஆண்டுக்குள் 1300 வீட்டுத்திட்டங்களை மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ள இருக்கின்றோம். அத்துடன் அடுத்த ஆண்டும் இதற்கு மேலாகவீட்டுத் திட்டங்களை வழங்க இருக்கின்றோம்.

தற்பொழுது இராணுவம் பிடித்து வைத்திருக்கின்ற காணிகளை இன்னும் அதிகமாகவிடுவிப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும். பட்டத்தாரிகளுக்கான வேலை வாய்ப்புக்களை வழங்கவிருக்கின்றேன். வருகின்ற மாதத்திலே எங்களது அபிவிருத்திகளை நீங்கள் காண்பீர்கள்.

அதன்பின் உங்களுக்கு தெரிய வரும் எங்களது அபிவிருத்தி திட்டங்களைப்பற்றி என தெரிவித்தார். (ம-285)

## அசமந்த போக்குடன்...

விடின் அவற்றை அரசாங்கத்திடம் ஒப்படைக்குமாறும் தெரிவித்தார்.

வடக்கில் உள்ள மக்களிற்கு பல்வேறு விடயங்களை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். இவர்கள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள். யுத்தத்தினால் இலங்கையில் உள்ள அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எமது கட்சியின் தலைவர் கொல்லப்பட்டார். பலரும் எமது கட்சியிலிருந்து கொலை செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் இறந்தமையால்தான் நான் இன்று இந்த கதிரையில் அமர்ந்துள்ளேன் என அவர் குறிப்பிட்டிருந்தார்.

வடக்கின் அபிவிருத்தி விடயங்கள் தொடர்பிலும், இலங்கையர் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் எனவும் அவர் இதன் போது தெரிவித்திருந்தார்.

யுத்தத்தினால் பல்வேறு இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இதன் போது இரு பகுதியினரும் இறந்துள்ளனர். அப்பாவி மக்களும் இறந்துள்ளனர் என்றார். (ம-3)

## பொய் வாக்குறுதியை...

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பொதுமக்களின் நன்மைக்காக ஒன்றும் தேசிய அரசாங்கம் அமைப்பதற்கான முயற்சிகளை ஐக்கிய தேசிய கட்சி மேற்கொள்ளவில்லை.

கட்சியில் தற்போது ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை தீர்த்துக்கொள்ளவே இந்த அரசியலமைப்பிற்கு முரணான செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது.

இம்மாதம் 20ஆம் திகதி தேசிய அரசாங்கம் நிச்சயம் உருவாக்கம் பெறும் என்று ஐக்கிய தேசிய கட்சியினர் குறிப்பிடுவது பொய்யான வாதமாகும். இந்த பாராளுமன்றத்தில் ஒருபோதும் தேசிய அரசாங்கம் ஒன்று உருவாகுவதற்கு எவ்விதத்திலும் இடமளிக்க மாட்டோம்.

இதற்காக எந்நிலைக்கும் செல்லத் தயார். எதிர்வரும் தேர்தல்களில் வெற்றிபெறுவதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பொய்யான வாக்குறுதிகளை இளைஞர்களுக்கு வழங்க ஆரம்பித்து விட்டார்.

இளைஞர்களை மையப்படுத்தியே தேசிய பொருளாதார கொள்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என குறிப்பிடுவர். ஆனால் வேலையில்லா பட்டதாரிகளின் கோரிக்கைகளுக்கு இதுவரையில் தீர்வை காண நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## கைபேசியை...

சத்திர சிகிச்சை பிரிவு நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்விலேயே பிரதமரின் செயலாளரின் 55,000 ரூபாய் பெறுமதியான தொலைபேசி திருடப்பட்டுள்ளது.

இத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் செய்து கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் நேற்றையதினம் யாழ்.நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ததுடன் திருடப்பட்ட தொலைபேசியிலிருந்த சிம்மின் மூலம் தொலைபேசி இருக்குமிடத்தினை அறிந்து கொள்ள முடியும் என்பதால், அது தொடர்பான தகவல்களை வலையமைப்பு நிறுவனத்தை வழங்கும்படி உத்தரவிடுமாறு பொலிஸார் நீதிவானிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

இதனையடுத்து நீதிமன்றம் அதற்கான கட்டளை வழங்கியது. இந்நிலையில் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

### தன நிதானய

திகதி 2019-02-15
சீட்டிழுப்பு இலக்கம் 115
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 15 45 80 82

### மஹஜன சம்பத

திகதி 2019/02/15
சீட்டிழுப்பு இலக்கம் 3856
ஆங்கில எழுத்து S
வெல்லப்பட்ட இலக்கங்கள் 9 2 7 8 6 8

தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

திகதி 2019.02.15
சீட்டிழுப்பு இலக்கம் 2036
ஆங்கில எழுத்து W
வெல்லப்பட்ட இலக்கங்கள் 03 52 64 70

தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 15/02/2019
சீட்டிழுப்பு இலக்கம் 345
வெற்றி எழுத்து L
சுப்பர் இலக்க 18
வெற்றி இலக்கங்கள் 05 27 53 79

## சாவகச்சேரியில்...

இளைஞனை வழிமறித்து சரமாரியாக கத்தியினால் குத்திவிட்டு தப்பிச்சென்றுள் ளனர்.

இதனால் வயிற்றில் இருந்து குடல் வெளி யேறிய நிலையில் படுகாயமடைந்த இளை ஞன் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட் டுள்ளார். (ம-89)

## விக்னேஸ்வரனு...

நேற்று அழைக்கப்பட்ட போது இவ்வாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண மீன் பிடித்துறை அமை ச்சராக இருந்த டெனீஸ்வரன் மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு, அவரை அந்த அமைச்சு பதவியில் இருந்து நீக்க விக்னேஸ் வரன் நடவடிக்கை எடுத்திருந்தார்.

இதனையடுத்து முதலமைச்சரின் தீர்மா னத்தை ரத்துச் செய்யும் உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு கோரி டெனீஸ்வரன் மேன் முறையீடு செய்திருந்தார்.

அதன்படி டெனீஸ்வரனை அமைச்சர் பதவியிலிருந்து நீக்குவதற்கு விக்னேஸ் வரன் எடுத்த தீர்மானத்துக்கு தடை உத்தரவு பிறப்பித்து மீண்டும் அவருக்கு அந்தப் பத வியை வழங்குமாறு மேன்முறையீட்டு நீதிம ன்றம் உத்தரவிட்டிருந்தது.

நீதிமன்றத்தின் அந்த உத்தரவை செயற் படுத்தாமை காரணமாக முதலமைச்சர் விக் னேஸ்வரன் நீதிமன்றத்தை அவமதித்ததாக கூறி வடக்கு மாகாண முன்னாள் மீன் பிடி த்துறை அமைச்சர் டெனீஸ்வரன் மனு தாக் கல் செய்திருந்தார். (ம-3)

## ஜெனிவா மாநாட்...

அங்கு செல்லவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கெனவே தமக்கு அரசாங்க விடுமுறை கிடைக்கும் பட்சத்தில் தாம் ஜெனிவா செல்ல எதிர்பார்த்திருப்பதாக வடமாகாண முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்தி ருந்தார்.

இதேவேளை நீதியரசர் சி.வி.விக்னேஸ் வரன் தலைமையில் தமிழ் மக்கள் பேரவை யின் சார்பில், விசேட அறிக்கை ஒன்று மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்பி வைக்கப் படவுள்ளதாக கூறப்படுகிறது.

அதேநேரம், காணாமல் போனோரின் உறவினர்கள் சார்பாகவும் விசேட குழு ஒன்று ஜெனிவா நோக்கி பயணிக்கவிருப்ப தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இலங்கை அரசாங்கத்தின் சார் பில் வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று ஜெனிவா நோக்கி பயணிக்கவிருப்பதாக கூறப்படுகிறது.

கடந்த 2015ம் ஆண்டு ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் அமுலாக்கத்துக்கான கால அவகாசம் நிறைவடைகிறது.

அத்துடன் இந்த முறை இலங்கையின் பொறுப்புக்கூறல், மறுசீரமைப்பு மற்றும் மனித உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையிலான புதிய பிரேரணை ஒன்று முன் வைக்கப்படும் என்று பிரித்தானிய அறிவித் துள்ளது.

இந்த நிலையில் எதிர்வரும் 40வது மனித உரிமைகள் பேரவையின் மாநாடு இலங்கைக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையவுள்ளது என்பது குறிப்பிடத்தக் கது. (ம-3)

## கசிப்பு ஒழிப்பு நட...

திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள் ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மனைவியைத் தாக்குகின்றனர். பொருட் களை நிலத்தில் வீசுகின்றனர். நோய்வாய்ப் படுகின்றனர். இதனால் பொருளாதாரம் வீழ் ச்சியடைகின்றது. பிச்சைக்காரர்களாக மாறு கின்றனர். இது தவறு என அவர்கள் அறிவா ர்கள். எனினும், தவறான விடயங்களை செய்து அழிந்து போகின்றனர் என ஜனாதி பதி சுட்டிக்காட்டினார்.

மதுவற்ற கிராமங்களை உருவாக்கத் தேவையான திட்டங்களை தயாரிக்குமாறு அமைச்சின் செயலாளர் மற்றும் பணிப்பாளர் நாயகத்திடம் தாம் வேண்டுகோள் விடுப்பதா கவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நுவரகல மகா வித்தியாலயத்தில் நிர்மா ணிக்கப்பட்ட இரண்டு மாடி கட்டட திறப்பு விழா நிகழ்விலேயே ஜனாதிபதி இவ்விடயங் களைக் குறிப்பிட்டார். (ம-3)

## புத்தர் சிலை நிறு...

வும் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த சிலை அமைப்பதற்கு தொல் பொருளாராய்ச்சி திணைக்களம் துணை போகிறது என்றும், இதை அனுமதிக்க முடி யாதென்றும் தெரிவித்துள்ளார்.

அத்தோடு நீதிமன்றத்தில் வழக்கு நடை பெறும் வேளையில் பௌத்த மதகுரு ஒருவர் எவ்வாறு அங்கே புத்தர் சிலையை அங்கு ரார்ப்பணம் செய்து வைத்தார் என பாராளு மன்ற உறுப்பினர் சுமந்திரன், தொல்பொரு ளாராய்ச்சி திணைக்கள பணிப்பாளரிடமும், திருகோணமலை பிரதேச பொலிஸ் அத்திய ட்சகரிடமும் கேள்வி எழுப்பியுள்ளார்.(ம-3)

## யுத்தத்தை மறந்...

அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. எனினும் அவற்றை பயன்படுத்தாமலிருப்பது சிறந்ததல்ல. வழங்கப்பட்டுள்ள அதிகாரங் களை பயன்படுத்த முடியாவிட்டால் அதனை அரசிடம் கையளியுங்கள்.

தென் மாகாண சபையினர் நிதி ஒதுக்கு மாறு கோரி அடிக்கடி எம்முடன் முரண்படுகி ன்றனர். தென் மாகாண சபையில் ஐக்கிய தேசியக் கட்சியினர் எதிர்க்கட்சியில் உள்ள போதிலும் இவ்வாறான விடயங்களை முன் னெடுக்கின்றனர்.

போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடரப்பட வேண்டிய வழக்குகள் அனைத்தும் போரில் ஈடுபட்ட இராணுவத்தினர் மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகள் என இரு தரப்பிலும் தொடரப்பட்டுள்ளன.

தற்போது உண்மையைக் கூறி, மன்னி ப்புக் கோரி அவற்றை நிறைவு செய்வதே வெற்றியாகும். கடந்த பத்து வருடங்களுக்கு முன்னரும் பாதுகாப்பு பிரிவினரே அனை த்து சேவைகளிலும் ஈடுபட்டிருந்தனர்.

எதிர்வரும் பத்து வருடங்களுக்குள் இந்த பிரச்சினைகள் அனைத்தும் நிறைவுக்கு வரும். இரு தரப்பினருக்கும் என்ன நடந்தது என்ற உண்மை வெளிப்படுத்தப்படும்.

அனைத்தையும் மன்னித்து ஏற்று நல்லி ணக்கத்தை ஏற்படுத்த வேண்டும். நாட்டை கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. நாட்டில் பல கடன் சுமைகள் காணப்படுகின்றன.

குறிப்பாக வடக்கை கட்டியெழுப்ப வேண டிய தேவை காணப்படுகின்றது. அதனை சீர்குலைக்க முடியாது. காரணம் எமக்கிடை யில் நல்லிணக்கம் காணப்படுகின்றது. எனவே நாம் பயமின்றி இவற்றுக்கு முகங்கொடுத்து சிறந்தவொரு பயணத்தை முன்னெடுக்க வேண்டும். தமிழ், சிங்களம், முஸ்லிம் என்ற பாகுபாடின்றி அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றார்.

இதேவேளை, இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறு ப்பினர்கள் மாவை சேனாதிராசா, எம்.ஏ. சுமந்திரன், சிவஞானம் சிறீதரன், தர்மலிங் கம் சித்தார்த்தன் ஆகியோரும் பங்கேற்றிரு ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கிளிநொச்சியில்...

ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வைத்தியசாலைக்கான அடிக்கல்லை பிரதமர் நாட்டுவார் என அறிவிக்கப்பட்ட போதும், அதை சிறீதரன் எம்.பியிடம் கொடு க்க, அவரே அடிக்கல் நாட்டினார்.

அடிக்கல் நாட்டும் நிகழ்வில் பிரதமர் மற் றும் அமைச்சர்கள், எம்.பிக்கள் வெட்டப்பட்ட குழிக்குள் இறங்கிய பின்னர், பிரதமர் அடிக் கல்லை நாட்டுவார் என அறிவிக்கப்பட்டது.

எனினும், யாரும் எதிர்பாராத விதமாக, கிளிநொச்சி நிகழ்வில் சிறீதரன்தான் அடிக் கல் நாட்ட வேண்டும் என குறிப்பிட்ட ரணில் விக்கிரமசிங்க, அவரை முன்னால் அழை த்து அடிக்கல் நாட்ட சொன்னார். அடிக்கல்லை தட்டிலிருந்து எடுத்த பிரதமர், சிறீதரனிடம் கொடுத்தார். சிறீதரன் வைத்தியசாலைக்கு அடிக்கல் நாட்டினார். (ம-3)


**விலங்குகள் விற்பனைக்கு**

♦50 நாட்கள் நிரம்பிய டோசன் பெண் நாய்க் குட்டிகள், ♦நல்லின வெள்ளையன் கோழி கள், ♦லவ்பேட்ஸ், ♦சடை முயல்கள்.

தொடர்பு: 077 297 6255

யாழ்ப்பாணம் (7644)

**தொழிற்பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பு**

இறக்குமதி மற்றும் மொத்த விற்பனையில் முன்னணியில் திகழும் DMEL நிறுவ னமானது புதிய பல கிளைகளை வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியில் ஆரம்பிக்கவு ள்ளது. வடக்கு: (மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா) கிழக்கு: (திரு கோணமலை, மட்டக்களப்பு)



தெரிவு செய்யப்படும் பதவி:
- விற்பனை பிரதிநிதி - 10, O/L
- மேற்பார்வையாளர் - O/L, A/L
- உதவி முகாமையாளர் - A/L, மேற்தகைமை
- முகாமையாளர் - A/L (3pass), மேற்தகைமை

தகைமையுடையோர் நேர்முகத்தேர்விலூடாக தெரிவு செய்யப்படுவர்.

குறிப்பு: தங்குமிட வசதியுண்டு. தொடர்புகளுக்கு:

076 212 1409, 077 298 6763 (7645)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

**விரைவு பொதிகள் சேவை**
**விசேட விலை குறைப்பு**



UK- 550 /-Kg
கனடா-900 /-Kg
ஜேர்மனி- 700 /-Kg
நெதர்லாந்து-700 /-Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240

V2 TRAVELS

●மானிப்பாய் ●யாழ்ப்பாணம் ●கிளிநொச்சி ●சாவகச்சேரி ●நெல்லியடி ●பருத்தித்துறை ●வல்வெட்டித்துறை

**போலந்து வேலைவாய்ப்பு**

கார் டிரைவர் (Saloon, Sedan or 4*4 வகை கார்கள்)

சம்பளம்: 800 - 1000 யூரோ

ரூ. 180,900 - ரூ.201,000 வரை

2 வருட பணி ஒப்பந்தம். நேர்முகத்தேர்வு விரைவில்.

Emerald Isle
Manpower & Travel Services
License No. 2268

077 00 38 215
021 221 9 221

221-1/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk

**கனடாவில் நிரந்தர குடியேறல்/வேலைவாய்ப்பு/கல்வி- கருத்தரங்கு**

Pilot Program - சிக்கலமான, குறுகிய காலத்தில் கனடாவிற்கான தயார்ப்படுத்தல்

2018 ல் A/L சித்தியடைந்தவர்களா? 3 தொடக்கம் 5 வருடங்களில் சரியான தயார்படுத்தல்களின் மூலம் கனடாவின் நிரந்தர பிரஜை ஆகலாம். கனடாவின் எந்தெந்த துறைகளில் வேலை வாய்ப்புக்கள் அதிகமுள்ளன அந்த இடங்களை அடைவதற்கு நீங்கள் என்ன படிக்க வேண்டும்

பெற்றோர்களின் வருகை வரவேற்கத்தக்கது.

கருத்தரங்கு நாள்
17-02-2019 ஞாயிற்றுக்கிழமை

V2 Travels
யாழ்ப்பாணம்
முற்பதிவு அவசியம்
0768226243

Saaruban Sivaratnam
Regulated Canadian Immigration Consultant
80 NASHDENE RD, E BLOCK SUITE 110 TORONTO ON M1V 5E4, CANADA

**உடனடி வேலைவாய்ப்பு**



இலங்கையின் முதற்தரம் வாய்ந்த கல்வி நிறுவனத்திற்கு கீழ்க்குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கு பணியாற்ற ஆண், பெண் இருபாலாரும் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

**இணைப்பாளர் (பெண் மாத்திரம்)**
- A/L
- தேர்ச்சியான ஆங்கில அறிவு (எழுதுதல் மற்றும் கதைத்தல்)
- கணனி அறிவு (MS Word and Excel)
- கவர்ச்சிகரமான சம்பளம் (பேசித்தீர்மானிக்கப்படும்)

**ஆசிரியர்கள்**
- (Kids Class) பெண்கள் மாத்திரம்
- (பகுதி நேர ஆசிரியர்கள்- சனி மட்டும்)
- கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
- உயர் ஆங்கில டிப்ளோமா அல்லது பட்டச் சான்றிதழை கொண்டிருத்தல் வேண்டும்.

**விரிவுரையாளர்**
- (முழுநேரம்) (ஆண், பெண் இருபாலாரும்)
- உயர் ஆங்கில டிப்ளோமா அல்லது பட்டச் சான்றிதழை கொண்டிருத்தல் வேண்டும்.
- கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

நீங்கள் விண்ணப்பிக்கும் பதவிக்குரிய பெயரைக் குறிப்பிட்டு இவ் மின்னஞ்சல் முகவரிக்கு சுய விபரக் கோவையை அனுப்பி வைக்கவும்.

British Way English Academy

தொடர்புகளுக்கு: 077 008 6303
jaffnabwea@gmail.com
முடிவுத்திகதி : 26.02.2019
HR. DIVISION


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.02.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.